தமிழ் இஸ்லாமிய மரபுகள்

முனைவர் அ. ஏகாம்பரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழில் இசுலாமிய மரபுகள்

முனைவர் ஆ. ஏகாம்பரம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : சீதக்காதி அறக்கட்டளைக் குழுவினர் அவர்கள்)

வரிசை எண் : 5 நாள்: 06.02.2014

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	தமிழில் இசுலாமிய மரபுகள்
ஆசிரியர்	:	முனைவர் ஆ. ஏகாம்பரம் உதவிப் பேராசிரியர் தமிழ் இலக்கியத் துறை சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை
பொதுப்பதிப்பாசிரியர்	:	முனைவர் சு. சுசீலா உதவிப் பேராசிரியர் தமிழ் மொழி (ம) மொழியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை-600 113
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை-600 113 தொலை பேசி எண். 044 - 22542992
வெளியீட்டு எண்	:	797
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2014
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டம்மி
எழுத்தின் அளவு	:	10 அளவு
பக்க எண்ணிக்கை	:	xii +108
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 60/- (ரூபாய் அறுபது மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீ சரவணா அச்சகம் 148, தம்புத் தெரு சென்னை-600 001 9444265471
பாடம்	:	இசுலாமிய இலக்கியம்

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை- 600 113

அணிந்துரை

தமிழில் சீறாப்புராணம் என்ற மிகச் சிறந்த காப்பியவகை தோன்றுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் சீதக்காதி. ஷைகு அப்துல் காதிறு என்றழைக்கப்பட்ட இவர் தமிழகத்தில் உள்ள கீழக்கரை என்ற ஊரில் வாழ்ந்தவர் (கி.பி.17 ஆம் நூற்றாண்டு).

கி.பி.13ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை தமிழில் பெருங்காப்பியம் எதுவும் தோன்றாத சூழலை 'செந்தமிழ்க் காப்பியம் தோன்றாக்காலம்' என்று எஸ். வையாபுரிப்பிள்ளை, மு.வ. போன்றோர் குறிப்பிடுவர். அத்தகு சூழலில் தமிழில் உள்ள இத்தேக்க நிலையைப் போக்குவார் போல், சீதக்காதி அவர்கள், உமறுப் புலவரை நோக்கி நபிகள் நாயகம் புகழைத் தமிழில் பாடச் சொல்லுமாறு பணித்தார். சீறாப்புராண உருவாக்கத்திற்கு சீதக்காதி எடுத்துக் கொண்ட முயற்சிகள் மிகப் பல.

தமிழில் பாரதி மரபு, பாரதிதாசன் மரபு என்ற கவிதை மரபுகளுக்கு முன்னோடியாகக் கம்பர் மரபு என்ற ஒரு நெடுநீள் புகழ்மரபு இருந்தது. அம்மரபில் கம்பரை அடுத்து வந்த புது மரபின் புது மலர்ச்சி கண்ட முதல்வராக உமறுப்புலவரைக் கருதலாம். எனினும் கம்பரும் சேக்கிழாரும் போற்றிய தமிழ் மரபையே உமறுப்புலவரும் தம் காப்பியத்தில் கையாண்டார். குறிப்பாக இவரது இக்காப்பியம் இசுலாமிய நெறி பேணும் காப்பியமாக இருந்தாலும் தமிழ்ப்பண்பாடு மற்றும் சங்க இலக்கிய மரபினின்று முற்றிலும் விலகவில்லை. கொடை குணத்தில் சங்ககால அரசர்கள் போலவே மிகச்சிறந்த வள்ளலாகவும் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்கும் புரவலராகவும் விளங்கியமையால் அவர் 'தமிழ் மரபு மன்னன் சீதக்காதி' என்று போற்றப்பெற்றார்.

'ஏழைகளின் பணமே சீமான்களிடமுள்ள செல்வமனைத்தும்' என்ற நபிகள் நாயகத்தின் நெறியைத் தலைமேற் கொண்டவரான வள்ளல், 'பசித்த வர்க்கத்தைப் படைத்த வர்க்கம் காப்பாற்ற கடமைப் பட்ட தென்பதே' என்ற சமத்துவ நெறியைக் கைக்கொண்டவராக விளங்கினார்.

கடையெழு வள்ளல்களுக்குப் பின்னர் வள்ளலில்லை என்கின்ற குறை தீர்க்கத் தோன்றிய இவரையொத்த வள்ளலைத் தமிழ் நிலம்

இதுவரை பெறவில்லை என்றளவிற்கு உயரிய ஈகைக் குணம் கொண்டவராகவும் விளங்கினார். ஆமணக்குச் செடிகளின் இலைகளைப் பார்த்த வள்ளல் அதன் தோற்றம், தன்னிடம் யாசித்து நிற்கும் மனிதர்களின் விரல்களைப் போல உள்ளன என்பதை உணர்ந்து இலைக்கொரு பொற்காசு வைத்து ஏழைகளின் பசித்துன்பம் போக்கியவர்.

ஆகவே தான் 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்ற பழமொழி எழுந்தது. தமிழகத்தில் வள்ளலார் என்று அழைக்கப்பெறும் இராமலிங்க அடிகளாருக்கு முன்னமேயே வாழ்ந்த வள்ளலாராக சீதக்காதியைக் கருதுவர். அதன் காரணமாகவே 'ஈட்டிய செல்வத்தையெல்லாம் நாட்டு மக்களுக்கு ஈவதே கடன் எனக் கொண்டு செயல்பட்டு வந்த முசுலீம் வணிகர்களின் மரபு அற்றுவிட ஆரம்பமாகியுள்ள காலம்' என்று சீதக்கதி வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுவர்.

இப்படி, தன்னிகரில்லா கொடை வள்ளலாகவும் பல அரிய இசுலாமியத் தமிழ் நூல்கள் தோன்றுவதற்கு மூலகர்த்தாவாகவும் விளங்கிய சீதக்காதியைப் பற்றிக் காலமும் இடமும் கருதி மிகச்சுருக்கமான அறிமுகத்தை மட்டுமே இங்கே கூற முடிந்தது. இசுலாமியம் தமிழுக்கு வழங்கிய இலக்கியக் கொடைகள் ஏராளம், ஆனால் அது குறித்தப் பதிவுகளை நம்முடைய தமிழிலக்கிய வரலாற்றில் மிக அரிதாகவே காணமுடிகின்றன. 1859 இல் வெளிவந்த கற்பிட்டி காசிச்செட்டியினுடைய தமிழ் புளூராக் (Tamil Plutarch) என்ற நூலில் இடம் பெற்றுள்ள 197 தமிழ் அறிஞர்களுள் ஒரு முசுலீம் தமிழ்ப் புலவர் கூட இல்லை என்பதும் 1916 இல் வெளிவந்த ஆ. குமாரசாமிப் புலவருடைய தமிழ்ப் புலவர் சரிதத்தில் உள்ள 2000 க்கும் மேற்பட்ட தமிழ் நூல்களில் முசுலீம் புலவர்கள் பற்றி ஒரு வரிகூட இல்லை என்பதும் இலங்கையைச் சேர்ந்த வி. செல்வநாயகம் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில் இசுலாமியத் தமிழுக்கு ஒன்றரைப் பக்கமே அளித்துள்ளனர் என்பதும் பீ. மு. அஜ்மல்கான் முன்வைக்கும் குற்றச்சாட்டாகும் (இசுலாமியத் தமிழ் சிற்றிலக்கியம், பக்.12-13)

தமிழிலக்கிய வரலாற்றின் வழி அறியலாகும் இவ்விடைவெளியை ஏதோ ஒரு புள்ளி விவரம் என்று கருதி ஒதுக்கிவிட முடியாது. மாறாக, தமிழ் இலக்கிய வரலாறு எழுதுபவர்களும், ஆராய்ச்சியாளர்களும், அறிஞர்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய இடமாகும்.

வள்ளல் சீதக்காதி பெயரில் அமைந்துள்ள இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவின் மூலமாக சில நூல்கள் வந்துள்ளன. அந்த வரிசையில்

2014ஆம் ஆண்டிற்கான இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறைப் பேராசிரியர் முனைவர் ஆ.ஏகாம்பரம் அவர்கள் நிகழ்த்தியுள்ளார். அவருடைய நூலை வெளிக்கொணர்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'தமிழில் இசுலாமிய மரபுகள்' என்ற பொருண்மையில் அமைந்த இந்நூலில் மிக அரிய வரலாற்றுச் செய்திகளையும் புதுமைகளையும் தமிழ் மரபுக்கும் இசுலாமிய மரபுக்கும் இடையேயான தெளிவான நீரோட்டத்தையும் பார்க்க முடிகின்றன.

இவ்வாறான அரிய நூல்கள் பல வெளிவருவதன் மூலம் தமிழுக்கும் இசுலாமியத்திற்கும் இடையேயான இடைவெளி அகன்று நல்லுறவு ஏற்படும். இத்தகைய நல்லதொரு முயற்சியில் ஈடுபட்ட நூலாசிரியர் மேலும் பல நல்ல நூல்களைத் தமிழ்ச் சமூகத்திற்கு வழங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவிற்கு மிகப் பொருத்தமான ஆய்வாளரைத் தெரிவு செய்து அறக்கட்டளையின் நோக்கத்தை நிறைவேற்றி நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பெறும் துணையாக இருந்து வரும் எங்கள் நிறுவனப் பேராசிரியையும் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவின் பொறுப்பாளருமான முனைவர் க.சுசீலா அம்மையார் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பள்ளிக் கல்வி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் மாண்புமிகு அமைச்சர் கே.சி.வீரமணி அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறக்கட்டளை நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் ஒளியச்சுக் கோர்வை செய்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

நூன்முகம்

இந்தியாவின் வடபுலத்திலிருந்து வைதீகம்,சமணம், பௌத்தம் போன்ற சமயங்களும் இந்தியாவிற்கு வெளியில் இருந்து கிறித்துவம், இசுலாமியம் போன்ற சமயங்களும் வந்தன. தமிழகத்திற்குச் சமயங்களின் அறிமுகம் என்பது ஏதோ வேற்று நாடுகளிலிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்பது பொருளல்ல. மாறாக, வெவ்வேறு காலகட்டங்களில் தமிழகத்தை ஆட்சி செய்த வேற்று இனத்தவர்களைப் பற்றிய அடையாளங்களாகும். இவ்வினக் கலப்பு மூலம் அந்தந்தச் சமயங்கள் வளர்ச்சிப் பெற்றதோடு அவர்கள் சார்ந்த சமயத்தால் தமிழும் வளர்ந்தது. தமிழைப் போற்ற வந்த பாரதி சுட்டும் “சமயந் தொறும் நின்ற தையள்” என்ற கருத்து ஈண்டு நினையத்தக்கது.

சமயத்தின் வழி போதிக்கப்பட்ட தத்துவங்கள், கொள்கைகள் மக்களிடையே ஈர்ப்பை ஏற்படுத்தியதால் அவை வெகுவாக மக்களைச் சென்றடைந்தன. இதன் மூலம் தமிழர்களின் சிந்தையிலும் செயலிலும் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. காதல், வீரம், ஈகை ஆகியனவற்றையே பெரிதும் போற்றி வந்த தமிழர்கள் அறத்தின் பக்கம் திரும்புவதற்குச் சமண, பௌத்த சமயங்கள் முக்கியக் காரணங்களாயின. இதன் விளைவாகத் தமிழில் திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு போன்ற புத்திலக்கியங்கள் தோன்றியதுடன் தமிழின் வளர்ச்சிக்கு சமணமும் பௌத்தமும் மிகப்பெரிய ஊன்றுகோலாகவும் இருந்துள்ளன.

தமிழ் இலக்கியங்களில் சமயங்களின் செல்வாக்கை மிகுதியும் பிரதிபலிக்கக் கூடிய இலக்கிய வகை தமிழ்க்காப்பியங்களாகும். கி.பி.2 முதல் கி.பி.18 வரை உள்ள எல்லாக் காப்பியங்களிலும் இதனைப் பார்க்க முடியும். குறிப்பாக, ஐம்பெருங்காப்பியம், ஐஞ்சிறுங்காப்பியம் என்ற பகுப்பு முறையும் அப்பகுப்பிற்குள் அடங்கும் காப்பியங்களும் சமண, பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது. அது போன்றே, கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு உள்ள காப்பியங்களில் சைவம், வைணவம், இசுலாமியம் மற்றும் கிறித்துவம் போன்ற சமயங்களின் தாக்கங்களைப் பார்க்கலாம்.

இது தவிர ஒரு காப்பியம் என்பது இப்படித்தான் இருக்கவேண்டும், அவற்றில் இன்னன்ன கூறுகள் இடம்பெறல் வேண்டும் என்ற வரையறைகள் எல்லாம் மிகவும் பிற்காலத்தில் ஏற்பட்டவையாகும். இதற்கு முன் இவ்வாறு இருந்தது என்று பொருள்

படும்படியாதலாலும் முன்னோர் வரலாற்றைக் கூறுவதாலும் பண்டையக் காப்பியங்களை 'இதிகாசம்' என்ற பெயரால் அழைக்கின்ற மரபும் தோன்றியது. காப்பியம் என்ற இலக்கிய வகையின் தோற்றப் பின்னணியை இந்தப் பின்புலத்தினூடாகவே புரிந்து கொள்ளல் வேண்டும்.

எனவே, முன்னோர்கள் வாழ்ந்த பழைய வரலாற்றைக் கூறுவதற்கேற்ற வடிவமாக இலக்கியச் சுவையின்றிக் கூறும் நீதிகளை விட, வாழ்ந்து சென்ற முன்னோர்களின் வாழ்வியலைக் காப்பியப் போக்கில் அமைத்து அதன் மூலம் நீதிகளைப் புகட்டினால் மனதில் ஆழமாக வேரூன்றச் செய்ய முடியும் என்ற அடிப்படையில் காவியங்கள் தோன்றின. பண்டைத் தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையை இந்தப் பின்புலத்திலேயே புரிந்து கொள்ளல் வேண்டும்.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்த இசுலாம் தன் மார்க்கத் தத்துவங்களையும் நபிகள் நாயகம் மற்றும் அவரைப் பின்பற்றி வந்த வலிமார்களுடைய வாழ்க்கை முறையையும் தமிழில் சொல்ல விழைந்ததன் காரணமாகத் தமிழில் இசுலாமியத் தமிழ்க்காப்பியங்கள் உருவாகின. சமணக் காப்பியங்களிலும் பௌத்தக் காப்பியங்களிலும் தத்தம் சமயக் கொள்கைகள் முதன்மையாக இருந்ததைக் காட்டிலும் அவற்றில் தமிழும், தமிழ்ப்பண்பாடும் உயர்வாகப் போற்றப்பட்டன. அதுபோலவே இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் சமயம் முதலிடம் பெற்றாலும் தமிழுக்கும் அதன் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. இசுலாமியத் தமிழ்ப்புலவர்களின், மக்களின் அடிநாதமாக ஒலிக்கக்கூடிய 'இசுலாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி; இலக்கியம் எங்கள் விழி' என்ற முப்பெரும் கருத்துக்களின் மொத்த உருவமே இசுலாமியத் தமிழிலக்கியம் என்ற கோட்பாட்டின் வழி அவர்களது தமிழுணர்வைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழில் சித்தர் இலக்கியம் போன்று இசுலாத்தில் சூஃபி தத்துவத்தை விளக்கும் நூல்கள் பல தோன்றின. தொல்காப்பியம் தொட்டு வழக்கில் இருந்து வந்த எல்லா வடிவச் சாயல்களிலும் இலக்கியம் படைத்த முசுலிம் தமிழ்ப்புலவர்கள் தமிழில் இல்லாத புதுவித இலக்கிய வடிவங்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினர். பாரசீக மொழி இலக்கிய வடிவமான நாமா,அரபு மொழி இலக்கிய வடிவங்களான கிஸ்ஸா, மசஅலா, முனாஜத்து ஆகியவற்றைத் தமிழ்

இலக்கண விதிமுறைக்குட்பட்டுத் தமிழ் இலக்கியங்களாகவே படைத்தனர்.

இது தவிர அதுவரை தமிழ் மரபில் இல்லாத படைப்போர், நொண்டி நாடகம்,திருமண வாழ்த்து மற்றும் அரபுத்தமிழ் ஆகிய புத்திலக்கிய வடிவங்களைத் தோற்றுவித்துத் தமிழைச் செழுமைப்படுத்தினர். அது போலவே இறுதியாக வந்த கிறித்துவமும் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் முக்கியப் பங்காற்றின.

இப்படிப் புறச்சமயங்களாலும் ஆட்சியாலும் தமிழுக்கு விளைந்த நன்மைகள் ஏராளம். ஆனால், அதன் பதிவுகள் குறித்தும் அதன் மீதான கவனம் குறித்தும் அக்கறை வரவில்லை. குறிப்பாக இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் குறித்தப் பதிவும் ஆய்வும் தமிழில் தொடக்க நிலையிலேயே உள்ளன.

இச்சூழலில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இசுலாமியம் குறித்தப் பொழிவை நிகழ்த்துவதற்கான வாய்ப்பை நான் முதலில் அடைந்த போது, அதை நான் அறிந்த ஈடுபாடுடைய ஒன்றாகவே கருதினேன். அதாவது, இசுலாமியம் தொடர்பான இப்பொழிவிற்கு அது குறித்த ஒரு புரிதலை நான் முன்னமே பெற்றிருந்தமை ஒரு முக்கியக் காரணம் என்று சொல்லலாம். இவ்விடத்துச் சில நிகழ்வுகளைச் சுட்டுவது பொருத்தமாக இருக்கும்.

நான் சிறுவனாக இருந்த காலத்து உடல் நலம் குன்றிய தருணங்களில் எனது தாயார் என்னை அருகிலிருக்கும் பள்ளிவாசலுக்கு (மசூதி) அழைத்துச் செல்வது வழக்கம். அப்போதைய சூழலில் நானும் எனது தாயாரும் அறிந்த முதல் மருத்துவமனை அது தான் . முசுலீம் பெரியோர்கள் தொழுகையை முடித்து வெளியே வரும் வரை பள்ளிவாசலுக்கு வெளியே காத்துக் கொண்டிருப்போம். தொழுகை முடிந்து ஒருவர் பின் ஒருவராக வரும் அவர்கள் முகத்தில் நீண்ட தாடியும் தலையில் தொப்பியும் மிக எளிய உடையிலும் காணப்பெறுவார்கள்.

வரிசையாக நின்று கொண்டிருக்கும் எங்களின் முகத்துக்கு அருகே வந்து வாயில் ஏதோ மந்திரத்தை உச்சரித்து 'உசு' என்ற காற்றை மூன்று முறை ஓதுவார்கள். அக்காற்று பட்டவுடன் எங்களுடைய உடல் நலம் குணமாகிவிடும் என்று என் அம்மா எனக்குக் கூறியதுண்டு. இசுலாத்தை நான் முதன் முதலாக அறிந்து கொண்ட முறை அதுதான்.

அதன் தொடர்ச்சியாக 'ரமலான்' நோன்புக் காலத்து வழங்கப்படும் நோன்புக் கஞ்சிக்காக மாலை நேரங்களில் சிறு சிறு

பாத்திரங்களுடன் பள்ளி வாசலை நோக்கிச் செல்லும் பழக்கமும் ஏற்பட்டது. மிகவும் சுவையாக இருக்கும் அந்தக் கஞ்சியைக் குடித்தால் உடலில் 'பஞு' கூடும் என்று சொல்லுவார்கள். எங்கள் ஊரில் உள்ள பெரும்பாலான குடும்பங்களின் இரவு நேர உணவு அது தான். இது தவிர சிறு வயதாக இருந்தபோது நான் கடைபிடித்த நேரம் பார்க்கும் முறை இவ்விடத்துக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

எனது பள்ளிப் பருவத்தில் சூரியன் செல்லும் திசைக்கேற்ப மாறும் வீட்டின் கூரை நிழலே நான் கண்டறிந்த கடிகார முள். ஆனால், மேக மூட்டங்களினால் ஏற்படும் சூரிய மறைவின் போது அது நிகழாமல் போவதுண்டு. அத்தகைய காலங்களில் நான் முதலில் கேட்ட கடிகார ஒலியே தொழுகையின் போது ஒலிக்கப்படும் திருமறை வசனம். அப்படித்தான் எனது தந்தையார் எனக்குக் கற்றுத் தந்தார். விடியற்காலை தொழுகை ஒலியை 4 மணி என்றும் பிற்பகல் தொழுகை ஒலியை 1 மணி என்றும் மாலை நேர இரவு நேர ஒலிகளை 4 மணி 8 மணி என்றும் எனக்குக் கூறுவார்.

அதுமுதல் நான் ஒவ்வொரு தொழுகையின் போது ஒலிக்கப்படும் இறை வசனம் முழுவதையும் கூர்ந்து கேட்பதுண்டு. அதன் அர்த்தம் எனக்கு அப்போது புரியவில்லையாயினும் அதன் ஓசை என்னை மிகவும் கவர்ந்தது. அதன் மூலம் என் மனதில் ஆழப் பதிந்த ஒரு வார்த்தை தான் 'அல்லாஹு அக்பர்'. சிறு வயது முதற்கொண்டு இப்படி ஏதோ ஒரு வகையில் இசுலாமியத்தின் பயனை அனுபவித்து வந்த நான் தமிழ்ப் பாடநூல் வழியாக அதன் இலக்கியத்தையும் வரலாற்றுப்பாட நூல் வழியாக அதன் ஆட்சிச் சிறப்பையும் அறிந்து கொண்டேன். ஆனால் அப்போதைய அந்த அறிதலில் தேர்வு நோக்கமே முதன்மையாக இருந்தது.

இப்படி, எனது இளமைப்பருவ வாழ்க்கையில் மிகச்சிறிய அளவில் அறிந்து கொண்ட இசுலாமியத்தை நான் எனது கல்லூரி வாழ்க்கைக்குப் பிறகு முழுமையாக அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். என்னுடன் பள்ளியில் ஒன்றாகப் பயின்ற எனது வகுப்புத் தோழர் திரு.சீ.மகாதேவன் அவர்கள் எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரரர், எனது மனம் கவர்ந்த நண்பர்களில் ஒருவர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவரைச் சந்தித்த போது அவர், தாம் இசுலாமியத்தை ஏற்றுக் கொண்டவராகவும் அதன் பயனாகத் தம்முடைய பெயரை இசுலாமியப் பெயராக மாற்றிக் கொண்டதையும் என்னிடம் கூறினார்கள். அவரது தோற்றத்தையும் அவரிடமிருந்து உதிர்ந்த வார்த்தைகளையும் கேட்ட எனக்கு அவர்

மீது ஒரு மரியாதை தோன்றியது. பிறவியில் இசுலாமியராக இல்லையென்றாலும் இசுலாமிய நெறியினின்று சிறிதும் வழுவாத ஒரு முழுமையான முசுலீமாகவே நான் அவரை அடையாளம் கண்டேன். இப்பொழுதும் அவர் அதே நெறியில் தான் வாழ்ந்து வருகிறார்.

அவரோடு நான் உரையாடி மகிழும் காலங்களில் இசுலாமியத்தின் சிறப்புகளையெல்லாம் எனக்கு வழங்குவார்கள். குறிப்பாக, நபிகள் நாயகம் அவர்களது வாழ்க்கை வரலாற்றை மிக எளிமையாக எடுத்துச் சொல்வார்கள். அவரிடமிருந்து நான் அப்போது கற்றுக்கொண்ட வார்த்தைகளில் ஜகாத், துவா, நிக்காஹ், சுன்னத் ஆகியன என் மனதில் ஆழப் பதிந்த வார்த்தைகளாகும். இப்படி இசுலாமியத்தை நான் விரும்பிக் கேட்பதை அறிந்த அவர் எனக்குத் 'திருக்குர் ஆன்' ஒன்றைப் பரிசாக வழங்கி அதை ஓதுகின்ற முறையையும் கற்றுத் தந்தார்கள். அவர் என்னுள் ஏற்றிய அந்த இசுலாமியச் சுடரே என்னுடைய சிந்தனையை விசாலமாக்கியது. இந்தப் பின்புலத்தில் தான் என்னுடைய இசுலாமியத் தேடல் தொடங்கியது. குறிப்பாக இசுலாமியக் கருத்தரங்குகள், நிகழ்வுகள் பலவற்றில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டுரைகளை வழங்குவதும் உரை நிகழ்த்துவதுமான பயணங்கள் தொடர்ந்தன.

'வள்ளல் சீதககாதி' அறக்கட்டளைச் சொற்பொழிவில் உரைநிகழ்த்த எனக்கு வாய்ப்பை அளித்த இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன் மற்றும் இச்சொற்பொழிவிற்கு எனக்கு உறுதுணையாக இருந்த இந்நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி (ம) மொழியியல் புலத்தைச் சேர்ந்த இவ்வறக்கட்டளையின் பொறுப்பாளர் முனைவர் க.சுசீலா அம்மையார் அவர்களுக்கும் நிறுவனத்தைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்குத் துணைபுரிந்த என்னுடைய ஆய்வு மாணவர்களுக்கும், தெலுங்குத் துறை ஆய்வு நண்பர் பா. காளியப்பன், உருதுத்துறைப் பேராசிரியர் முனைவர் ஹபீப் அஹமத், இசுலாமியத் துறைப் பேராசிரியர் முனைவர் அப்துல் ரஹ்மான், மெரீனா வளாக நூலகர் முனைவர் ச.கணேசன் ஆகியோர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலாசிரியரைப் பற்றி



பள்ளிக் கல்வியை அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும் கல்லூரிக் கல்வியை சென்னை மாநிலக் கல்லூரியிலும் முதுகலை மற்றும் ஆராய்ச்சிக் கல்வியைப் புதுவை மையப் பல்கலைக் கழகத்திலும் முடித்தவர். கல்வியின் மீது கொண்ட அளவற்ற ஆர்வத்தின் காரணமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், மொழியியல் ஆகியவற்றில் முதுகலையும், முதுநிலைப் பட்டய மொழியியலும், இளங்கலை ஆசிரியர் கல்வியியலும் முடித்துள்ளார்.

சாதாரண ஒரு பள்ளியில் தமது ஆசிரிய வாழ்க்கையைத் தொடங்கிய இவர் தாம் படித்த புதுவை மையப் பல்கலைக் கழகத்திலேயே விரிவுரையாளராகப் பணியமர்த்தப்பட்டார். சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னைப் பல்கலைக்கழகப் பணியை ஏற்ற இவர் கடந்த 10 ஆண்டுகளாக உதவிப் பேராசிரியராக இருந்து வருகிறார். நாற்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் பத்திற்கும் மேற்பட்ட நூல்களையும் வழங்கியுள்ளார். இவரது "சாதி வறுமை அரசு" என்ற நூல் சிறந்த நூலுக்கான பரிசு பெற்ற நூலாகும்.

ஒரு குறுந்திட்ட ஆய்வையும் (Minor Project) பெருந்திட்ட ஆய்வையும் (UGC-MRP) முடித்துள்ளார். இவரது மேற்பார்வையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வியல் நிறைஞர்களும் பத்திற்கும் மேற்பட்ட முனைவர் பட்ட ஆய்வாளர்களும் முடித்துள்ளனர். மேலும் இவரிடம் பதிவு செய்துகொண்ட முனைவர் பட்ட ஆய்வாளர்களில் பதின்மர் தற்போது முடிக்கின்ற நிலையில் உள்ளனர். கல்விப் பணியை அறப்பணியாக ஆற்றி வரும் இவரது கல்விச் சேவைக்காக 'கல்விச் செம்மல்', 'ஆசிரியச் செம்மல்' ஆகிய விருதுகள் கிடைத்துள்ளன. எண்ணற்ற சிறப்புகளுக்கும் உயரிய குணங்களுக்கும் சொந்தக்காரரான இவர் விழுப்புரம் மாவட்டம் சித்தலம்பட்டு என்னும் குக்கிராமத்தில் எழுத்தறிவற்ற கூலித்தொழிலாளி குடும்பத்தில் பிறந்த முதல் தலைமுறைக் கல்வியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளடக்கம்

		பக்கம்
1.	தமிழ்-இசுலாமியம்	1
2.	தமிழ்-அரபு உறவு	5
3.	இசுலாமிய நெறி	18
4.	கடவுள் வாழ்த்து	43
5.	இலக்கியநெறியும் சமயநெறியும்	52
6.	சிற்றிலக்கிய மரபுகள்	68
7.	நூல் முடிவுகள்	80
8.	துணைநூற்பட்டியல்	94
	பின்னிணைப்பு - 1	97
	பின்னிணைப்பு - 2	105

தமிழ்-இசுலாமியம்

தமிழ் என்ற வடிவம் அது வழங்குகின்ற இடம் அல்லது சூழல்களுக்கேற்ப (Contex) மொழியையும் இனத்தையும் இலக்கண இலக்கியத்தையும் நாகரிகம் பண்பாடு சமயம் முதலான வாழ்வியல் நெறிகள் அனைத்தையும் உணர்த்தக் கூடிய பல்பொருள் குறித்த ஒரு சொல்லாக (வடிவம்) இருப்பதைக் காணலாம். குறிப்பாக,

வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகத்து

எனும் போது அது மேற்குறித்த எல்லாப் பொருட்களையும் குறிக்கக் கூடியதாக அமைகிறது. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்துவதன் பொருட்டு பாடப்பட்டது குறிஞ்சிப்பாட்டு என்றவிடத்து அது மொழி மற்றும் அதிலுள்ள அகம், புறம் ஆகிய மரபுகளை எடுத்துரைப்பதாக அமைகிறது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் எனும் போது அது சைவத்தை மட்டும் குறிக்கிறது. தமிழில் இவ்வகையான பயில்விடங்கள் மிகுதி. பயன்படுத்தப்படும் சூழல்களுக்கேற்ப அதன் பொருண்மைகளைப் புரிந்து கொள்ளல் வேண்டும். இச்சூழ் பொருள் வடிவங்கள் ஒரு மொழியின் வளமையை, தனித்துவத்தை வெளிப்படுத்தும் சிறந்த குறியீடுகளாகும்.

தமிழல்லாத வேறு எந்த மொழி வடிவமாக இருந்தாலும் அதை இதே பின்புலத்தில் தான் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக இசுலாமியம் எனும்போது அது வெறும் சமயத்தை மட்டுமே குறிப்பதாக அமையாது. மாறாக இசுலாமிய மொழி இலக்கியம் பண்பாடு ஆகிய அனைத்தையும் உணர்த்த வல்லது. அது போலவே தமிழில் இசுலாமிய மரபுகள் எனும்போது தமிழில் இணைந்து விட்ட இசுலாமிய அடையாளங்கள் அல்லது மரபுகளைக் குறிப்பனவாக அமையும். தமிழில் உள்ள இசுலாமிய மரபுகளை அதன் தோற்றப் பின்புலத்தில் இரண்டு நிலைகளில் புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் வடமேற்கு வழியாக வந்து ஆங்காங்கே தங்கிவிட்ட இசுலாமியர் ஒரு பிரிவினர். இவர்கள் கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குப் பின் நிலவழியாகப் படையெடுத்து வந்தவர்கள். அடுத்து தென்னக இசுலாமியர் என்பவர்கள் மற்றொரு பிரிவினர். இவர்கள் கடல் வழியாகத் தமிழகத்து வந்த அராபியர்கள். கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்பேயே அரபு நாட்டிலிருந்து வணிகத்தின் பொருட்டு வந்தவர்கள். சங்க இலக்கியம் சுட்டும் யவனர்கள் இவர்களே ஆவர். அரபு நாட்டில் தோன்றிய இசுலாம் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் உருவானது. அதற்கு முன்பு விக்கிரக வழிபாடொத்த சமய மரபாகவே அரபியரின் வழிபாட்டு முறை இருந்தது. கி.பி. 570 இல் முகம்மது நபி அவர்களின் வரவுக்குப் பிறகு இசுலாமியம் கால்கோலிடப்பெற்றது.

சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறும் அரபு வணிகர்கள் இசுலாமியத்தைப் பற்றி அறியாதவர்கள். கி.பி. எட்டாம் நூற்றாண்டிலேயே அரபியரின் வருகை தமிழகத்தில் பெரும் அளவில் இருந்தது. ‘எட்டாம் நூற்றாண்டு தமிழக அரபியரில் முசுலீம் அல்லாதாரே இல்லை’ என்று கே.ஏ. நீலகண்ட சாசுதிரி குறிப்பிடும் கருத்து ஈண்டு நினையத்தக்கது (கவி.கா.மு.ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, ப.46). மேலும் அராபியர் அல்லாது சமயத்தால் ஒன்றுபட்டவர்களாகி இருந்தாலும் வரலாற்று நிலையில் அவர்களை இரண்டு வகையான இசுலாமிய மரபுகள் கொண்டவர்களாக இனங் காணலாம்.

ஆரம்ப காலகட்டத்தில் தமிழகத்தில் முசுலீம்களின் குடியேற்றம் தொடங்கிப் பெருகத் தலைப்பட்டபோது, இக்குடியேற்றம் இருவழிகளில் நடைபெற்றன. ஒன்று வியாபார நிமித்தமாக ஏற்பட்ட குடியேற்றம். பிறிதொன்று இசுலாமிய மார்க்கத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்ட மார்க்க அறிஞர்களின் குடியேற்றம் (இசுலாமியத் தமிழ்ச்சிற்றிலக்கியங்கள், ப.10). இவ்விரு வகை குடியேற்றங்கள் வழியே இரு வகையான இசுலாமிய மரபுகளைப் பிரித்தறியலாம்.

தமிழகத்து முசுலீம்கள், வடபுலத்து முசுலீம்கள் என்ற பாகுபாட்டில் தமிழகத்து முசுலீம்களாக அரபியரும் அவர்களது வழித்தோன்றல்களாகி இசுலாத்தை ஏற்றுக்கொண்ட தமிழர்களும் அடங்குவர். மேலும், வடக்கில் வாழும் முசுலீம்களாகப் பட்டாணிய மங்கோலிய, துருக்கிய இன முசுலிம்களும் இவர்களது வழிவந்தோரும் மதம் மாறிய வடபுல மக்களுமாவர் என்று

கவி.கா.மு.ஷெரீப் குறிப்பிடும் கருத்தும் இவ்விடத்து சுட்டத்தகுந்தது (வள்ளல் சீதக்காதி வரலாறு, ப.47). தமிழக முசுலிம்களை மரக்காயர், ராவுத்தர் என்றும் கேரள முசுலீம்களை மரக்காயர், மாப்பிள்ளை என்றும் வெவ்வேறு பெயர்களில் அழைத்துள்ளனர். தமிழகத்துக் கடற்கரைப் பட்டினங்களில் மரக்கலம் ஊர்ந்து வந்ததால் அவர்கள் மரக்காயர் (மரக்கல ஆயர்) என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமிழர்களுக்கும் இசுலாமியர்களுக்குமிடையேயான இத்தகைய நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியில் உள்ள சில முக்கிய நிகழ்வுகள் இன்னும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியத் தேவையைப் பெற்றுள்ளன. 'தமிழில் இசுலாமியர் கால்கொண்ட பிறகு ஏற்பட்டுள்ள இசுலாமியத் தமிழ் மரபுகள் அயல் மரபாட்சி, அயல்பண்பாட்சி ஆகியவற்றால் மறக்கப்பட்டு மயங்கித் திரிபுகளுக்கு ஆட்பட்டு மறைந்து போயின என்ற கா. அப்பாத்துரை அவர்களுடைய கருத்து தமிழ் இசுலாமிய மரபுகள் குறித்தத் தேடல் இன்னும் முழுமை பெறவில்லை என்பதை நினைவு கூர்கிறது.

இந்தியாவின் வடபுலத்திலிருந்த முசுலீம் மன்னர்களின் தாய்மொழி துருக்கி, அரபி, மற்றும் பாரசீகமாக இருந்த சூழலில் இந்தியாவில் இருவகையான மொழியின மரபுகள் இருந்துள்ளன. வடபகுதியில் ஹிந்தி, குஜராத்தி, மராத்தி, பஞ்சாபி மற்றும் அசுஸாமி போன்ற ஆரிய இனமொழிகளும் தென்பகுதியில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிட இன மொழிகளும் பேசப்பட்டுள்ளன. பல்வேறு மொழிகள் நிலவிய இந்தச் சூழலில் வடபுலத்தில் ஆட்சி செய்த முசுலீம்களுக்கு மொழி ஒரு சிக்கலாக இருந்துள்ளது. இதன் காரணமாக இந்திய மக்களோடு தொடர்பு கொள்வதற்கு, அவர்களுக்கு ஒரு பொதுமொழி தேவைப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தோன்றியதே உருது என்னும் கலப்பு மொழி.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் தில்லி மற்றும் அதன் கிழக்குப்பகுதிகளில் பேசப்பட்டு வந்த பிராகிருத மொழியின் கிளைகளான கடிபோலி மற்றும் ஷோர்ஷீனி ஆகிய மொழிகளோடு முசுலீம் மன்னர்களின் தாய் மொழிகளாகிய அரபி, பாரசீகம், துருக்கி முதலான மொழிகள் கலந்து உருது என்ற ஒரு தனி மொழி உருவாகியது. தொடக்க நிலையில் இம்மொழி ஹிந்தி, ஹிந்துசுதானி, தக்கன், தக்னி, ரீக்தா என்ற பல்வேறு வடிவங்களில், வழங்கப்பட்ட பின்னரே உருது என்ற வடிவத்தை அடைந்துள்ளது. உருது என்றால் படை என்று பொருள். படையின் போது ஒன்று கூடும் மக்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வதற்காகத் தோன்றிய பொது மொழி என்றும் சொல்லப்படும்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் தில்லியை அரசாண்ட அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிப்பரப்பு தென்னிந்தியாவில் கர்நாடகம், கிழக்கில் வங்காளம் வரையில் பரவியிருந்தது. அதன்பிறகு ஆட்சிக்கு வந்த முகம்மது பின் துக்ளக் கி.பி. 1327 இல் தமது ஆட்சித் தலைநகரை தில்லியிலிருந்து தேவகிரிக்கு (தௌலாபாத்) மாற்றியுள்ளான். தௌலாபாத், தில்லியிலிருந்து தெற்கே சுமார் எழுநூறு மைல் தொலைவில் அவுரங்காபாத்திற்கு அருகில் உள்ள இடமாகும்.

தலைநகர் மாற்றத்தின்போது அம்மன்னன் குடிமக்கள் எல்லோரையும் தேவகிரிக்குச் செல்லுமாறு பணித்திருக்கிறான். இதில் சிறியவர் முதல் அகவை முதிர்ந்த எல்லா மக்களும் ஏழை பணக்காரன் என்ற எல்லா வர்க்கத்தினரும் தங்களுடைய பொருட்களுடன் சென்றுள்ளனர். சிலநாட்களுக்குப் பிறகு ஆட்சித் தலைநகரை மீண்டும் தில்லிக்கே மாற்றலாம் என்று துக்ளக் ஆணையிட்டுள்ளான். ஆனால் அனைவருக்கும் அது சாத்தியமில்லாமல் போனது. இதன் காரணமாக இடம் பெயர்ந்தவர்களில் ஒரு சிலர் போக எஞ்சியோர் தௌலாபாத் மற்றும் அதன் அருகிலிருக்கும் பகுதிகளில் வசிக்கத் துவங்கினர். இங்கு அவர்கள் பேசிய உருதுமொழி "தக்கன் மொழி" (தெற்குப்பகுதி) என்று வழங்கலாயிற்று. உருதுமொழியின் பரிணாமம் குறித்த இவ்வரலாற்றை சையத்ஃபைசு அஹமத்காதரி அவர்களுடைய உருது இலக்கியம் ஓர் அறிமுகம் என்னும் நூலில் விரிவாகக் காணமுடியும்.

இப்படி, தமிழ் இசுலாமிய உறவுகள் குறித்து மேற்கொள்ளப் பெறும் ஆய்வுகள் மீண்டும் மீண்டும் நமக்குப் பல புதிய வெளிச்சங்களைக் கொடுப்பதாலும் தமிழில் இசுலாமிய மரபுகள் என்ற தலைப்பு இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவின் பொருண்மையாக அமைவதற்கு மேலும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்தது. இந்தப் பின்புலத்தில் தான் தமிழில் எழுந்துள்ள இசுலாமியப் படைப்புகள், தமிழில் கலந்துள்ள இசுலாமியப் பண்பாட்டுக் கூறுகள், மொழிக் கலவினங்கள் மற்றும் சமயம் போன்ற பல்வேறு நிலைகளில் இசுலாமியத் தமிழ் மரபுகளை இனங்காணமுடியும். சுருக்கம் கருதி சில கூறுகள் மட்டுமே இங்கே விவாதிக்கப்பட்டுள்ளன.

தமிழ் - அரபு உறவு

தமிழகத்தில் இசுலாமியம் நிலைபெறுவதற்கு முந்திய காலத்திலிருந்தே தமிழர்களுக்கும், அரபியர்களுக்கும் கடல் வழி வாணிகத் தொடர்பு இருந்திருக்கிறது என்பதற்குத் தமிழில் பல்வேறு சான்றுகள் உள்ளன. இது தவிர மொழி வழியிலும் இரண்டுக்குமான ஒப்புமைகள் பல இருப்பதை மொழி அறிஞர்கள் நிறுவியுள்ளனர். உலக மாந்தரெல்லாம் ஒரு தாய் வழியினராதலால் அவர் வழங்கி வரும் பல்வேறு மொழி ஒரு தாய் வழியினவாய்த்தான் இருத்தல் வேண்டும். எனவே உலக மொழிகட்கெல்லாம் ஒரு மூலமொழி உண்டு என்பது தேவநேயப் பாவாணர் போன்றோர்களால் முன்னெடுக்கப்படும் மொழிக்கோட்பாடாக அமைந்தது.

அவரது கருத்துப்படி உலகின் முதல் மொழியாக அவர் சுட்டும் மொழி தமிழேயாகும். உலகின் முதல் மாந்தன் தோன்றிய இடம் குமரிக்கண்டமாகும். அங்குதான் முதன்மொழி தோன்றியது என்பது ஒரு கருத்து. இதற்கு மறுதலையான கருத்தும் மொழி நூலறிஞர்களிடம் உண்டு. மொழி பற்றிய ஆய்வுகளில் ஒரு முடிந்த முடிவு எட்டப்படாத நிலையையும் அது குறித்த ஆய்வுகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்பெற வேண்டியத் தேவையையும் இம்முடிபுகள் உணர்த்துகின்றன.

ஒரு மொழியின் தொன்மையை அதுபோலவே தொன்மையானதாகக் கருதப்படும் பிறிதொரு மொழியில் இடம் பெற்றுள்ள சில ஒப்புமைகளைக் கொண்டும் இரண்டின் தொன்மையும் உறுதிப் படுத்துவதுண்டு. ஆனால் இதன் மூலம் இரண்டு மொழிகளையும் ஒரே குடும்ப மொழிகள் என்றோ, ஒரே இனம் என்றோ கருதமுடியாது. இவ்விடத்து கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சுட்டும் சில கருத்துக்களைக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

தென் ஐரோப்பாவில் வழங்கிய கிரீக் மொழியிலும் கிழக்கிந்தியத் தீவில் வழங்கும் பாலினிஷியர் மொழியிலும் 'மதி'

என்ற சொல் 'கண்' என்பதைக் குறிக்கிறது. வட சைனாவில் வழங்கும் 'மஞ்சு' என்ற சொல் சித்திய மொழியில் இரத்தத்தைக் குறிக்கும் சொல்லாக 'செங்கி' என்று வழங்கப்படுகிறது. மத்திய ஐரோப்பியாவில் வழங்கிய லத்தீனிலும் 'செங்கிபின்' என்ற சொல் அதே கருத்தையே குறிக்கிறது. ஆங்கிலத்தில் 'ஒன்' என்பதும் தமிழில் 'ஒண்' என்பதும் ஒரே கருத்து உடையனவாயினும் மூலவடிவம் வேறு. ஆங்கிலத்தில் ஏகாரம் என்ற சொல்லே 'ஓம்' என்றாகி 'ஒன்' என்றாயிற்று. தமிழில் 'ஒன்று' என்பது 'ஒண்ணு' என்று மருவிற்று. அவ்வாறே ஆங்கிலத்தில் மர்மர் என்பதும் தமிழில் முறுமுறு என்பதும் ஒத்து இருத்தல் பற்றி ஆரிய குடும்பத்தைச் சார்ந்த ஆங்கிலமும் திராவிடக் குடும்பத்தைச் சார்ந்த தமிழும் ஓர் இனமொழி என்று கருத இயலாது. மொழிகளை ஒத்துப் பார்க்குமிடத்து அவற்றின் பண்டை வடிவத்தைத் தெரிந்து இலக்கண ஒற்றுமையும் ஒத்து இருத்தலறிந்து அவை ஓரினத்தனவென்று தெரிவித்தல் முறை என்பது மொழி நூலார் கண்ட உண்மையாகும் (மொழிநூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும், ப.8).

ஆனால், மொழிகளின் வேர் வேறாயினும் அதிலுள்ள மொழியொப்புமை என்பது மொழி பேசுவோர்களுக் கிடையேயிருந்த ஆழமான உறவை எடுத்தியம்பும் என்பதில் ஐயமில்லை. இதனடிப்படையில் தான், தமிழ்-அரபு மொழிகளுக்கிடையேயான உறவைப் புரிந்து கொள்ள முடியும். அடிப்படையில் இவையிரண்டும் வேறுவேறு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள். தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தையும் அரபு செமிட்டிக் மொழிக் குடும்பத்தையும் சார்ந்தது. செமிட்டிக் குடும்பத்துக்கும் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்துக்கும் ஒப்புமைகள் அதிகம்.

இங்கு, தமிழர் அரபியர் உறவு என்பது மொழிவழி ஏற்பட்டதன்று. அது சுமார் நான்காயிரம் ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த வணிக உறவின் காரணமாக ஏற்பட்டது என்பர். சங்க இலக்கியத்தில் யவனர் என்ற சொல் பல்வேறு இடங்களில் பயின்று வந்துள்ளதைச் சங்க இலக்கியச் சொல்லடைவு நூல் வழி அறியமுடியும். அவற்றுள்,

யவனர் தந்த வினைமான் நன்கலம் (அகம். 149)

யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல் (புறம். 56)

யவனர் இயற்றிய வினைமான் பாவை (நெடுநல். 101)

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்கு வெருவருந் தோற்றத்து
வலிபுணரி யாக்கை வன்கண் யவனர் (முல். 59-61)

முதலான பாடலடிகள் யவனர் பற்றிய பதிவுகளை உணர்த்தும் சில சான்றுகளாகும். இது தவிர சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களிலும் இதன் சொல்லாட்சியைக் காணலாம். இப்பாடலடிகளில் இடம் பெற்றுள்ள கலம், பாவை, தேறல் மற்றும் மத்திகை முதலானவை கிரேக்கச் சொற்கள் என்றும் அவை முறையே கப்பல், விளக்கு, மது, குதிரை, சம்மட்டி ஆகிய பொருட்களைக் குறித்து வந்துள்ளதை மயிலை சீனி. வேங்கடசாமி தமது நூலில் ஆய்ந்துள்ளார். அவ்வாறே சுருங்கை(பரி. 20-104) கன்னல் (முல்.58) முதலான சொற்களையும் சுட்டுவர் (பழங்காலத் தமிழர் வாணிகம், ப.54) மேற்சுட்டிய இப்பாடலடிகளில் சுட்டப்பெறும் 'யவனர்' என்போர் கிரேக்க உரோமர்களைக் குறித்தது என்பது மயிலை சீனி. வேங்கடசாமி போன்ற அறிஞர்கள் சுட்டும் முடிவாகும். ஆனால் கிரேக்க உரோமர்களைக் காட்டிலும் தமிழர்கள் அராபியர்களோடு வணிக உறவு வைத்திருந்தமைக்குச் சாத்தியக் கூறுகள் மிகுதியாக உள்ளன.

அதே வேளையில் சேர நாட்டுத் துறைமுகத்தில் அரபியர் வாணிபம் செய்த இடத்தைப் 'பந்தர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளமையையும் (பந்தர் என்றால் அரபு மொழியில் கடை வீதி என்று பொருள்) இத்துறைமுகப் பந்தரில் முத்துகளும் விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டுள்ளமையையும் பதிற்றுப்பத்தில் பந்தர் என்ற சொல் பல்வேறு இடங்களில் [1] பயின்று வந்துள்ளமையையும், அரிசி என்ற தமிழ்ச்சொல் அரபு மொழியில் ஒருஜ் என்று வழங்குவதையும் சேரநாட்டு மிளகையும் மூங்கிலையும் அரபியர் தம் நாட்டுக்கு ஏற்றிச் சென்றுள்ளமையையும் மயிலை சீனி.வேங்கடசாமி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் (பழங்காலத் தமிழர் வாணிகம், ப.50).

கிரேக்க, உரோமானிய, அராபிய ஆகிய முந்நாட்டவரும் தமிழகத்தோடு வாணிபம் புரிந்துள்ள சூழலில் கிரேக்க உரோமரை மட்டும் யவனர் என்று சுட்டியிருப்பது சங்க இலக்கியத்தில் காணப்பெறும் யவனர் யாரைக் குறித்ததாக இருக்கலாம் என்ற ஒரு வினாவை எழுப்புகிறது. ஏனெனில், யவனர் என்போர் கிரேக்க உரோமரைக் குறிக்காது, அது அரபியரைத்தான் குறிக்கும் என்ற மறுதலையான கருத்தும் தமிழாய்வுச் சூழலில் உள்ளது.

யவனர்களைக் கிரேக்கர் எனக் கூறுவது பொருந்தாக் கூற்று. காரணம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரை மேலை நாட்டினர்க்கு இந்தியா வருவதற்கான கடல்வழி தெரிந்திருக்கவில்லை. இந்தியாவிற்குக் கடல் வழித்தடம் காணப்புறப்பட்ட கொலம்பசு வழி தெரியாமையால் அமெரிக்கா சென்று சேர்ந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. வாசுகோடகாமா வழி கண்டு உரைக்கும் வரை ரோமரும் கிரேக்கரும் இந்தியாவுடன் தொடர்பு கொள்வது ஆப்கானிசுதான் கைபர் கணவாய் வழியாகத்தான் என்ற வரலாற்று நிகழ்வைச் சுட்டும் மைக்கேல் எச்.ஹாரட் கருத்து ஈண்டு நினையத்தக்கது (வள்ளல் சீதக்காதி வரலாறு, ப.75).

மேலும், பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாசுகோடகாமா கடல்வழியாக இந்தியாவிற்கு வழி கண்டுபிடித்த காலத்திலிருந்து தான் ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் முதன்முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. அது முதற்கொண்டே ஐரோப்பிய வணிகர்கள் பலர் இந்தியாவிற்கு வரத்தொடங்கினர். அதன்படி முதலில் போர்த்துக்கீசியர்களும் அதன் பிறகு டச்சுக்காரர்களும் இறுதியில்தான் பிரெஞ்சியர்களும் ஆங்கிலேயர்களும் வந்தார்கள் என்ற முகம்மது உசைன் அவர்களுடைய கருத்து நோக்கற்பாலது.

இது தவிர கிரேக்க உரோமர்களைக் காட்டிலும் தமிழர்கள் அராபியர்களோடு வாணிக உறவு வைத்திருந்தமைக்குப் புவியியற் சாத்தியக் கூறுகள் மிகுதி என்பதை எடுத்துரைக்கும் கவி.கா.மு.ஷெரீப் அவர்களுடைய கருத்தையும் இவ்விடத்து ஏற்புடையதாகக் கருதலாம். கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை கிரேக்க உரோமர்கள் இந்தியாவை வந்தடைய அரபு மண்ணை மிதித்துத் தீரவேண்டிய அவசியமிருந்தது. நிலவரைபடத்தை (உலக வரைபடம்.1) உற்று நோக்கின் இவ்வுண்மை புரியும். உரோமர்கள் தமிழகத்துக்கு விரைந்து வரக்கூடிய மார்க்கம் அரபு தீப கற்பகத்தின் வழியாகத்தான் நிகழ முடியும். ஆனால் அதற்கு அரபியர்கள் வழி விட்டிருக்க வாய்ப்பில்லை. கி.பி.ஒன்றாம் நூற்றாண்டில் உரோமர்கள் எகிப்தை கைப்பற்றிய பின்னர் தான் மத்திய தரைக்கடலை ஒட்டியுள்ள அலெக்சாந்திரியாவை கடல் துறையாகப் பயன்படுத்த இயன்றது. அப்பொழுது கூட அவர்கள் ஆழ்கடல் வழியாகக் கப்பல் செலுத்துகின்ற முறையை அறிந்திருக்கவில்லை (மே.நூ. ப.41).

இக்கருத்துக்கு ஒப்பவே மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் சுட்டும் கருத்து அமைந்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கதாகிறது.

அதன்படி, அரபிக் கடலின் ஊடே நடுக்கடலில் பருவக்காற்றின் உதவியால் பிராயாணஞ் செய்யும் வழியை யவனர் அக்காலத்து அறியவில்லை. ஆனால் தமிழர்களுக்கும் அரபியர்களுக்கும் அது சாத்தியமாயிற்று. அவர்களுக்குக் கடல் வழிப் பயணம் அறியாததாகையால் யவனர் முசிறித் துறைமுகப் பட்டினத்துக்குக் கரையோரமாக வந்துபோக நெடுங்காலம் சென்றது. கி.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பலசு என்னும் கிரேக்க மாலுமி பருவக்காற்றினால் பயணம் செய்யும் இரகசியத்தைக் கண்டுபிடித்த பின்னர்தான் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன (பழங்காலத் தமிழர் வாணிகம், ப.52).

மேலும், கிறிசுது பிறப்பதற்கு முன்னர் இந்தியாவின் மீது படைநடத்திப் போர் புரிய வந்த மகா அலெக்சாண்டர் என்னும் மாமன்னன் சிந்து வரை வந்ததும் கைபர் கணவாய் வழியாகத்தான் என்பது வரலாறு. எனவே சிந்து வரை வந்து திரும்புவதே ரோமருக்கும் கிரேக்கருக்கும் கடினமாக இருந்திருக்கையில் அவர்களில் யாரும் தமிழகம் வந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியே வந்திருந்தாலும் அது கைபர் கணவாய் வழியாக வந்து போனதாக இருக்க இயலுமே அன்றிக் கடல் உறவாக அமைந்ததெனக் கொள்ள இயலாது என்ற கா.மு.ஷெரீப் அவர்களுடைய கருத்தும் (வள்ளல் சீதக்காதி வரலாறு,ப.75).

இந்தியாவின் வளப்பமும் செழிப்பும் ஆரியர்களையும் ஈரானியர்களையும் எப்படிக் கவர்ந்திழுத்ததோ, அதே போன்று கிரீசு நாட்டு மன்னர் அலெக்சாண்டரையும் கவர்ந்தது. முதலில் அவன் கி.மு.330இல் ஈராக் மீது படையெடுத்தான். பிறகு ஆப்கானிசுதானைப் பிடித்தான். கி.மு. 326இல் சிந்து நதியைக் கடந்து 'டக்சுஸா' என்ற நகரை நோக்கி முன்னேறினான். அலெக்சாண்டர் பீஹாரைப் பிடிப்பதற்காகக் கிழக்கு நோக்கி முன்னேற ஆரம்பித்தான். ஆனால் அவனது பரிவாரங்கள் அவனோடு ஒத்துழைக்க மறுத்துவிட்டன. எனவே வேறு வழியின்றித் தனது தாய் நாடு திரும்பி விட முடிவு செய்தான். வென்ற நாடுகள் அவரவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, கிரீஸை நோக்கி வருகையில் பிரயாணத்தில் ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக வழியிலேயே கடுமையான நோய்க்காளானான். பாபுல் நகரை நெருங்கும் பொழுது அலெக்சாண்டர் மரணமுற்றான். அப்பொழுது அவனுக்கு வயது 32. அலெக்சாண்டருடைய சகாப்தம் கி.மு.323 லேயே முடிவடைந்துவிட்டது என்ற குலாம் ரசூல்

அவர்களுடைய கருத்தும் (இந்தியாவை ஆண்ட முசுலீம் மன்னர்கள், ப.11).

முதன் முதலில் இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியராகக் கருதப்படும் அலெக்சாண்டர் கூட இந்தியாவிற்குரிய கடல் வழிப் பயணத்தை மேற்கொள்ளவில்லை என்ற வரலாற்றை உறுதிப்படுத்துகிறது. எனவே மேற்சுட்டிய இவ்விளக்கங்களைக் காணும்பொழுது கிரேக்க உரோமர்களைக் காட்டிலும் அரபியர்கட்கே தமிழகத்தோடு நீண்ட நெடிய உறவு இருந்திருக்க வாய்ப்புண்டு என்பது உறுதியாகிறது. இவ்விடத்து யவனர் குறித்து முன் வைக்கப்படும் சில பாடலடிகளை ஆய்வுக்குட்படுத்துவது பொருத்தமாக அமையும்.

சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
விளங் கெழு முசிறி (அகம். 149. 8-11)

எனத் தொடங்கும் பாடல் அகநானூற்றில் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார் பாடியதாகும். இதில் சுள்ளி என்னும் பெயர்கொண்ட பேரி யாறு சேர அரசர்க்கு உரித்தானது. அவ்வழி யாற்றினது வெண்ணிற நுரை சிதறுமாறு தொழில் மாட்சிமைப்பட்ட யவனர்கள் கொண்டு வந்த நல்ல மரக்கலம். அதில் பொன்னைக் கொண்டு வந்து கொடுத்து மிளகைப்பெற்றுச் சென்ற அத்தகைய வளம் பொருந்திய முசிறிப் பட்டினத்தைப் பாண்டியன் முற்றுகையிட்டான் என்ற செய்தி பேசப்பட்டுள்ளது.

யவனர் என்போர் கிரேக்க உரோமர்களைக் குறிக்கும் என்று சுட்டப்பட்ட கருத்து ஒரு புறமிருக்க, சங்க இலக்கிய உரையில் சோனகர், எகிப்து, கிரேக்கம் முதலிய வேற்று நாட்டினர் என்று பொருள் வழங்கப்பட்டுள்ளமையும் ஈண்டு நினையத்தக்கதாகிறது. அவ்வகையில், அரபு நாட்டினைச் சார்ந்த மக்களைக் குறித்து வந்த யவனர் என்ற சொல்லாட்சி சங்க இலக்கியத்தில் பல்வேறு இடங்களில் பயன் படுத்தப்பட்டிருப்பதும், யவனர் பண்டமாற்று வியாபாரத்திற்காகவே தமிழகத்துக்கு வந்தனர் என்பதும் சங்க இலக்கிய உரை வழி கிடைக்கும் கூடுதல் செய்திகளாக உள்ளன.

மேலும் பெரும்பாணாற்றுப்படையில் வரும் யவனர் என்ற சொல்லிற்கு நச்சினார்க்கினியர் சோனகர் என்று குறிப்பிட்டுள்ளமையும் அடியார்க்கு நல்லார் தம்முடைய

சிலப்பதிகார உரையில் யவனர் என்ற சொல்லுக்கு துருக்கர் என்று பொருள் வழங்கப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. மேற்சுட்டப்பட்ட விளக்கங்களிலிருந்து யவனர்களுக்கு அரபியர் என்றும் சோனகர் என்றும் இருவிதமான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமையை உணரலாம்.[2]

சங்க இலக்கியத்திற்கு எழுதப்பட்ட உரை இடைக்காலத்தில் (10 நூற்றாண்டுக்குப் பிறகு) ஏற்பட்டவையாகும். பழைய மூலங்களுக்கு உரை எழுதும் போது உரை எழுதப்படும் காலமும் கணக்கில் கொள்ளப்படுவதுண்டு. அவ்வகையில் வந்த புதிய வரவுகளாவே சோனகர், துருக்கர் என்ற இரண்டு வடிவங்களையும் கருத இடமுண்டு. ஆனால் முசுலீம்களைச் சுட்டுகின்ற இவ்விரு வடிவங்களும் பிற்காலத்தியச் சொற்கள் என்பதும் இவ்விடத்துச் சிந்திக்கத்தக்க ஒன்றாக அமைகிறது.

யவனர்களைப் பிற்கால இலக்கியங்கள் சோனகர் என்று குறிப்பிடுகின்றன. முசுலிம்களைச் சுட்டுகின்ற இச்சொல் தமிழகத்திலும்,இலங்கையிலும் இன்றும் வழக்கிலுள்ளன. குறிப்பாகக் கடலோரப் பகுதி முசுலிம்களையே சோனகர் என்று குறிப்பர். இவ்விடத்து, ஆதி நாளில் வருகை புரிந்த அரபியர்களை யவனர் என்றும் அவர்களே இசுலாமியர்களாக மாறி முசுலிம்களாக இங்கே வருகை புரிந்த போது 'சோனகர்' என்றும் பாகுபாடு காட்டி அழைத்துள்ளனர் என்று கா.மு. ஷெரீப் (வள்ளல் சீதக்காதி வரலாறு ப.77) அவர்கள் கண்டுரைக்கும் கருத்து நினையத்தக்கதாகிறது. அ.கி. பரந்தாமனார் கூட யவனர் என்போர் அரபியர் என்று குறித்துள்ளதையும் இந்நூலில் அவர் எடுத்துக்காட்டுவர். அரபு தேசத்து அராபியர் பழங்காலத் தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறை முகங்களுக்கு வந்து, பெற்றுச் சென்ற மிளகை எகிப்து,உரோமபுரி முதலான மத்திய தரைக்கடல் பிரதேசங்களில் விற்றுள்ளனர்.

கி.மு. முதல் நூற்றாண்டில் யவனர் (கிரேக்கமும் உரோமரும்) அராபியரிடமிருந்து மிளகு வாணிபத்தைக் கைப்பற்றினார்கள். அதன் பின்னர் அவர்கள் நேரடியாகத் துறைமுகப் பட்டினங்களிலிருந்து மிளகைப் பெற்றுச் சென்றுள்ளனர் என்று மயிலை சீனி. வேங்கடசாமி (ப.113) குறிப்பிடும் வணிகத்தைப் பற்றிய கருத்தில் கூட முதன்முதலில் தமிழகத்திற்குக் கடல்வழி வந்த வணிகர் அரபியர் தான் என்ற கருத்தைக் காண முடிகிறது. ஆகவே, தமிழர்களோடு

ஆதியில் கடல்வழி வணிக உறவு வைத்திருந்த அரபியரைத் தவிர்த்து இறுதியில் வந்த கிரேக்க உரோமர்களை யவனர் என்று சங்கஇலக்கியப் புலவர்கள் பதிவு செய்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறும் யவனர் அரபியர்களைக் குறித்தது என்பதற்கு உதவும் மேலும் சில சான்றுகள். கிரேக்கம், உரோமன், அராபியா முதலான நாடுகளைச் சேர்ந்தோர்களைக் கிரேக்கர், உரோமர், அராபியர் என்று அந்தந்த நாட்டுப் பெயர்களிலேயே வழங்குவது மரபு. சங்க இலக்கியத்தில் சுட்டப்பெறும் யவனர் என்போரும் யவனம் என்ற ஒரு நாட்டுக்குரியவராக இருந்திருத்தல் வேண்டும். ஏனெனில், ஒரு நாட்டுப் பெயரோடு சேர்க்கப்படும் 'அர்' விகுதி அந்த நாட்டு மக்களைக் குறிப்பதற்காக இடப்படுவது. அந்த வகையில் யவனம் + அர் என்பதே 'யவனர்' என்றாகியிருத்தல் மொழி மரபு.

ஆனால், இங்குச் சுட்டப்பெறும் 'யவனர்' என்போர் கிரேக்கம் மற்றும் உரோம் நாட்டைக் குறிப்பவராக அமைந்துள்ளமை முரணுக்குரியதாக உள்ளது. உலக நாடுகளில் அப்படி ஒரு நாடு இருப்பதை நில வரைபடத்தில் காணமுடியவில்லை. மாறாக, ஐயோனியன் என்ற பெயரில் ஒரு கடல் இருந்துள்ளதை அறியமுடிகிறது. மத்திய தரைக்கடலுக்கு வடகிழக்கே அமைந்துள்ள இரண்டு கடல்களில் ஒன்று ஏஜியன் கடல், மற்றொன்று ஐயோனியன் கடல். இதில் ஐயோனியன் கடற் பெயர் தான் யவனம் என்பதோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.

அதாவது, ஐயோனியன் கடற்கரையை யொட்டியுள்ள பகுதியே அரபு நாடு. அது போன்றே அரபு தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியும், பாலசுதீனம், சிரியா, லெபனான், துருக்கி, சைப்பரசு முதலிய நாடுகளும் இந்தக் கடலையொட்டிள்ள பகுதிகளாக இருந்துள்ளன. உலக வரைபடத்தைப் பார்த்தால் இவை நன்கு துலங்கும். இத்தகையதொரு நிலவியற் சூழல் தான் அரபு நாட்டவர்களை ஐயோனியன் பகுதியோடு இணைக்க வைத்தது. ஐயோனியன் கடற்பகுதி அப்போது பரவலாக நன்கு அறியப்பட்ட ஒரு பெயராக இருந்திருக்கவேண்டும். ஆகவே தான் அரபு நாட்டவர்களை அரபியர் என்று குறிக்காமல் ஐயோனியன் என்று குறித்துள்ளனர். ஐயோனியன் என்பது தான் யவனர் என்று மருவியுள்ளது. இதனை, ஐயோனியன் கடற்பகுதியிலிருந்து கீழை நாடுகளுக்கு வந்தவர்களே ஒரு காலத்தில் ஐயோனியர் என்று

அழைக்கப்பட்டுப் பின்னர் 'யவனர்' என்று குறிக்கப்பட்டனர் என்ற மமுகம்மது உவைசு மற்றும் பீ.மு.அஜ்மல்கான் அவர்களுடைய கூற்று வழியே உறுதிப்படுத்தலாம் (இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாறு -I ப.3). ஆனால், இவர்களது இக்கூற்றின் அடுத்த நிலையாகச் சுட்டப்பட்டுள்ள கருத்து சில ஐயங்களை எழுப்புகின்றன.

அதாவது, மிகப்பழைய காலத்திலேயே இப்பிரதேசங்களிலிருந்த (ஐயோனியன் கடற்பகுதி) கிரேக்கரும் உரோமானியரும் முறையே அவ்வவ் பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து அப்பிரதேசங்களிலிருந்து வந்த அராபியர் நாளடைவில் யவனர் என வழங்கப்படலாயினர் (ப.3) என்ற கருத்தில் கீழை நாடுகளுக்கு முதலில் வந்தவர்கள் கிரேக்க உரோமர்கள் என்பதும் அதன் பிறகு வந்தவர்கள் அரபியர்கள் என்பதும் தெரியவருகின்றன. ஐயோனியன் கடற்பகுதியும் அரபு நாடும் அருகருகே இருக்கும் பட்சத்தில் அதைவிட வெகு தொலைவில் உள்ள கிரேக்க உரோம நாடுகளை ஐயோனியன் கடற்பகுதியோடு தொடர்புபடுத்தியிருக்கும் முயற்சி குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மேலும், யவனர் குறித்து முற்கூறப்பட்ட விளக்கங்களுக்கு இக்கூற்று முரணாக இருப்பதையும் காணமுடிகிறது. இச்சூழலில் அரேபிய யவனர்களைத் தெளிவுபடுத்துவதற்கு மேலும் சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன.

இவ்விடத்தில் யவனர்களைச் சோனகர் என்ற பெயரில் உரைக்கப்பட்டுள்ளமை ஆய்தற்குரிய ஒன்றாக எடுத்துக் கொள்ளலாம். "பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள செம்பொன்மாரி என்ற இடத்தில் வந்திறங்கிய இலங்கைப் படைகளை அங்கிருந்த சோனர்கள் வரவேற்றனர்" என்று கிருஷ்ணசாமி ஐயங்கார் குறிப்பிடுவர். (இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு -I, ப.19) அவ்வாறே பாண்டிய மன்னன் இரண்டாவது மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து (கி.பி. 1238) முசுலிம்களுக்கு வழங்கிய நிலக் கொடைகளைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டில் சோனகப்பள்ளி, சோனசாமந்தப் பள்ளி ஆகிய சொல்லாட்சிகள் முசுலிம்களைச் சுட்டும் பெயர்களாக இருப்பதும் கவனிக்கத்தக்கது.

சோனகர் என்ற பெயரில் அழைக்கப்படும் இலங்கை முசுலிம்கள் தங்களைப் பண்டைய அராபியரின் வழித்தோன்றல்களாகக் கருதிக் கொள்வது மரபு. அதற்காக அவர்கள் இங்குள்ள ஆதமலையைச்[3] சான்று காட்டுவர். இவ்வாறு முசுலிம் மக்களும் அவர் தம் மூதாதையரான அரபு மக்களும் தமிழகத்திற்கு

வந்த பின்னர் அழைக்கப்பட்ட பல்வேறு பெயர்களில்[4] (சோனகர், துலுக்கர், ராவுத்தர்) ஒன்று தான் சோனகர்.

தமிழரின் பண்டமாற்று வாணிகத்தின் போது தமிழில் வந்து கலந்த சொல்லாகவே சோனசம் கருதப் பெறுகிறது. அதாவது, பொன் என்பது சோன எனவும் வழங்கப்படும். யவனர்கள் கொண்டு வந்த பொன்னைக் கொடுத்து கறியைப் (மிளகு) பெற்றுள்ளனர் என்ற பாடற் கருத்து பொன் விளையும் நாடாக அரபுநாடு இருந்துள்ளதை அறியவைக்கிறது. எனவே அராபியர் ஐயோனியன் என்ற கடற் பகுதியிலிருந்து வந்ததால் யவனர் என்று குறிக்கப்பட்டதைப் போன்றே வாணிகத்திற்காகக் கொண்டு வந்த பொருளின் (பொன்) பெயராலும் சோனகர் என்று அழைக்கப்பட்டுள்ளனர் என்பது உறுதியாகிறது.

தமிழகத்தில் கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரையிலும் உள்ள இலக்கியம் மற்றும் கல்வெட்டுகளில் சோனகர் பற்றிய பதிவுகள் பரவலாக இடம்பெற்றிருப்பதை ம.முகம்மது உவைசு மற்றும் பீ.மு.அஜ்மல் கான் ஆகியோர்களுடைய இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு-I என்னும் நூலில் (பக்.46 - 60) விரிவாகக் காணலாம். மேலும் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள யவனர் என்போர் அராபியர்களைக் குறித்தது என்பதற்குச் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ள புரவி என்ற சொல்லாட்சியையும் ஒரு முக்கியச் சான்றாகக் கொள்ளலாம்.

சங்க இலக்கியத்தில் குதிரையைக் குறிக்கக் கூடிய 'புரவி' என்ற சொல் மொத்தம் 72 இடங்களில் பயின்று வந்துள்ளதை பெ.மாதையன் அவர்கள் சுட்டுவர். (சங்க இலக்கியச் சொல்லடைவு) குதிரை தமிழ் நாட்டுக்குரிய பூர்வீக விலங்கு அன்று. அது சிந்து, பாரசீகம், அரபி ஆகிய நாடுகளிலிருந்து கடல் வழியாகக் கப்பல்களில் கொண்டு வரப்பட்டதாகும்.

> நீரில் வந்த நிமிர் பரிப்புரவி (பட்டின.185)
>
> விழுமிய நாவாய் பெருகி நீரோச்சுநர்
> நனந்தலை தேஎத்து நன்க லனுய்ம்மா
> புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்
> (மதுரை.321-323)

முதலான பாடலடிகள் குதிரைகள் நாவாய் வழியாகக் கொண்டு வந்த செய்தியை உணத்தும். தென்னிந்தியாவின் காலநிலை குதிரைகளின் வளர்ப்புக்கு ஏற்புடையதாய் இருக்கவில்லை என்று வெளிநாட்டுப்

பயணி மார்கோபோலோ சுட்டும் கருத்து தமிழர்களுக்குக் குதிரை அந்நியப்பட்டது என்பதை மெய்ப்பிக்கிறது. இதைப் பின்வரும் கருத்தொன்று வழியே உறுதிப்படுத்தலாம்.

தமிழகத்து இறக்குமதி செய்யப்பட்ட குதிரைகளில் பல சரியான பராமரிப்பு இல்லாமையாலும் எப்படிப் பராமரிப்பது என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியாததாலும் இறந்து போயின. கட்டுக் கடங்காத ஆற்றல் மிக்க அக்குதிரைகளைப் போர்ப்பயிற்சிக்குப் பழக்குவதற்குச் சரியான ஆட்களும் இல்லை. எனவே அக்குதிரைகளைப் பராமரிக்க பழக்கப்படுத்த வாணிகத்திற்காக வந்த முசுலிம்களையே தமிழக ஆட்சியாளர்கள் நியமித்தனர். முசுலிம் குதிரை வீரர்கள் 'இராவுத்தர்' என்று அழைக்கப்பட்டனர் . அரபு மொழியில் ரா - இத் என்றால் 'குதிரைவீரன்' என்று பொருள். இத்தகைய இராவுத்தர் என்னும் முசுலிம் குதிரை வீரர்கள் தங்குவதற்கு ஒதுக்கப்பட்ட பகுதிகள் தான் 'பாளையம்' என்று முதலில் அழைக்கப்பட்டது (தமிழர் வாழ்வில் மொழியில் இசுலாத்தின் தாக்கம் ப.145).

தமிழிலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இராவுத்தர் என்ற இச்சொற் பயன்பாட்டை அருணகிரி நாதருடைய கந்தர் அலங்காரம் மற்றும் கந்தர் அநுபூதி ஆகியவற்றின் வழி அறியலாம்.

'சூர்க் கொன்ற ராவுத்தனே'

மாமயிலேறும் ராவுத்தனே'

தமிழர்களுக்கு குதிரையைப் பற்றி அறியும் வாய்ப்பில்லாத இச்சூழலில் தமிழகத்துக் குதிரை வீரர்களாக யவனர் இருந்துள்ளதைச் சங்க இலக்கியப் பாடலொன்று சுட்டும்.

மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்கு வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர் (முல்.59-1)

என்ற பாடல் யவன வீரர்கள் முழங்கால் வரையிலான குறுகிய வட்டுடையை அணிந்து உடலில் சட்டை அணிந்து குதிரையோட்டும் மத்திகையைச் (சம்மட்டியை) கையில் வைத்திருந்த செய்தியை அறிவிக்கிறது. தமிழகத்து முசுலிம்கள் தங்களுக்கென்று தனி வடிவமைப்புடன் கூடிய உடையை உடுத்தியிருந்ததைச் சுட்டும் திருவாசகப் பாடல் ஒன்று கவனிக்கத்தக்கது.

வெள்ளைக் கலிங்கத்தார் வெண்திரு முண்டத்தார்
பள்ளிக்குப்பாயத்தார் அன்னே என்னும்

பள்ளிக்குப் பாயத்தார் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளம் கவர்வரால் அன்னே என்னும்
(திருவாசகம், அன்னைப்பத்து)

இப்பாடலில் முசுலிம் மக்கள் வெள்ளை நிறக் குப்பாயத்தை அணிந்து தலையை மொட்டையடித்துப் பள்ளிவாசலுக்குச் சென்ற செய்தியும் 'குப்பாய' உடையில் சிவபெருமான் காட்சியளித்த செய்தியும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். முசுலிம் மக்கள் கழுத்திலிருந்து கணுக்கால் வரை அணியும் மேலங்கியைக் குப்பாயம் என்று அழைப்பர்.

அரிமர்த்தனப் பாண்டியன் அமைச்சரவையில் இருந்த மாணிக்கவாசகர், பாண்டிய மன்னனுக்காகக் குதிரை வாங்க திருப்பெருந்துறைக்குச் சென்றது அரபி வணிகரிடையேதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ் நாட்டில் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் அரபு நாட்டு முசுலிம்களின் வருகை அதிக அளவில் இருந்தது என்பதைச் சுட்டும் கே.ஏ. நீலகண்ட சாசுதிரியார் கூற்று இவ்விடத்து நினையத்தக்கது. எட்டாம் நூற்றாண்டில் நாம் அடி எடுத்து வைத்ததும் புகழ்பெற்ற அரபுப் பயணிகள், வரலாற்றாசிரியர்கள், நிலவியல் வல்லுநர்கள் ஆகியோரின் வரவு பெருமளவில் தொடங்குவதைக் காணலாம் (கவி. கா.மு. ஷெரீப், வள்ளல் சீதக்காதி வரலாறு, ப.82).

மாணிக்க வாசகருடைய காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டாதலால் மாணிக்கவாசகர் குதிரை வாங்கியது அரபு முசுலிம்களிடையே தான் என்பது உறுதியாகிறது. அரபு நாட்டிலிருந்து வந்த குதிரைகள் முதன்முதலில் வந்திறங்கிய இடம் தமிழகத்திலுள்ள காயல்பட்டினம் என்று மார்கோபோலோ தம்முடைய பயணக்குறிப்பில் சுட்டுவர் (இசுலாமிய தமிழிலக்கிய வரலாறு-I, ப.26). இராமநாதபுரத்திலுள்ள இன்றைய கீழக்கரை தான் அன்றைய கொற்கையும் காயல்பட்டினமும் என்பது கா.மு.ஷெரீப் அவர்களுடைய கருத்து. [5]

தமிழர்கள் குதிரைகளைப் பற்றி அறியாதது போலவே அரபியர் யானைகளைப் பற்றி அறியாதவர்களாக இருந்துள்ளனர். யானைக் கோடுகளை (தந்தம்) வெளிநாட்டு வாணிகர் தமிழகத்திலிருந்து வாங்கிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அதாவது தமிழகத்தில் குதிரைகள் வாழ்வதற்கேற்ற சூழல் ஏற்றதாக அமையப் பெறாதது போலவே அரபு நாட்டில் யானைகள் வாழ்வதற்கேற்ற சூழலும் அமையப் பெறவில்லை. ஆகவே, தான் தேவை கருதி அவை

அந்தந்த நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்புன்புலத்திலேயே அரபு நாட்டில் காணப்பட்ட யானைகளைக் கருதுதல் வேண்டும். சீறாப்புராணத்தில் குறிக்கப்படும் 'யானை ஆண்டு' என்ற காலப் பகுப்பு இதனைத் தெளிவுபடுத்தும்.

சீறாப்புராணத்தின் முதல் காண்டமான விலாதத்துக் காண்டத்தில் முதலாவதாகச் சுட்டப் பெறுவது சிக்கந்தர் துல் கர்னைன் (அலெக்சாண்டர்) சகாப்தம்; இரண்டாவதாக அமைவது யானை ஆண்டு. கி.பி.570இல் மக்காவில் முதன்முதலில் யானைகள் காணப்பட்டதால் அது 'யானை ஆண்டு' என்றழைக்கப்பட்டது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் இந்தக் காலத்தில் பிறந்த காரணத்தால் அவரது பிறந்த அந்த ஆண்டை 'யானை ஆண்டு' என்று குறித்தனர் (விளக்கம். இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு-I, ப. 409).

இந்தப் பின்னணியில் தான் இந்தியாவில் குதிரைகளின் தேவையை உணர்ந்த முசுலிம் வாணிகர்கள் அரபு நாடுகளிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்து வாணிகம் செய்துள்ளனர். இதனால் அவர்களுக்குக் குதிரைவரி, குதிரைப்பந்தி, குதிரைக்காணிக்கை போன்ற பல்வேறு வரிகள் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தகுந்தது. மேலும் சோழர்கள் காலத்தில் இவ்வரி சோனக வரி என்ற பெயரில் குறிக்கப்பட்டுள்ளமையை அக்கால கல்வெட்டுகள் குறிப்பிடுவதையும் பார்க்கலாம். தமிழகத்தில் கொற்கை,தொண்டி முதலான துறைமுகங்களில் குதிரை வாணிபம் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

கி.பி.7ஆம் நூற்றாண்டில் மலிக்குல் இசுலாம் ஜமாலுத்தீன் என்ற புகழ் பெற்ற வணிகர் ஆண்டுதோறும் கைசு தீவிலிருந்து 1400 குதிரைகளை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்தமையை அப்துல்லா வசுஸாப் அவர்கள் சுட்டுவர். அதுபோலவே தமிழகத்திற்கு ஆண்டுதோறும் 1600 குதிரைகள் அராபியத் துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதை நீலகண்ட சாசுதிரி சுட்டுவர். இப்படி தமிழகத்தில் நடந்த குதிரை வாணிகம் குதிரை இறக்குமதி போன்ற நிகழ்வுகள் தமிழக வரலாற்றில் மிகுதியாக இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். மேற்சுட்டிய இச்செய்திகள் தமிழர்களுக்கும் அரபியர்களுக்குமிடையே நிலவிய வளமான வர்த்தகச் சூழலை விளங்கவைக்கும். தமிழகத்தில் நடைபெற்ற குதிரை வணிகம் மற்றும் குதிரை வளர்ப்புச் சூழல் ஆகியனவற்றை க.ப. அறவாணன் அவர்களுடைய தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? என்ற நூலில் பக். 263-267இல் விரிவாகக் காணலாம்.

இசுலாமிய நெறி

தமிழில் இசுலாமிய மரபைக் காணும் முன் முதலில் இசுலாமிய நெறியைக் காண்பது அவசியம். அரபு நாட்டில் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு உதயமான இசுலாமியம் இறைத்தூதர் முகம்மது நபி(ஸல்) அவர்களால் பரப்பப்பட்டது. முகம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனின் இறைத் தூதராவர். இவருக்குமுன் எண்ணற்ற இறைத்தூதர் வாழ்ந்து மறைந்துள்ளனர் என்பது திருக்குர்ஆன் புலப்படுத்தும் செய்தியாகும்.

நபி என்னும் அராபியச்சொல் ஆங்கிலத்தில் (prophet) என்று மொழி பெயர்க்கப்படுகிறது. இறைவனுடன் நேரடித் தொடர்பு கொண்டு அவன் அறிவிக்கும் கட்டளைகளையும் வாக்குகளையும் அப்படியே ஒப்பிப்பவர் நபி ஆவர். உலகில் 1,24,000 நபிமார்கள் தோன்றியுள்ளனர், அவர்களுள் இறுதியானவரே முகம்மது நபி. முதலில் வந்தவர் ஆதம் (அலை). 1,24,000 நபிமார்களின் செயல்களை நிறைவு செய்த பெருமை முகம்மது நபி (சல்) அவர்களையே சாரும்.

நபிகள் நாயகம் கி.பி.570 ஆகஸ்து 29 அன்று அரபு நாட்டைச் சேர்ந்த திரு மக்கா நகரில் அப்துல்லா - ஆமினா தம்பதியார்க்கு மகனாகப் பிறந்தார். (குலாம் ரசூல், இந்தியாவை ஆண்ட முசுலிம் மன்னர்கள், ப.28) நபி பெருமானார் வரலாற்றை எழுதிய N.B.அப்துல் ஜப்பார் என்பவர் கி.பி.571 ஏப்ரல் 20 எனச் சுட்டுவர் (ப.21) பிறக்குமுன் தந்தையையும் பிறந்த ஆறு ஆண்டுகளில் தாயையும் இழந்து தன்னுடைய பெரியப்பா அபுதாலி அரவணைப்பில் வளர்ந்த நபிகள் நாயகம் மிகப் பெரிய வணிகக் குலத்தைச் (குறைஷி குலம்) சேர்ந்தவராவார்.[6]

பல உருவ வழிபாட்டை உடையவராகத் திகழ்ந்த குறைஷி குலத்தார் மூடப்பழக்க வழக்கங்கள் மலிந்த பிற்போக்குவாதிகளாகவும் உயிர்க் கொலைக்கு அஞ்சாத மூர்க்கக் குணம் படைத்தவராகவும் மதுபானப் பிரியர்களாகவும் பெண்களை

இழிவுபடுத்தும் மிருகக்குணம் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர். முகம்மது நபி (ஸல்) அவர்களின் மூதாதையார் குறைஷி குலத்தைச் சார்ந்தவராயினும் அவர்கள் ஏனைய குறைஷிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தூய இறைச் சிந்தனையும் இரக்கக் குணமும் படைத்தவர்களாக இருந்துள்ளனர்.

முகம்மது நபி (ஸல்)அவர்களுடைய தாத்தா அப்துல் முத்தலீப் அவர்களுடைய குடும்பத்தார் மெக்காவில் உள்ள கஃபா ஆலயத்திற்கு வந்துபோகும் யாத்திரிகர்களுக்குத் தண்ணீர் அளிக்கும் தொண்டினைச் செய்து வந்தனர். திடீரென்று அங்குத் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டதால் செய்வது ஒன்றும் புரியாமல் திகைத்தபோது அங்கு அவர்களுடைய மூதாதையர் இசுமாயில் என்ற தீர்க்கதரிசியால் 'ஜம்ஜம்' என்ற ஒரு கிணறு தோண்டப்பட்டது அறிய வந்தது.

ஆனால், அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைத் தெரியாமல் இருந்த போது தான் இறைவனிடம் முறையிட்டுள்ளனர். அப்பொழுது கிணறு கண்டுபிடிக்கப்பட்டால் தன்னுடைய மக்கள் பதின்மரில் ஒருவரைப் பலியிடுகிறேன் என்று அப்துல் முத்தலீப் பிரார்த்தனை செய்து கொண்டார். அதன் பயனாக ஜம்ஜம் கிணறு கண்டுபிடிக்கப்பட்டு பயணிகளின் தாகத்தைத் தணித்துள்ளனர். இப்பொழுது அப்துல் முத்தலீப் அவர்களுக்கு வயதாகி விட்டதால் இறைவனுக்குச் செய்து கொடுத்த அந்தச் சத்தியத்தைக் காப்பாற்ற, கஃபா கோவிலுக்குச் சென்ற அப்துல் முத்தலீப் பூசாரியின் ஆலோசனையின் படி பலி கொடுக்கும் முடிவுக்கு வந்தார். அதன்படி பதின்மருடைய பெயர்களும் தனித்தனிச் சீட்டுகளில் எழுதப்பட்டன. அவ்வகையில் தெரிவு செய்யப்பட்ட பெயர்தான் அப்துல்லா.

முத்தலீப்பின் ஐந்தாவது மகன் அப்துல்லா, இவருடன் பிறந்தோர் பதினெட்டுப் பேர். அவர்களில் ஆடவர் பன்னிருவரும்,பெண்கள் அறுவருமாவர். மகனைப் பலிகொடுப்பதில் ஏற்பட்ட மனக்குழப்பத்தின் காரணமாக (பிள்ளைப்பாசம்) இறுதியில் நூறு ஒட்டகங்கள் பலி கொடுக்கப்பட்டு, அப்துல்லா காப்பாற்றப்பட்டார். அதுபோலவே, இந்நிகழ்ச்சி நடப்பதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பு இப்ராஹீம் நபி தன்மகன் இசுமாயில் நபியைப் பலியிடுவதற்காகக் கஃபாவிற்கு அழைத்துச் சென்றபோது அவரும் இறைவனின் அருளால் காப்பாற்றப்பட்டுள்ளார். இப்படித் தனக்கென வாழாப் பிறருக்கென வாழும் அருந்தொண்டு படைத்தவர்களாக முகம்மது நபி (ஸல்) அவர்களுடைய முன்னோர்கள் இருந்துள்ளனர்.

இத்தகைய அருளுள்ளம் கொண்டவர்களுக்கு இடையே அரக்க குணம் கொண்ட குறைஷிகளும் இருந்துள்ளனர். ஒரே இறைவணக்கத்திற்காக இப்ராஹிம் அவருடைய மைந்தர் இசுமாயில் என்பவர்களால் எழுப்பப்பட்ட கஃபா ஆலயம் முகம்மது நபி(ஸல்) காலத்தில் குறைஷிகளின் மூடப்பழக்கவழக்கங்கள் மண்டிப் போன கூடாரமாக மாற்றப்பட்டுவிட்டது.

நபிகள் நாயகம் தோன்றி உருவமற்ற ஓர் இறைநெறியைப் பரப்புவதற்கு முன்னர் சுமார் 500 ஆண்டு காலமாக அந்தப் புனிதப் பள்ளி வாயிலில் (கஃபத்துல்லா) உருவ வணக்கம் நிலவி வந்தாலும் அதற்கு முன்னர் உருவ வழிபாடு இல்லாத ஒரு புனித ஆலயமாகத்தான் இருந்தது என்பது வரலாறு. ஆனால் உருவ வழிப்பாட்டுக் கொள்கை ஏற்பட்ட பிறகு நாளொன்றுக்கு ஓர் உருவம் வீதம் ஓராண்டின் முந்நூற்று அறுபது நாட்களுக்கும் முந்நூற்று அறுபது உருவங்களுக்கான வழிபாடுகள் கஃபாவின் உள்ளேயும் வெளியேயும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

இத்தகைய உருவங்கள் விலங்கு போன்றும் மனிதச்சாயல் போன்றும் இருப்பதைத் தவிர்த்து மரம், மண், கல், சூரியன், சந்திரன், விண்மீன் ஆகியனவற்றையும் குப்புற வீழ்ந்து கும்பிட்டெழும் வழக்கத்தை உடையவர்களாகக் குறைஷிகள் இருந்துள்ளனர். மேலும், கஃபாவிற்கு ஆண்டுதோறும் உருவ வழிபாட்டிற்காக வரும் மக்கள் அவ்வுருவங்களைச் சுற்றி நிர்வாண கோலத்துடன் வலம் வந்துள்ளனர். சில சமயங்களில் அடுப்பு மூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் கற்களும் வழிபாட்டுக்குரிய உருவங்களாக இருந்துள்ளன. யாதொரு வேலையைத் துவங்குமுன் அவர்கள் தங்களின் வழிபாட்டு உருவங்களின் இணக்கத்தைப் பெறுவதற்காகக் குறிகேட்ட பிறகே தொடங்குவார்கள். மதக் கொள்கையில் இப்படி எண்ணற்ற மூடப்பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்த குறைஷி குலத்தார்களுடைய வாழ்க்கையே மூடத்தனங்களின் உறைவிடமாகத் திகழ்ந்தன.

மேலும், குறைஷிகளிடம் பழிக்குப்பழி வாங்கும் எண்ணம் அறமாகக் கருதப்பட்டுள்ளது. எதிரி அகப்பட்டால் அவர்களுடைய மண்டையோட்டில் மது அருந்துவேன் என்று சூள் செய்வது அன்றைய அரபியரின் வழக்கமாக இருந்துள்ளது. குதிரைப் பந்தயத்தில் ஏற்பட்ட ஒரு சிறு தவறு நாற்பதாண்டு காலப் போராக வெடித்துள்ளது. ஒரு பெண்ணின் ஒட்டகம் மற்றொருவருடைய

மேய்ச்சலில் மேய்ந்ததால் ஏற்பட்ட சண்டை பல்லாண்டு காலம் நிகழ்ந்துள்ளது.

பெண்களை அக்கால அரபியர்கள் மிகக் கேவலமாக, இழிவாக நடத்தியுள்ளனர். போரில் இறந்து பட்டவர்களின் மனைவிகளை வெற்றி பெற்றவர் தங்களது காதற் கிழத்திகளாகவும் தகப்பனின் மறுதார மனைவி (மாற்றந்தாய்) தகப்பனுக்குப் பின் மகனுக்கு மனைவியாகி விடுவதும் போன்ற வழக்கங்கள் இருந்துள்ளன. அவர்களிடம் ஒருவர் இத்தனை மனைவிகளைத்தான் மணக்க வேண்டும் என்ற உச்ச வரம்பு ஏதுமில்லை. மேலும், ஒரு பெண் தன்னுடைய கணவனது சொத்திலிருந்தோ அல்லது தமது சகோதரனின் சொத்தில் இருந்தோ ஒரே ஒரு பைசாவைக் கூட உரிமையாய் பெறமுடியாது. இப்படிப் பெண்களுக்கு எதிரான எண்ணற்றக் கொடுமைகள் அன்றைய அரபு நாடு முழுவதும் பரவியிருந்தது.

இத்தகையதொரு சூழ்நிலையில்தான் பெண் குழந்தைகள் புதைகுழிக்கு இறையாகியுள்ளனர். கருவுற்ற மனைவியர்களுக்கு அவளுடைய கணவனால் கட்டளைகள் விதிக்கப்பட்டுள்ளன. பிரசவிக்கும் சமயத்தில் ஆழமான ஒரு குழி தோண்டி அதனருகேதான் அவள் பிரசவிக்க வேண்டும். ஏனெனில், பிறக்கும் குழந்தைப் பெண்ணாக இருந்தால், அதனை அப்பொழுதே குழியில் தள்ளிப் புதைத்து விட வேண்டும். அப்படிப் பெண்ணாகப் பிறந்த ஒரு குழந்தையைக் கொல்ல மணமில்லாத தாய் அதனை அண்டை வீட்டாரிடம் விட்டு வளர்க்கச் சொன்னாள். எட்டு வயது நிரம்பிய அந்தக் குழந்தையின் அழகும் அறிவுக் கூர்மையும் வணிகம் முடித்துத் திரும்பி வந்த அவளது கணவனைக் கவர்ந்தன. தன்னுடைய மகள் என்று தெரியாமலேயே அவள் மீது அவன் அன்பு கொண்டான். இதனைக் கண்ணுற்ற மனைவி அது நம் குழந்தைதான் என்று உரைக்க, சினம் கொண்ட அவன் அக்குழந்தையைக் கொல்லத் திட்டமிடுகிறான்.

ஒரு நாள் மனைவி உறங்கி விட்ட சமயத்தில் குழந்தையைத் தனியே அழைத்துச் சென்று குழிபறித்து அக்குழந்தையை அதனுள் தள்ளி மண்ணால் மறைத்த பொழுது, குழந்தை அப்பா என்ன செய்கிறீர்கள் எப்படி நான் இங்குத் தனியே இருப்பேன் என்று அழுது கொண்டு கேட்டது. மனமிறங்காத அவன் குழந்தையின் உடல் மறையும் வரை மண்ணைத் தள்ளிப் புதைத்த கொடுமை ஏதோ தனியொரு குடும்பத்தில் நிகழ்ந்தவை அல்ல. அன்றைய அரபு நாடு

முழுவதும் இருந்த வழக்கமாகும். இந்நிகழ்ச்சியை அவர் (குழந்தையைப் புதைத்தவர்) முசுலீமான பின்னர் ஒரு நாள் நபிகள் நாயகம் அவர்களிடம் கூறி அக்கொடுமையை நினைத்தால் இன்றைக்கும் தன் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டிருக்கிறது என்று கூறினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த நபிகள் நாயகம் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடியது.

நபிகள் நாயகம் பிறப்பதற்கு முன்பும் பிறந்த பின்பும் இதுபோன்ற கொடுமைகள் மிகுதியாக இருந்துள்ளதை மேற்கண்ட நிகழ்வுகள் வழியே உணர முடியும். நபிகள் நாயகம் இறைவன் தனக்கு ஓதப்பட்ட கருத்துகளைக் குறைஷிகளிடம் எடுத்துச் சொன்ன பிறகே அவர்கள் நாயகத்தை எதிர்த்துள்ளனர். குறிப்பாகக் குறைஷிகளின் பலதெய்வ உருவ வழிபாட்டை நபிகள் நாயகம் எதிர்த்த போதுதான் அவருக்குப் பல்வேறு வகையான இன்னல்கள் இழைக்கப்பட்டுள்ளன.

நபிகள் நாயகம் இயல்பிலேயே இரக்கச் சிந்தனை கொண்டவராகவும் நேர்மையானவராகவும் இருந்ததை அவர் மேற் கொண்டிருந்த வாணிகத்தின் வழியே அறிந்த கதீஜா அம்மையார் அவரை தம்முடைய வணிகக் குழுவில் இணைத்துள்ளார். நபிகள் நாயகத்திற்கு அப்பொழுது வயது இருபத்தைந்து. நாற்பது வயதை அடைந்த கதீஜா அம்மையார் கணவனை இழந்த விதவை; மூன்று குழந்தைகளுக்குத் தாய். நாயகத்தை மணமுடிப்பதற்கான விருப்பத்தை கதீஜா தமது தோழி நபீஸா வழியாகத் தெரிவித்தபோது கதீஜா அவர்களின் பண்பு நலன்களை அறிந்த நாயகம் அம்மையாரை தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டுள்ளார். இப்படித் தன்னுடைய திருமணம் முதல் இறக்கின்ற வரையில் நாயகம் எண்ணற்ற சாதனைகளையும் சீர்த்திருத்தங்களையும் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்தது.

மேலும், அரபு சமூகத்திலிருந்த ஏழை பணக்காரன் என்ற வர்க்க வேறுபாட்டைக் களைவதிலும் முகம்மது நபி (ஸல்) அவர்கள் பெரும் சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளார். அதன்படி ஏழை எளியவர்களின் இன்னல் துடைக்கவும் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கவும் ஹில்புல் புசூல் (Hil Ful Fuzool) என்ற பெயரில் நபிகள் நாயகம் ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்துள்ளார். நபிகளுக்கு அப்பொழுது இருபத்து மூன்று வயது என்பது நினையத்தக்கது. எந்த வித சட்டதிட்டமோ கட்டுப்பாடோ கொஞ்சமும் இல்லாதிருந்த அரேபியரிடையே

முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒரு போலீசு காவல் திட்டம் என்று இதனைக் கருதுவர்.

தாம் மேற்கொண்ட சீர்த்திருத்தங்களின் காரணமாக அரபிய குறைஷி குலத்தவர்களுடைய தொந்தரவுகளுக்கு ஆளாகிய நாயகம் மக்காவிலிருந்து மதீனாவிற்குச் செல்ல வேண்டிய நிலைக்கு ஆளானார்கள். மதீனாவிற்குச் சென்ற நாயகம் மதீனா நகர மக்களிடமும் மிகுந்த அன்பையும் வரவேற்பையும் பெற்றிருந்தார். நபிகள் நாயகம் தன் தோழர்களுடன் இணைந்து மேற்கொண்ட சகோதரத்துவம், பெண் பெருமை, ஏழைகளுக்கு உதவுதல் என்ற பல்வேறு திட்டங்களுக்கிடையே பொது மக்களின் நலனுக்கென்று பைத்துமால் (நிதிச்சாலை) என்ற ஒரு பொது நிதியகத்தையும் அங்கு உருவாக்கினார். மக்காவிலிருந்து மதீனாவிற்கு வந்த முசுலிம்களின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அவர்களுடைய அன்றாட வருமானத்தில் ஒரு சிறு பகுதியைச் சேமிக்கும் ஒரு பொதுநிதியகமாக அது அமைந்திருந்தது. அதாவது, ஒவ்வொரு முசுலிமும் இறைவனின் கட்டளைப்படி ஆண்டு தோறும் தங்கள் சொத்து மதிப்பில் இரண்டரை சதவீதம் அரசாங்கப் பொதுநிதிக்குச் செலுத்த வேண்டும் என்று நபிகள் கட்டளையிட்டார்.

பொதுப் பணத்தைப் பொதுமக்களுக்காகவே செலவிட்ட நபிகள் நாயகம் 'நான் ஓர் ஏழை' இறுதி வரை ஏழையாகவே இருக்க விரும்புகிறேன் என்ற கொள்கையோடு பொதுப் பணத்திலிருந்து ஒரு பைசாவைக் கூட தமக்காகச் செலவழித்தது கிடையாது. அண்ணல் அவர்கள் மரணப் படுக்கையில் இருந்த போது ஆயிஷாவிடம் ஏழு தினார் இருப்பது நினைவுக்கு வந்ததும் அதை உடனே அறம் செய்து விடுமாறு பணித்துள்ளார். செல்வத்தை உலகில் விட்டு வந்துள்ள நிலையில் அவர்கள் இறைவனைச் சந்திக்க விரும்பவில்லையாம். அதன்படி அன்றிரவு அவர்களின் இல்லத்தில் விளக்கெறிக்கக் கூட எண்ணெய் இல்லாதிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. நபிகள் நாயகம் தம்முடைய இளமைப்பருவம் முதல் இறக்கின்ற வரையில் இறை வழி நின்று பிறர்க்கென ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்கா.

நபிகள் நாயகம் அவர்களின் பொதுவாழ்க்கை முழுவதையும் பல ஆயிரம் பக்கங்களுக்கு விரித்துரைக்க முடியும். அவை இன்றைய சமூகத்திற்கு முற்றும் பொருந்தக் கூடிய ஒன்று. எனினும் விரிவு கருதியும் இசுலாமிய நெறியை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வை விடுத்து வரையறுக்க முடியாது என்ற நோக்கம் கருதியும் நாயகம் குறித்த மிகச் சுருக்கமான அறிமுகம் இங்கே இடம்பெற்றது.

மேலும், நபிகள் நாயகம் தம்முடைய இறுதி நாளில் மக்களுக்காக அறிவித்த இறுதிச் செய்தியைச் சுட்டுவதும் இசுலாமிய நெறியைப் புரிந்து கொள்வதற்குத் துணைபுரியும். அவற்றுள்,

- இன்று முதல் நீங்கள் என்றுமே வட்டி (ரிபா) வாங்கக் கூடாது; அறியாமைக் காலத்தில் நிலவிய பழிக்குப் பழி வாங்கி உயிர் போக்கும் வழக்கமும் இனிக்கூடாது.
- பெண்டிர் என்போர் இறைவனால் ஆடவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் அடைக்கலப் பொருள் அவர்களிடம் அன்போடு நடந்து கொள்ளுங்கள்.
- முசுலிம்களுக்கு முசுலிம்கள் உடன் பிறந்தார் போன்றவர்கள் என்பதை நீங்கள் நன்கு உணர வேண்டும். நீங்கள் எல்லோரும் சரிநிகர் சமமானவர்கள். உங்கள் எல்லோருக்கும் ஒரே விதமான உரிமைகளும் கடமைகளும் இருக்கின்றன. நீங்கள் எல்லோரும் உடன் பிறந்தோர்களாவீர்கள்.
- உங்களுக்குச் சொந்தமான இந்த மண்ணில் சாத்தான் தன்னுடைய அதிகாரத்தை இனிச் செலுத்த வழியில்லாமற் போய்விட்டது. நீங்கள் அற்ப அலுவல்களாயினும் அவனுக்கு வழிபாடு நடத்துவீர்களானால் அவன் பெரு மகிழ்வு பெற்று வருவான். எனவே உங்கள் 'ஈமான்' (ஓரிறை நம்பிக்கை) விசயத்தில் நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

என்ற வாக்கியங்களைக் குறிப்பிடத்தகுந்த முக்கிய நெறிகளாகக் கொள்ளலாம். இது போன்று மக்களை நன்னெறிப் படுத்துவதற்காக அவ்வப்பொழுது நபிக்கு மொழியப்பட்ட எண்ணற்ற இறையறிவிப்பு வாசகங்களே 'குர்ஆன்' என்பது இசுலாமிய நெறி பிறழா அறிஞர்கள் சுட்டும் கருத்துகளாகும்.

உலக மக்கள் அனைவருக்குமான பொது வாழ்க்கை முறையை, நெறியை இசுலாமியம் கற்பிப்பதால் இசுலாத்தை ஒரு மதம் என்பதைக் காட்டிலும் ஒரு மார்க்கமாகவே கருதுவர். 'இசுலாம்' என்ற அரபிச் சொல் கீழ்ப்படிதல், கட்டளைகளை நிறைவேற்றுதல் மற்றும் சாந்தி சமாதானம் ஆகிய பொருள்களைக் குறிக்கும். 'ஸலாம்' (சாந்தி) என்னும் மூலத்தினின்று பிறந்ததே 'இசுலாம்'. 'இசுலாம்' இறைவனால் இறைத்தூதரான முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு ஓதப்பட்டதால் அதை 'முகமதியம்' 'முகம்மதியர்' என்ற சொற்களால் அழைப்பது

பெரும் பிழையாகும் என N.B.அப்துல் ஜப்பார் அவர்கள் சுட்டும் கருத்து குறிப்பிடத்தகுந்தது (நபி பெருமனார் வரலாறு ப.43). இந்தக் கருத்துக்கு ஒப்பவே மு.அப்துல் கறீம் என்பவரும் தம்முடைய கருத்தைப் பதிவு செய்வார் (இசுலாமும் சமய நல்லிணக்கமும், ப.34).

முசுலீம் மக்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது 'அசுலாமு அலைக்கும்' என்று வாழ்த்துக் கூறுவதும் பதிலுக்கு அவர்கள் 'அலைக்கும் அசுலாம்' என்று விடை கூறுவதும் இசுலாமியர்களிடையே காணலாகும் ஒரு பொது மரபாகும். 'அசுலாம் அலைக்கும்' என்றால் 'உங்களின் மீது சாந்தியுண்டாகக் கடவது' என்று பொருள். முசுலீம்களிடையே காணலாகும் இந்தப் பரந்துபட்ட மனப்பான்மைக்கு அவர்களது இறைக்கொள்கையே அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும், முசுலிம்கள் எந்தச் செயலைத் தொடங்கும் முன் இறைவனுடைய பெயரால் தொடங்குவதைப் போன்றே, உணவு உண்ணத் தொடங்கும் போதும் இறைவனை நினைந்து அவனுக்கு நன்றி செய்பவராக இறைவன் பெயரால் 'பிசுமில்' ஓதி உண்ணுவது இசுலாமிய மரபு. அதே போன்று உண்டு முடித்ததும் இறைவனுக்கு நன்றி கூறும் முகத்தான் 'அல்ஹம் துலில்லாஹ்' (இறைவனுக்கே எல்லாப் புகழும்) என்று கூறுவதும் மரபாக இருந்து வருகிறது.

இறைவன் தன்னுடைய தூதர் நாயகத்திற்கு வாழ்த்து வழங்கிப் பெருமைப் படுத்திய செயல் இந்தப் பின்புலத்தில் தான் நடைபெற்றுள்ளது. ஆகவே தான் ஒவ்வொரு முசுலிமும் முகம்மது நபியை (ஸல்) வாழ்த்த வேண்டும் என்பதாக குர் ஆனின் கட்டளை அமைகிறது. எனவே, நபியின் பெயர் உச்சரிக்கப்படும் போது இறைவனின் சாந்தியும் சமாதானமும் இவர் மீது சொரியக்கடவது என்னும் பொருளமைந்த "சல்லல் லாஹூ அலைஹி வஸல்லாம்" என்ற வாழ்த்து அமைகிறது. இந்த வாழ்த்தின் சுருக்கமாகிய 'சல்' என்பதே முகம்மது நபியின் பெயரோடு இணைத்துச் சொல்லப்படும் 'சல்' என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு கிறித்துவினுடைய பெயரால் கிறித்தவமும்; 'யூதா' என்ற மக்கட் பெயரால் யூதமதமும்; புத்தரின் பெயரால் புத்த மதமும்; சமணர்களுடைய பெயரால் சமணமும்; ஜொராசுதரின் பெயரால் ஜொராசுதிரிய மதமும் சிவன், விஷ்ணுவின் பெயர்களால் சைவம் என்றும் வைணவம் என்றும் இப்படி உலக சமயங்கள் எல்லாம் அதை நிறுவியவர்களுடைய பெயர்களிலேயே அமைந்திருப்பது

அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் அவ்வாறு நிறுவியவர் பெயர் எதையும் சாராமல் மனிதனுக்கு நலம் விளைவிக்கக் கூடிய 'இசுலாமியம்' என்னும் பெயரால் முசுலீம்களுடைய சமயம் அமைந்திருத்தல் அம்மார்க்கத்தினுடைய தனித்துவங்களில் ஒன்றாகச் சுட்டலாம்.

'ஈமான்' எனப்படும் ஓரிறை நம்பிக்கையே இசுலாத்தின் மிக முக்கிய அடிப்படைக் கோட்பாடாகும். இங்குச் சுட்டப் பெறும் தொழுகை, நோன்பு, ஏழைவரி மற்றும் மக்கா•புனிதப் பயணம் போன்றன வெல்லாம் அந்நம்பிக்கையின் உட்கூறுகளாகும். இது தவிர இசுலாமியம் முன்வைக்கும் சமூகச்சிக்கல்களாகிய ஏற்றத்தாழ்வு, பெண்ணடிமை ஆகியன யாவும் இவ்வொன்றனையே அடியொற்றி இருப்பதைக் காணலாம். அதாவது,

ஒருவனால் படைக்கப்பட்ட மக்கள் பிறப்பால் வேறுபாடு உடையவர்களாக, உயர்வு தாழ்வு கொண்டவர்களாக எப்படி இருக்க முடியும்? ஓரிறைவனால் படைக்கப்பட்ட மக்கள் அவன் படைப்பிலேயே அல்லது அவர்களின் பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வு உடையவர்கள் என்று கருதுவது படைப்பாளனையே நீதியற்றவனாக,நேர்மை தவறியவனாக ஆக்கிவிடதா? என்ற கேள்வியை முன்வைக்கின்றது. இசுலாமியம் முன்வைக்கும் கோட்பாடுகள் அல்லது நெறிமுறைகள் பெரும்பாலும் பகுத்தறிவுக்குட்பட்டு, இனவெறி மற்றும் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான கோட்பாடுகளைக் கொண்டிருப்பதால் அது உலக நாடுகளில் பல்வேறு தலைவர்களின் மற்றும் அறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக, இந்தியாவில் காந்தியடிகள், நேரு, அன்னிபெசன்ட், விவேகானந்தர் மற்றும் புகழ் பெற்ற இந்திய வரலாற்றிஞர் எம்.என். ராய் போன்றோர்களும் உலக அளவில் வியோடால்சுடாய், பெர்னாட்ஷா மற்றும் அமெரிக்கக் கிறித்துவ அறிஞர் மைக்கேல் ஹெச் ஹார்ட் போன்றோர்களும் தமிழகத்தில் அண்ணா, பெரியார், பாரதி, திரு.வி.க போன்றோர்களும் இசுலாமியத்தைப் பாராட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

- இசுலாமிய மார்க்கம் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள நேர்மையான முயற்சியை மேற்கொள்ளும் இந்துக்கள் என்னைவிட அதிகமாக இசுலாமியத்தை நேசிப்பார்கள். -காந்தியடிகள்

- முகம்மது நபி (ஸல்) அவர்களின் விளக்கமும் உறுதியும்; இசுலாம் போதித்த சகோதரத்துவமும் சமத்துவமாகிய இந்த இரண்டுமே இசுலத்தின் வெற்றிக்குக் காரணம் என்பதை மறைமுகமாக, இசுலாத்தின் வெற்றி அதன் படை வலிமையாலோ வன்முறையினாலோ அமையவில்லை. கொள்கை உறுதியினாலேயே அமைந்தது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. - ஜவஹர்லால் நேரு

- அன்பு நெறியே இசுலாத்தின் போதனை. இசுலாத்தின் மூலக் கொள்கை சமத்துவம். இனத்தையும் நிறத்தையும் கடந்து முசுலிம்கள் காட்டுகின்ற முழுமையான சமத்துவத்திலேதான் அவர்களின் சிறப்பே அடங்கியிருக்கிறது. - விவேகானந்தர்

- இசுலத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் முசுலீம்களின் வீரப் பிரதாபத்தினால் மட்டுமே நிகழ்ந்துவிடவில்லை. இசுலாம் தனது உன்னதமான கொள்கைகளினாலே தான் கோடிக்கணக்கான மனித இதயங்களில் இடம் பிடித்துக் கொண்டது. - எம்.என்.ராய்

- எதிர் மதவாதிகளின் தவறான எண்ணத்திற்கும் கடுமையான தாக்குதலுக்கும் இலக்கானதில் இசுலாத்தைப் போல வேறு ஒரு மதத்தை நாம் காணவில்லை. -அன்னிபெசன்ட்

இறக்கும் தருவாயில் கூட நபிகள் நாயகத்தினுடைய புத்தகத்தைத் தன்னுடைய சட்டைப் பையிலேயே வைத்திருந்த லியோடால்சுடாய் கூறும் கருத்தும் ஈண்டு மனங்கொள்ளத் தக்கது. 'இன்றும் சீர்திருத்தவாதிகள் சந்திக்கும் எண்ணற்றச் சிக்கல்களை நினைந்து பார்த்து, அன்று அராபிய மூடர்களுக்கு வன்முறையில் வெறுப்பையும் சகிப்புத் தன்மையையும் முழுமையாகக் கற்றுத் தந்து வெற்றி பெற்ற சாதனை, நாவால் புகழ்ந்துரைக்க இயலாத ஒன்று. ஐரோப்பாவில் இசுலாம் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமாக ஆனபோதுதான் அவர்கள் பகை தொடங்கியது'.

'பகைவளரக் காரணமாக இருந்தவை பல. கிறித்துவப் பாதிரிமார்களின் போக்கு, அறியாமை, மூட பக்தி, மதவெறி ஆகிய அனைத்தும் சேர்ந்து இசுலாத்தைத் தவறான பிரசாரத்தின் மூலம் பகைக்கவும் வெறுக்கவும் வழிவகுத்தன' என்று பெர்னாட்ஷா குறிப்பிடும் கருத்தும் இசுலாமிய வரலாற்றில் புதிய வெளிச்சங்களைத் தருகின்றன.

இசுலாத்தைப் பற்றிய தப்பெண்ணம் இப்பொழுது மாறிக்கொண்டு வருவதை, ஜேம்சு மிச்னர் என்னும் உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர் 1955இல் ரீடர்சு டை ஜசுடு (ஜூன்) இதழில் இசுலாத்தைப் பற்றி எழுதிய கட்டுரையும் மைக்கேல் ஹெச்ஹார்ட் என்ற அமெரிக்க கிறித்துவர் தன்னுடைய 'தி ஹன்ரடு' என்ற நூலில் முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முதலிடம் கொடுத்து எழுதியிருப்பதுமாகிய எத்தனையோ சான்றுகள் இசுலாத்தின் மேன்மையை உறுதிப்படுத்துகின்றன. விரிவஞ்சி சுருக்கமாக உரைக்கப்பட்ட இக்கருத்துக்களின் விரிவை மு.அப்துல்கறீம் அவர்களுடைய இசுலாமும் சமய நல்லிணக்கமும் என்ற நூலில் பார்க்கலாம்.

இசுலாமியம் மக்களிடையே வெகுவாகப் பரவியமைக்கும் அறிஞர் பெருமக்களால் அது மிகுதியாக மேற்கோளிடப் பெறுவதற்கும் அதன் கொள்கையே அடிப்படைக் காரணம் என்பதை மேற்கண்ட விளக்கங்கள் வழி தெளியலாம். இப்படி உலக அளவிலும் இந்திய அளவிலும் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்திய இசுலாத்தினுடைய வீச்சை தமிழக அளவிலும் பார்க்க முடியும்.

குறிப்பாக, மதத்தாலும் சாதியாலும் பிளவு படுத்தப்படும் அடித்தட்டு மக்களுக்கு அதன் கொடுமைகளிலிருந்து விடுபட, இசுலாமியம் மிகப்பெருமளவில் துணைபுரியும் என்பதையொட்டிய பெரியாரின் சிந்தனை ஈண்டு நினையத்தக்கது. "இசுலாம் மதம் என்றால் அதில் என்ன இழிவு குறை குற்றம் இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா? முதலாவது அதுவே கடைசிச் சீர்த்திருத்த மதமாகும். உலகத்தில் நாற்பது, ஐம்பது கோடி சுதந்திர மக்களையும் பல பெரும் இராஜ்யங்களையும் தத்துவங்களையும் அருமையான கலைகளையும், சிற்பங்களையும், அற்புதக் கட்டடங்களையும், இலட்சக்கணக்கான பிரார்த்தனை தலங்களையும், பெருங்கவிஞர்களையும், தீர்க்கதரிசிகளையும் கொண்டதாகும். பிறவியில் சாதிபேதம் உயர்வு தாழ்வு அற்றது. சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் போதிக்கும் ஆசுதிகமாகும்.

மேலும் தனக்கான ஒரு அடையாளமாக சடங்கு, தொழுகை என்பதையே முக்கியமானதாகக் கருதுவது. இசுலாம் சரியானபடி பிரச்சாரம் செய்யப்பட்டிருந்தால் இந்த நாட்டில் மனிதப்பிறவியல் ஆறு, ஏழு கோடி மக்கள் மிருகத்திலும் கேவலமாய் இழி ஜீவன்களாய் இருக்க முடியுமா? (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் பதிப்பு, வே.ஆனைமுத்து, தொகுதி. 4, ப.4001) பெரியாரின் இவ்வாதங்கம்

இசுலாமிய மதத்தின் கொள்கையை மாண்பைக் கண்ணியப்படுத்துவதாக அமைகிறது.

இசுலாமியம் குறித்துப் பெரியார் முன்வைக்கும் இச்சிந்தனைகளைத் தீண்டாமைக்கு எதிராகச் சொல்லப்பட்ட தீர்வாகவும் கருதலாம். 1945இல் தமிழகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளையும் அதன் விளைவாக ஏற்பட்ட மதமாற்றத்தையும் குறித்துப் பெரியார் தம்முடைய குடியரசு பத்திரிகையில் எழுதிய பல்வேறு முழக்கங்களின் ஒரு சிறு பகுதிதான் இது. இது போன்ற எண்ணற்ற சிந்தனைகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும் அந்நூலில் பார்க்கலாம். அவற்றுள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்தவர்கள் இரண்டாயிரம் பேர் இசுலாமியத்தில் இணைந்ததைக் குறித்து எழுந்த எதிர்ப்புக்கு எதிராக எழுந்த பெரியாரின் குரல் முக்கியத்துவம் வாய்ந்தது.[7]

இந்தியாவில் சாதி, சமயம் என்ற பெயரால் நடைபெறும் கொடுமைகளுக்கு எதிராகவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் தமிழகத்தில் பெரியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் தான் சுயமரியாதை இயக்கம். பெரியார் என்றாலே அவர் கடவுளுக்கு எதிரானவர். மூடநம்பிக்கைகளுக்கு எதிரானவர் என்பது கடைக்கோடி மாந்தனுக்கும் எட்டப்பட்ட ஒன்று.

கல்வியாளர்களால் உலக நாத்திகர்களான இங்கர்சால், ப்ராட்லா ஆகியோர்களுக்கு இணையாக ஒப்பிடக் கூடியவர்; பகுத்தறிவுப் பகலவனாக அடையாளம் காணப்பட்ட தந்தைபெரியார் அவர்களே, இந்தியாவில் உள்ள மதங்களில் சம அந்தஸ்து கொடுக்கக் கூடிய மதமாக இசுலாமியத்தை இனங்கண்டிருப்பது சிந்திக்கத்தக்கது. அது போலவே அல்லாவைப் பற்றி பாரதியார் பாடிய பாட்டொன்றில் இசுலாம் போதிக்கும் சமத்துவ நெறியை உணரலாம்.

> கல்லாதவ ராயினும்முண்மை சொல்லாதவ ராயினும்
> பொல்லாதவ ராயினுந்தவ மில்லாதவ ராயினும்
> நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
> எல்லாரும் வந் தேத்துமளவில் யம பயங்கெடச்
> செய்பவன் (அல்லா)
>
> ஏழைகட்குஞ் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர்பிதா
> கோழையர்கட்கும் வீரருக்குங் குறைதவிர்த்திடும்
> ஓர்குழு

ஊழி யூழி அமராயிவ் வுலகின்மீதி லின்புற்றே
வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர்
அவன்பெயர் அல்லா
(அல்லா பாட்டு.134)

மேற்சுட்டிய இப்பாடலடிகளில் கூட இசுலாமிய நெறிகட்குச் சொல்லப்பட்ட கருத்துகள் இழையோடிருப்பதைக் காண முடியும். பாரதியார் சுட்டும் இக்கருத்துக்கு நிகராகவே உமறுப்புலவரின் கருத்து அமையப் பெற்றிருப்பது சிந்திக்கத்தக்கது.

வறுமையும் தீருநோ யும்விட் டகலும்
மனத்தினில் கவலையும் நீங்கும்
சிறுமையும் அகலும் புத்தியும் பெருகும்
தீவினை வந்திட ராது
தெறுபகை சிதையும் செல்வமும் வளரும்
தேகமும் சிறந்துபூ ரிக்கும்
உறுபவம் தொலையும் முகம்மதை எவர்க்கும்
ஒருபகற் காண்இல். (இசுலாமிய இலக்கியம்,ப.49)

உமறுப்புலவர் பாரதிக்கு முன்னர் வாழ்ந்த மிகப்பெருங்கவிஞர். ஒரு கவிஞனுடைய படைப்புகளில், சிந்தனையில் அவன் காலத்துக்கு முன்பிருந்த கவிஞர்களின் ஆளுமைப் பண்புகள் இடம்பெறுவது என்பது கவிதையில், கவிஞனில் இயல்பிலேயே நிகழக் கூடிய ஒன்றாகும். இளங்கோவில் சங்கக் கவிதையையும் கம்பனில் திருக்குறளையும் அல்லது அவனுக்கு முன்பிருந்த கவிதைகளின் வீச்சையும் காண்பது போல பாரதியில் கம்பன்,வள்ளுவன், இளங்கோவைப் பார்க்கலாம்.

இது தவிர பாரதியினுடைய கவிதைகளின் மொழி, பொருண்மை மற்றும் வடிவம் ஆகியனவற்றில் மேனாட்டுக் கவிதை மரபு அமையப் பெற்றிருப்பதும் அவரது கவிதையின் தனித்தன்மையாகும். அவ்வகையில் பாரதி தனக்கு முன்னர் வாழ்ந்த உமறுப்புலவரையும் அறிந்துள்ளான் என்பதை இவ்விரு கவிதைகளிடையே காணலாகும் ஒப்புமைகள் வழி அறியலாம்.

அரபு நாட்டில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய இசுலாம் நாளடைவில் அகில உலகிலும் பரவலாயிற்று. சென்ற இடங்களில் எல்லாம் தன்னுடைய அடிப்படைக் கொள்கைக்கு முரண்படாமல் அந்தந்த நாடுகளில் வழக்கத்தில் உள்ள சமயக் கொள்கைகளோடு பழகி ஒருப்பட்டு அன்பையும் சகோதரத்துவத்தையும் பரப்பி புதிய ஞான சூரியனாக விளங்குகின்றது என்பது பேராசிரியர் முகம்மது

ஹீசேன் நயினார் அவர்கள் சுட்டும் மதிப்பீடாகும். (சீதக்காதி வரலாறு, முகவுரை)

அன்னார் அவர்களது கருத்துப்படி இன்றைக்கு உலகின் பல்வேறு நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்க, சீனா, ரஷ்யா, இந்தியா போன்ற நாடுகளில் இசுலாமியம் பின்பற்றப்படுகின்றன. இசுலாமியம் இன்றைக்கு மிகப்பெரிய மார்க்கமாக வளர்ந்துள்ளது. இசுலாம் பிறந்த சூழல் வேறாக இருந்தாலும் அது வழங்குகின்ற சூழல்களுக்கேற்ப அடிப்படை நெறிதவறாது தன்னை மாற்றிக் கொண்டுள்ளதே அதன் சிறப்பம்சமாகும். அதாவது, இசுலாம் வழங்குகின்ற எல்லா நாடுகளிலும் உள்ள பண்பாடு பழக்கவழக்கம் மொழி, அரசியல், சமயம் ஆகியன ஒன்று போல் இருப்பதில்லை.

குறிப்பாக, அரபு மொழியில் பரப்பப்பட்ட இசுலாம் அதே அரபு மொழியிலேயே வழங்குவதில்லை. சென்ற நாட்டினுடைய பண்பாடு மொழிகளுக்கேற்ப அது தன்னை மாற்றிக் கொண்டுள்ளதைப் பார்க்கலாம். ஆனால், மொழிக்கேற்பவும் பண்பாட்டிற்கேற்பவும் சிறிதளவு மாறுபட்டு நடந்து கொள்கின்ற பண்பைப் பெற்றிருப்பதால் இசுலாம் தன்னுடைய அடிப்படைக் கொள்கையிலிருந்து எள்ளளவும் பிறழ்வதில்லை.

தமிழகச் சூழலை எடுத்துக் கொண்டால் முன்பேயே சுட்டியதுபோல, இங்குள்ள முசுலீம்கள் அனைவரும் மக்காவிலிருந்தோ அல்லது அராபியாவிலிருந்தோ வந்தவர்கள் அல்லர். அதாவது இசுலாமியம் பிறந்த இடம்தான் அரபுநாடே தவிர அதைப்பேணுகின்ற மக்கள் அல்லர். மாறாக இசுலாத்தைத் தழுவிக் கொண்டவர்களில் பெரும்பகுதியும் முசுலிம் வேர்களின் கொடிவழி உறவில் வந்தவர்களாக இருக்கக் காணலாம். இச்சூழலில் மொழியால் பிறப்பால் தமிழகத்தைச் சேர்ந்த முசுலிமோ அல்லது பன்னெடுங் காலத்திற்கு முன்னபேயே தமிழகத்துக்கு வந்து தங்கிவிட்ட கிளைவழி முசுலிமோ தாம் ஏற்றுக்கொண்ட சமயத்தை அல்லது மார்க்கத்தை தாம் சார்ந்துள்ள மொழி மற்றும் பண்பாடு வழியே தான் வெளிப்படுத்த முடியும்.

இன்றைக்குத் தமிழிலக்கிய வரலாற்றின் ஒரு முக்கிய ஆவணமாகக் கருதப்படும், இசுலாமியத் தமிழிலக்கியங்கள் யாவும் இந்தப் பின்புலத்தில் உருப்பெற்றவைகளேயாகும். மேலும், வந்த இலக்கியமாக இருந்தாலும் அது இந்த மண்ணைவிட்டு விலகிச் செல்வதுமில்லை; தான் ஏற்றுக்கொண்டுள்ள அடிப்படைக்

கொள்கையிலிருந்து மீறுவதுமில்லை. இவ்விரு தன்மைகளையும் சமநிலையில் பேணும் மாண்பையே இசுலாமியத் தமிழிலக்கியங்களின் மரபாகக் கொள்ளலாம். தமிழகத்தைவிட இலங்கைவாழ் முசுலிம்களிடையே இதன் வீச்சு அதிகம். இலங்கை முசுலிம்களுக்குப் பூர்வீக வரலாறு சொல்லப்படுவதுண்டு. உலகின் முதல் மனிதர் முதல் நபி (இறைத்தூதர்) ஆதம் அலை தோன்றியது தென் தமிழகத்தையொட்டியுள்ள ஈழத்தில் தான் என்பது ஆய்வாளர்கள் சுட்டும் கருத்தாகும்.[8]

அராபியர்கள் தமிழகத்தோடு வணிக உறவு கொண்டிருந்த அதே காலத்தில் இலங்கையோடு வைத்திருந்த வணிகத் தொடர்புக்கும் மிகுதியான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. இசுலாமிய மார்க்கத்தோடு இலங்கை மக்கள் கொண்டிருந்த நெருக்கம், பற்று மிகவும் தொன்மை வாய்ந்தது. தமிழாய்வு தமிழிலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும் காட்டிய அக்கறையும் அளவிடற்கரியன.

தமிழகம் போன்று ஒரே மொழிச் சூழல் அமையப் பெற்றிராத அல்லது தமிழ் பேசுவோர் அதிகமில்லாத இலங்கையில் அங்கு வாழும் வெவ்வேறு மொழி பேசுவோர்களுக்கேற்ப மொழிக் கொள்கை நிர்ணயிக்கப் படுகிறது. குறிப்பாக அரபி, தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய நான்கு மொழிகளுக்கேற்பவே அங்குள்ள மொழிச்சூழல் அமைந்துள்ளது. இது குறித்து 1886இல் முசுலிம்நேசன் என்ற பத்திரிகையில் சித்திலெப்பை வெளியிட்ட கருத்தொன்றைத் தனித்துவம் வாய்ந்ததாகக் கொள்ளலாம்.

நான்கு மொழிச்சூழல் உள்ள இங்கு முதலாவதாக நாங்கள் படிக்க வேண்டிய மிக முக்கியமான மொழி அரபியாகும். ஏனெனில், அதில் தான் எங்களுடைய சமயமும் இறை வணக்கமும் திருமறையும் (குர்ஆன்) உள்ளது. இரண்டாவது தமிழ். இது நாங்கள் தொன்றுதொட்டுப் பேசி வரும் மொழி; இங்குள்ள தமிழறியா ஒருவர் பார்வையற்றவருக்கு இணையாகக் கருதப்பெறுவர். மூன்றாவது ஆங்கிலம் எந்தவொரு வேலை வாய்ப்பையும் பெற இது உதவுகிறது. நான்காவது தான் சிங்கள மொழி உள்ளது. இலங்கை வாழ் முசுலிம்களின் மொழித்தெரிவு குறித்த இத்தகைய விரிவான விளக்கத்தை எம்.ஏ.நுஃமானின் இலங்கையில் முசுலிம்கள் என்ற ஆங்கில நூலில் பார்க்கலாம்.

பண்டையக் காலத் தமிழரின் மொழிப் பற்றை அறிய சங்கச்செய்யுட்களில் சில பாடல்களை முக்கியச் சான்றுகளாகக் கருதுவதைப் போல இக்காலத் தமிழரின் மொழிப்பற்றை அறிய

இலங்கை வாழ் முசுலீம்களின் மொழிக்கொள்கையைச் சான்று காட்டலாம். இது தொடர்பாக அண்மையில் நாளேட்டில் வந்த ஒரு செய்தியைச் சுட்டுவது இங்கு மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

உயர்நிலைப் பள்ளியொன்றில் நடந்த பரிசு வழங்கும் நிகழ்ச்சி. பரிசு பெற்ற முப்பது பேர்களில் ஒரேயொரு பையனைத் தவிர எஞ்சியோர் அனைவரும் மெலிந்த தேகத்திலான நோஞ்சான்களாகக் காணப்பட்டனர். ஒருவன் மட்டும் நல்ல திடகாத்திரமான தேகத்துடன் இருந்தான். 'அபுபெக்கர்' என்ற பெயரையுடைய அந்தப் பையனின் தகப்பனாரும் பாட்டனாரும் இங்கிலிஷ் பள்ளிக்கூடத்தில் படித்ததில்லையாதலால் அவன் அப்படி இருந்தானாம் (எஸ்.தோத்தாத்ரி, கல்கியின் கல்விச் சிந்தனைகள், தினமணி, 16.01.2014). என்ற இக்கட்டுரை இந்தக் காலத்துக் கல்வி முறையால் பேரப்பிள்ளைகளும் கூட உடல் ஆரோக்கியமற்ற சவலைகளாகி விடுகிறார்கள் என்று கல்விக்கும் உளவியலுக்கும் உள்ள உண்மையைத் தெளிவுப்படுத்துவதாக அமைகிறது.

1947ஆம் ஆண்டில் ஒரு பள்ளிக் கூடத்தில் பார்த்ததாகச் சுட்டப் பெறும் கல்கி அவர்களின் இவ்வனுபவம் இசுலாமியர்களின் தமிழ்ப் பற்றின் மீதான ஆழத்தை அகலத்தை அறிய வைக்கிறது. இசுலாமியர் மற்றும் இசுலாமிய மூதாதையர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே இருந்த இந்த நீண்ட நெடிய வரலாற்றினூடாகவே இசுலாமியத் தமிழர்களின் தமிழ் உணர்வையும் தமிழ் மரபையும் இசுலாமிய நெறியையும் இனங்காணமுடியும்.

தமிழகத்திற்கும் அராபியத்திற்கும் இடையேயான நெடிய வரலாறு என்பது தமிழகத்தில் கி.பி.2500 ஆண்டு கால வரலாறு உடையது. ஆனால் தமிழில் இசுலாமியத் தமிழிலக்கியங்களின் தொடக்கம் என்பது நபிகள் நாயகத்தின் தோற்றத்திற்குப் பிறகே தொடங்குகிறது. ஏனெனில், இசுலாமியம் நபிகள் நாயகம் அவர்களின் காலத்திலிருந்துதான் தோற்றம் கொள்கிறது. அதன் பிறகே அது உலகின் பல்வேறு நாடுகளைச் சென்றடைந்து ஆங்காங்கே உள்ள மொழி, பண்பாடு, அரசியல் மற்றும் சமயச் சூழலுக்கேற்பத் தன்னை மாற்றிக் கொண்டது. குறிப்பாகத் தமிழகத்தில் இசுலாம் மார்க்க போதனைகளை முசுலிம்கள் அறிந்து கொள்வதற்கும் பரப்புவதற்கும் இசுலாம் தொடர்பான தமிழ் நூல்கள் தோன்றலாயிற்று.

இப்படி, தமிழகத்தில் பரவிய இசுலாமியம் தமிழ்மொழியில், பண்பாட்டில், இலக்கியத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தின.

அதன் தொடக்க நிலையாகத் தமிழ் மொழியில் பல அரபு, பாரசீகச் சொற்கள் கலந்தன. மொழியில் ஒலி வடிவங்களும் வரிவடிவங்களும் மொழிகளுக்கேற்ப வேறுபட்டுக் காணக்கூடிய சூழலில் புதிய ஒலிக்குறியீடுகளின் தேவை எழுந்தன. அதாவது, ஒரு மொழிக்குரிய ஒலியைப் பிறிதொரு மொழிக்குப் பெயர்க்கும் போது ஏற்படும் பொருட்சிதைவு காரணமாக மொழியில் இத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டியத் தேவை எழுகிறது. அதன் காரணமாக, அரபு ஒலிகளைத் தமிழுக்குக் கொண்டு வரும்போது ஏற்படும் சிக்கல் காரணமாக 'அரபுத்தமிழ்' என்ற ஒரு புதிய மொழிநடையே தோன்றலாயிற்று.

மேலும், தமிழில் இவ்வரபுத் தமிழ் நடையை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய இலக்கிய வகை தோன்றியது. அவ்வாறே தமிழ் இலக்கண மரபு வழுவாது பண்டைய இலக்கிய அமைப்பு முறைகளுக்குட்பட்டுத் தோன்றிய மசலா, கிஸ்ஸா, நாமா, முனா ஜத்து, படைப்போர், நொண்டி நாடகம் மற்றும் திருமண வாழ்த்து என்ற பெயர்களில் அமைந்த இலக்கியங்கள் அதுவரை தமிழுக்கு அறிமுகமில்லாத புதிய இலக்கிய வடிவங்களாகும். மேலும், இசுலாமியத்தைப் பொருண்மையாகக் கொண்டு ஏற்கெனவே தமிழில் தோன்றிய இலக்கிய வகைகளைப் போலவே பல இலக்கியங்கள் தோன்றின. அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் தோன்றிய இலக்கியங்களைத் தழுவியும் மொழிபெயர்த்தும் பல நூல்கள் தோன்றின.

தமிழில் தோன்றிய இசுலாமியத் தமிழிலக்கியங்களில் பெரும்பகுதி சிற்றிலக்கியங்களாக இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். "எண்ணிக்கையளவில் மூன்றில் ஒரு பகுதியான இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் சிற்றிலக்கியப் பிரிவினையே சார்ந்துள்ளன" என்று பீ.மு. அஜ்மல்கான் சுட்டும் கருத்து ஈண்டு நினைக்கத்தக்கது (இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் ப.10). அதே போன்று "சீறாப்புராணம் முதலான பேரிலக்கியங்களை விரும்பிப் படிக்கும் தமிழர் 2000க்கும் மேற்பட்ட இசுலாமியச் சிற்றிலக்கியங்களை மறந்து விட்டனர் என்று ஜா.இராமச்சந்திரன் அவர்கள் சுட்டும் கருத்தொன்று இசுலாமியத் தமிழிலக்கியங்களில் பெரும் பகுதி சிற்றிலக்கியங்கள் என்பதை உறுதி செய்கிறது.

இசுலாமிய மரபுகளை வெளிப்படுத்துவதற்குப் பயன்படும் ஏனைய இலக்கிய வகைகளைக் காட்டிலும் சிற்றிலக்கிய வடிவங்களே பெரிதும் பொருந்தி வருவதால் இவ்வகையில்

பெரும்பான்மை இலக்கியங்கள் தோன்றியிருக்கலாம். குறிப்பாக, சிற்றிலக்கிய வகைகளில் மாலை இலக்கிய வகையே பெரும் எண்ணிக்கையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இசுலாமியத் தமிழுலகில் தோன்றிய முதல் ஐந்து நூல்களுள் மூன்று நூல்கள் (பல்சந்தமாலை, மிஃறாஜ்மாலை, கனகா பிஷேகமாலை) மாலை இலக்கியங்களாக அமைந்திருத்தல் ஈண்டு நினையத்தக்கது. அதுபோலவே இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றிற்கு அடித்தளமிட்டதும் மாலை இலக்கிய வகையில் ஒன்றான பல்சந்த மாலை என்பது குறிப்பிடத்தக்கது.

களவியற் காரிகையில் வையாபுரிப்பிள்ளை அவர்களால் எடுத்தாளப்படும் உதாரணச் செய்யுட்களிலிருந்து திரட்டப்பட்ட எட்டு செய்யுட்களே பல்சந்த மாலை என்ற இலக்கிய வகையைப்பற்றி அறிய உதவும் முக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. இதுதவிர இந்நூலின் முழுவடிவம் பற்றியும் ஆசிரியர் பற்றியும் அறிய கிடைக்கவில்லை. ஆனால் பல்சந்தமாலையின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்நூல் கி.பி.12ஆம் நூற்றாண்டு அல்லது 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்பெறுகிறது.

பல்சந்தமாலையில் புகழப்படும் வள்ளல் மலிக் அஃஜம் தகியுத்தின் என்பவர், பாண்டிய நாட்டில் குதிரை வாணிபத்தில் புகழ்பெற்று விளங்கிய மலிக்குல்-கிசுலாம் ஜமாலுத்தீன் என்பவரின் சகோதரராவர். இவர் தகியுத்தீன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் அமைச்சராகவும் இருந்தார். சுந்தர பாண்டியன் கி.பி.1293இல் இறந்தவுடன் தகியுத்தீன் பாண்டியனுடைய மந்திரியாய் இருந்து ஆட்சிசெய்ததாக இசுலாமிய வரலாற்று அறிஞர் வாசுலாப் கூறுவர்.

இதன்வழி தகியுத்தின் காலம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு என்ற முடிவுக்கு வருவதுடன் பல்சந்தமாலையும் அதே காலகட்டத்தைச் சேர்ந்தது என்று அறுதியிடலாம். இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதல் மாலை நூலாகப் பல்சந்தமாலை சுட்டப்படுவதால் தமிழில் இசுலாமியத் தமிழ் இலக்கியத்தின் தொடக்க காலமாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சுட்டுவது பொருத்தமாக இருக்கும். எனவே, பதிமூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றிய இசுலாமியத் தமிழிலக்கியம் இடையில் மூன்று நூற்றாண்டுகள் இடைவெளியுடன் பதினாறு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு முடிய உள்ள கால எல்லைக்குட்பட்டதாக அமைகிறது.

இசுலாமிய இலக்கியத்தில் காப்பியம், சிற்றிலக்கியம், ஞானப்பாடல்கள் ஆகிய இலக்கிய வகைகளைத் தொடக்கமாகக்

கொண்டு, நவீன இலக்கிய வகைகளாகச் சுட்டப்படும் மசலா, கிஸ்ஸா, நாமா, முனாஜாத்து மற்றும் தமிழில் புதிய வடிவங்களான படைப்போர் நொண்டி நாடகம் திருமண வாழ்த்து மற்றும் அரபுத்தமிழ் என்று பல வகைகள் தோன்றின. ஆனால், இசுலாமிய இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு வரை அந்நூல்கள் பற்றிய எந்த விவரத்தையும் அறியமுடியாத சூழலே இருந்தது.

அச்சு ஊடகம் உருப்பெறாத பண்டையக் கல்விச்சூழலில் நடைபெற்ற படைப்பு மற்றும் ஆவணமாக்கம் என்பது ஓலைச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டவை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதே போன்று அறுதியிட்டுச் சொல்லமுடியாத எண்ணிக்கையைக் கொண்ட தமிழ் நூல்களின் எஞ்சிய ஒரு பகுதிதான் இன்றைய தமிழிலக்கியம் என்பதும் தமிழுலகம் ஒப்புக்கொண்ட ஒன்று. இத்தகையப் பின்புலத்தில் உருவாக்கப்பட்ட தமிழிலக்கிய வரலாறு என்பது எப்படி முழுமைத்துவம் வாய்ந்ததாக இருக்க முடியும் என்பது நாம் எதிர்கொள்ளும் கேள்விகளுள் ஒன்று.

இப்படி, தமிழில் தோன்றியுள்ள அனைத்துத் தமிழ்நூல்களின் விவரங்களை அது தோன்றிய காலச் சூழலோடு முழுமையாகப் பதிவு செய்ய முடியாத சூழலில்,இசுலாமியத் தமிழிலக்கியங்களுக்கான பங்கு தமிழில் பூஜ்ஜியமாக உள்ளது என்று சொல்லப்படும் குற்றச்சாட்டும் திக்குமுக்காடச் செய்கிறது. இதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியின் ஒரு சிறுபகுதியாகத்தான் மயிலை சீனி. வேங்கடசாமியின் மறைந்து போன தமிழ்நூல்களைப் பற்றிய தேடலைக் கருதவேண்டும்.

தமிழில் இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றெழுதியலுக்கும் இம்மாதிரியான ஒரு தேடுதல் முயற்சி நிகழ்ந்துள்ளதை எஸ்.முகம்மது ஹுஸைன் நயினார் அவர்கள் சுட்டும் பதிப்பு அனுபவம் ஒன்றன் வழி உணரலாம். தமிழ் லெக்சிகன் ஆபிஸில் வேலை பார்த்து வந்த மகாவித்துவான் ராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்கள் தமிழ் முசுலீம் புலவர்கள் எழுதிய நூல்களைப் படித்துப் போற்றி அவற்றைத் தமிழுலகிற்கு வெளியிட்டுதவ எண்ணினார்கள். இசுலாமியக் கொள்கைகளும் கருத்துகளும் அரபி, பார்ஸிச் சொற்களும் அந்நூல்களில் இடையிடையே கலந்து வந்துள்ளதால் ராவ்சாகிப் அவர்கள் அந்நூல்களைப் பதிப்பிக்காமல் என்னை அன்போடு அணுகி உங்கள் சமய நூல்கள் பல தமிழில் உள்ளன. அவை படிப்பாரின்று செல்லரித்துப் போகின்றன என்று கூறி அந்நூல்களுள்

சிறந்த சீறாப்புராணம், சீதக்காதி நொண்டிநாடகம் முதலிய நூல்களின் சுவையை எனக்கு ஊட்டினார்கள். ராவ்சாகிப் அவர்கள் காட்டிய ஊக்கமும் சுவையுமே அரபி, பார்ஸி, உருது மொழிகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த எனக்கு பதிப்புத்துறை ஈடுபாட்டைக் கொடுத்தது. அதன் விளைவாகவே நான் 1939 ஆண்டிறுதியில் சீதக்காதி நொண்டி நாடகத்தை வெளியிட்டேன் என்று கூறுவர் (சீதக்காதி வரலாறு, முகவுரை).

ஒரே மாதிரியான வாசிப்பு முறைக்கு ஏற்ற கல்விச்சூழல் அமையப்பெறாத காலத்து ஒரு பிரதி பல்வேறு வாசிப்புத் தளங்களுக்கு இட்டுச் செல்ல வழியுண்டு. இவ்வாசிப்புமுறை மூலப் பிரதி சுட்டும் பொருண்மைக்கு மாற்றான புரிதலுக்கு வழி ஏற்படுத்தும். இத்தகையச் சூழலில் அவ்வாறான பிரதிகளின் வாசிப்பு முறைகளுக்குட்பட்டு பாடவேறுபாடுகளை இனங்கண்டு பதிப்பிக்கபெறும் போது தான் அத்தகையப் பிழைகள் நேர வாய்ப்பில்லாமல் போகும். இந்தப் பின்னணியில் தான் எழுத்துப் பிரதிகள் பல பதிப்புகளாகப் பதிப்பிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றன. சீறாப்புராணத்திற்கும் இதே நிலைதான் அப்போது இருந்துள்ளது.

இசுலாமியத் தமிழ் நூல்கள் தோன்றிய காலம் காலத்தால் முற்பட்டதாக இருந்தாலும் 19, 20ஆம் நூற்றாண்டுகளில்தான் அவை மக்களைச் சென்றடைவதற்கான முயற்சிகள் தோன்றியுள்ளன. ஏனெனில், இசுலாமியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் அரபு, பாரசீகச் சொற்களை அதிகமாகக் கொண்டும் காணப்பட்ட இசுலாமியத் தமிழ் நூல்கள் தமிழ் நூற்பதிப்பு முறைக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்துள்ளதால், அதன் பதிப்புப் பணியில் மிகுதியான இடையீடு நிகழ்ந்துள்ளன. சீறாப்புராணம் இயற்றப்பட்டு ஏறத்தாழ 140 ஆண்டுகள் சென்ற பின்னரே அது அச்சியற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

நாளடைவில் முசுலீம் மார்க்க சட்டத்திட்டங்களும் அரபுமொழி இலக்கியங்களும் தமிழ் முசுலீம்களுக்காக மொழிபெயர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அத்தகைய இடைவெளி இப்போது குறைந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக உமறுப்புலவரின் சீறாப்புராணம் குணங்குடிமசுதான் சாகிபுப் பாடல்கள் என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே அறியப்பட்டு வந்த இசுலாமியத் தமிழிலக்கியம் இன்று மிகுதியான எண்ணிக்கையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இசுலாமியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் சமயத்துக்கு அப்பாற்பட்ட கருத்துகளைக் கொண்டும் இலக்கியம் படைக்கின்ற ஒரு தெளிவான நிலையை இப்போது இசுலாமியத் தமிழிலக்கியம் அடைந்துள்ளது.

இசுலாம் பரவிய உலக நாடுகளுள் இந்தியாவுக்கு மிக முக்கியப் பங்கு உண்டு. இந்தியாவில் தமிழகம், கேரளம், இலங்கை பகுதிகள் இசுலாமியர்களின் தொன்று தொட்ட வரலாற்றைக் குறிக்கும் முக்கிய இடங்களாகும். இச்சூழலில் இசுலாமியம் தான் வழங்குகின்ற நாட்டினுடைய சூழலுக்கேற்ப மரபுகளுக்கேற்பச் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டிலங்கிய போதிலும் அது தன்னுடைய அடிப்படைத் தன்மையிலிருந்து மாறுவதில்லை. தமிழில் தோன்றிய பண்டைய இசுலாமியத் தமிழிலக்கியம் முதல் நவீனத் தமிழிலக்கியம் வரையிலும் இத்தகைய இழையோட்டத்தைப் பார்க்க முடியும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முசுலீம்கள் தமிழில் இயற்றப்பட்ட இசுலாமிய நூல்களையே தம்முடைய மத நூல்களாகக் கொள்ளுகின்ற அளவுக்கு அவர்களுடைய சமயப் பற்றானது தமிழோடு இரண்டறக் கலந்துவிட்டது. இப்படித் தமிழும் இசுலாமும் வேறு வேறு என்று பிரித்தறிய முடியா நிலையை அடைந்துள்ள இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தமிழ் மரபிற்கேற்ற இசுலாமிய மரபுகளையும் எந்தச் சூழ்நிலையிலும் நெறி பிறழாத அடிப்படையான இசுலாமிய மரபுகளையும் இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் இனங்காண முடியும்.

இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய வகையே காலத்தால் முற்பட்டதாக இருந்தாலும் இசுலாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் நூல்களுள் முதன்மையானதாகக் கருதப்படுவது சீறாப்புராணமாதலாலும் அது எல்லோராலும் பரவலாக அறியப்பட்ட ஒன்றாக இருப்பதாலும் தமிழோடு கலந்த இசுலாமிய மரபுகளைச் சீறாப்புராணத்திலிருந்தே தொடங்கலாம். முகம்மது நபி (சல்) அவர்களுடைய வாழ்க்கையையும் இசுலாமிய நெறிகளையும் பாடுபொருளாகக் கொண்டு தமிழ்க்காப்பிய மரபிற்கேற்ப வடிக்கப்பட்ட காப்பியம்தான் சீறாப்புராணம். உமறுப்புலவரைப் பற்றி அறிந்து கொள்ள, வேறேதும் சான்றுகள் கிடைக்காத போது அவரைப் பற்றி வழங்கும் கர்ணபரம்பரை கதைகள் வழியேதான் தெரிந்து கொள்ள முடிகின்றன. அதன்படி அரபுநாட்டு வாணிகப் பரம்பரையைச் சேர்ந்த செய்கு முகம்மது அலி (சேகு முதலி) அவர்களுக்கு கி.பி. 1642இல் உமறுப்புலவர் பிறந்தார் என ம.முகம்மது உவைசு அவர்களுடைய கருத்தின்படி அறியலாம் (இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு-1, ப.412).

இக்கருத்தினடிப்படையில், கீழக்கரையில் பிறந்த உமறுப்புலவர் கடிகை முத்துப் புலவரிடம் தமிழ்க்கற்றுப் பின் எட்டயபுரத்து சமஸ்தானத்தின் அரசவைக் கவிஞராக உயர்ந்துள்ளார். தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், இராமாயணம், மகாபாரதம் போன்ற அனைத்து நூல்களிலும் தேர்ச்சியுடையவராக உமறுப்புலவர் விளங்கியுள்ளார். சீதக்காதி வள்ளல் என்று புகழப்பெற்ற செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் அவர்களின் விருப்பத்திற்கிணங்க சீறாப்புராணம் பாடி முடித்தார் எனக் கர்ணபரம்பரை கதை வழி அறிய முடிகிறது. உமறுப்புலவரின் பிறப்புக் குறித்து முழுமையாக அறிய முடியாத சூழலில் அவரது சீறாப்புராணம் காலம் குறித்தும், அரங்கேற்றம் குறித்தும் உறுதியாக அறிய இயலவில்லை. எனினும், சீறாப்புராணத்தின் முதற்பதிப்பு 1842 (ஹிஜ்ரி 1258) இல் செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் அவர்களால் கொண்டு வரப்பட்டதற்கான சான்றுகளைப் பார்க்க முடிகின்றன.

சீறாப்புராணத்தின் உள்ளடக்கம் அரபு நாட்டுச் சூழலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தாலும் தமிழ்ப் பண்பாடு மற்றும் அதன் இலக்கிய மரபிலிருந்து எள்ளவும் பிசகாததும் இசுலாமிய நெறிமுறைக்கு கிஞ்சித்தும் குந்தகம் விளைவிக்காததும் ஆகிய இரு தன்மைகளே அதன் தனித்துவமாக அமைகின்றன. இப்படி, பாடுபொருளிலும் வடிவமைப்பிலும் ஒரு புதிய இலக்கிய வகையாகவே காணப்படும் இவ்வகை அதுவரை தமிழுலகிற்கு அறிமுகமில்லாத புதிய வரவாகும். தமிழில் சீறாப்புராண அறிமுகத்திற்குப் பிறகு தான் எண்ணற்ற காப்பியங்கள் தோன்றின.

அவற்றுள் சேகாதி நயினாருடைய திருமணக்காட்சி (1710) பனீ அகமது மரைக்காயரின் சின்னச் சீறா (1732) சேகுனாப் புலவரின் குத்பு நாயகம்(1807) மற்றும் திருக்காரணப் புராணம் (1812) திருமணிமாலை (1816) புதுகுஷ்ஷாம் (1821) வண்ணக்களஞ்சியப் புலவரின் இராஜநாயகம் (1807) குத்பு நாயகம் (1814) தீன் விளக்கம் (1821) ஆகியனவற்றைக் குறிப்பிடத் தகுந்த காப்பியங்களாகக் கருதலாம். முற்சுட்டிய எல்லாக் காப்பியங்களுமே சீறாப்புராணத்தை அடியொற்றி வந்தவையே.

அவற்றுள் திருமணக்காட்சியிலும் சின்னச்சீறாவிலும் சீறாப்புராணத்தினுடைய தொடர்ச்சியையும் தாக்கத்தையும் காணலாம். மேலும், சீறாப்புராணத்தையும் சின்னச்சீறாவையும் இரட்டைக் காப்பியங்கள் என்று சொல்லுகின்ற அளவிற்கு

இரண்டுக்கும் உள்ள ஒப்புமையை எடுத்துக்காட்டுவர். அதே போன்று நியாயத்தீர்ப்பு நாளைத் தொடர்ந்து நிகழ உள்ள எதிர்காலச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த திருமணக்காட்சி என்ற காப்பியமும் சீறாப்புராண வழியையும் தமிழ் மரபையும் பின்பற்றி வந்தவையாகும்.

பின்னர் வந்த இசுலாமியக் காப்பியங்களுக்கெல்லாம் சீறாப்புராணம் முன்னோடியாக விளங்குவதைப் போன்றே தமிழில் வந்த பதிப்பு நூல்களுக்கெல்லாம் அது முன்னோடியாக இருப்பதும் இவ்விடத்துக் குறிப்பிடத் தக்கது.[9] தொல்.எழுத்து (நச்சினார்க்கினியர்) மழவை மகாலிங்கையரின் பதிப்பு (1847) சி.வை.தாமோதரம்பிள்ளையின் தொல்.சொல் (சேனாவரையர்) பதிப்பு (1868) மற்றும் அவரது தொல்.பொருள். (நச்சினார்க்கினியர் மற்றும் பேராசிரியம்) பதிப்பு (1885) அக்காலத்துப் பதிப்புகளாகிய வீரசோழியம் (1881) இறையனார் களவியலுரை (1883) ஆகியனவெல்லாம் சீறாப்புராணப் பதிப்பிற்கு (1842) பின்னரே என்பதும் இவ்விடத்துக் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

இப்படி, இசுலாமியத் தமிழ்க்காப்பியங்கள் அனைத்திற்கும் சீறாப்புராணம் தொடக்கமாக அமைந்ததைப் போன்றே உமறுப்புலவர்க்கும் ஏதேனும் ஒரு காவிய மரபு தொடக்கமாக இருந்திருக்க வேண்டும் என்பதை உணரலாம். அதன்படி கடிகைமுத்துப்புலவரிடம் தமிழ் கற்று தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளில் மிகுந்த புலமை பெற்று விளங்கிய உமறுப்புலவருக்குத் தமிழ்க் காவிய மரபே வழி காட்டியாக இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமிருக்கமுடியாது. உமறுப்புலவர் குறித்து கா.அப்பாத்துரைப்பிள்ளை சுட்டும் கருத்தொன்று ஈண்டு நினையத்தக்கது.

பாரதிமரபு, பாரதிதாசன் மரபு ஆகியவற்றுக்கு முன்பே அவற்றின் முன்னோடியாகத் தமிழகத்தில் கம்பர் மரபு என்ற ஒரு நெடு நீள் புகழ் மரபு உண்டு. அதில் கம்பர் பெருமானை அடுத்து வந்த அம்மரபின் புது மலர்ச்சி முதல்வராக விளங்கியவர் சீறாப்புராணம் கண்ட உமறுப்புலவர் பெருமான் ஆவார். அது மட்டுமில்லாது உருவ வணக்கம், இறை அவதாரக்கருத்து, பிறப்புயர்வு தாழ்வு, பல தெய்வப்புராணக் கற்பனை, இறைமைப் பண்பு வாய்ந்த காவியத்தலைவர், தலைவியின் அங்க வருணணைகள், உயர்வு நவிற்சியணிகள் போன்றவற்றைச் சிறிதும் சகித்துக் கொள்ளாது சீறும் இயல்புடையது இசுலாமிய சமுதாயம். அத்தகைய

மக்களிடையே ஒர் இசுலாமியக் கம்பர் மரபுக் காப்பியம் இயற்றிவிடுவது என்பது வாள் முனையின் மேல் நடப்பது போன்றது. அத்தகு வியத்தகு முறையில் தமிழ் மரபில் நின்றே சாதித்துள்ள உமறுப்புலவர் திறம் போற்றுதற்குரியன. இவ்வகையில் அவர் பின்னாளைய கிறிசுதுவ பெருங்கவிஞர்களான வீரமாமுனிவர், கிருஷ்ணப்பிள்ளை ஆகியோருக்கு வழிகாட்டியாகத் திகழ்பவர் (வள்ளல் சீதக்காதி வரலாறு,பக்.7-8)

கா.அப்பாத்துரையாருடைய இக்கூற்று உமறுப்புலவருடைய காப்பியம் சமய நெறிப் பிறழாமையையும் தமிழ் மரபு மீறாமையையும் பின்னர்த் தோன்றிய காப்பியங்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்துள்ளமையையும் பறைசாற்றுகிறது.

மேலும் தமிழ்க்காப்பிய மரபில் காணப்படும் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்ற பகுப்பு முறைகளுக்கான வரையறையை நாம் தண்டியிலிருந்தே தொடங்கமுடிகிறது. அதன்படி,

> அறமுத நான்கினும் குறைபா டுடையது
> காப்பிய மென்று கருதப் படுமே

என்ற நூற்பாவும்,

> பெருங்காப் பியநிலை பேசுங் காலை
> வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று
> ஏற்புடைத்தாகி முன்வர இயன்று
> நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்
> தன்னிக ரில்லா தலைவனை உடைத்தாய்
> மலைகடல் நாடு வளநகர் பருவம்
> இருசுடர்த் தோற்றமென் றினையனே புனைந்து
> (தண்டி.8)

எனத்தொடங்கும் நூற்பாவும் காப்பியத்தின் பாடுபொருள், வரையறை மற்றும் அதன் அமைப்பு குறித்துப் பேசப்படுவதைப் பார்க்கலாம். ஆனால், தண்டி கூறும் இவ்வரையறைகள் தமிழில் பெரும்பாலான காப்பியங்களுக்குப் பொருந்தாமை இருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

'ஐம்பெருங்காப்பியம் ஐஞ்சிறுங்காப்பியம் என்ற தொகுப்பு நிறைவுடையத் தொகுப்பன்று. இத்தொகுப்பினை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் ஆய்வது காப்பிய ஆய்வு ஆகாது' என்று சோம. இளவரசு சுட்டும் கருத்தும், காப்பியத்தைப் புறம் போய்

ஆராயக் கூடாது நூல் அளவில் நின்றே திறங் காண வேண்டும் என்று வ.சுப.மாணிக்கம் சுட்டும் கருத்தும் ஈண்டு நினையத்தக்கது. (வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை, ப.15)

நாற்பொருள் பயக்கின்ற மரபிலிருந்து ஒரு சில குறைந்து வருவதால் இராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் சிறுகாப்பியமாகக் கருதும் சூழலும், சிறுகாப்பியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சூளாமணியைப் பெருங்காப்பியமாகக் கருதும் சூழலும் தமிழக ஆய்வுலகில் காணப்படும் சர்ச்சைகளாக உள்ளன. தண்டி கூறும் இவ்வரையறை தமிழ்க் காப்பிய காலத்திற்குப் பிந்தியதாக இருப்பதும் அவருடைய நாற்பொருள் மரபு தமிழ்க் காப்பியத்திற்குப் பொருந்தாத வடமொழி மரபை அடியொற்றியதாய் இருப்பதுமே இத்தகையச் சிக்கல்களுக்கு முக்கியக் காரணமாக அமைகின்றன. எனினும், தமிழில் காப்பியம் என்றால் அது காப்பிய இலக்கணத்திற்குட்பட்டு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு வகைப் பொருள்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்ற ஒரு பொது மரபு நிலவுகின்ற சூழலில்தான் உமறுப்புலவரும் தமது காப்பியத்தை நிறைவேற்றியுள்ளார். காப்பிய இலக்கணத்திற்குட்பட்டே அவரது காப்பியம் செல்கிறது, என்பதற்குச் சீறாப்புராணத்தின் முதற்பதிப்பாசிரியராகிய செய்கு அப்துல் காதிறு நெயினார்லெப்பை அவர்களுடைய கூற்றே நல்ல சான்றாகும்.

முதுபயன்
அறம்பொரு ளின்பம்வீ டனைத்து மடங்கிய
திறம்பெறுங் காப்பியஞ் செய்தன ரஃதே
(இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு 1, ப.421)

என்ற இக்கூற்று சீறாப்புராண உண்மைக்கருத்தின் சாராம்சமாக அதன் பதிப்பாசிரியர் தரும் விளக்கமாகும். இதற்கேற்பவே சீறாப்புராணத்தின் பெரும்பான்மையான இடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

கடவுள் வாழ்த்து

இசுலாமியப் புலவர்கட்குக் கடவுள் வாழ்த்துப் பாடுவது என்பது சர்க்கசு வித்தைக்காரன் கம்பியின் மீது நடப்பதிலும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டிய ஒன்றாகும். உருவமற்ற கடவுளைப் பாடுகின்ற அவர்கள் உவமானமாகவும் கூட உருவமுடைய பொருள்களைச் சுட்டாமல் பாட வேண்டும். இந்த மரபு நெறியை உமறு முறையுடன் பிழையின்றிப் பின்பற்றிச் செல்கின்றனர் (சீறாப்புராணச் சொற்பொழிவு ப.23) என்பது கவி.கா.மு. ஷெரீப் அவர்கள் சுட்டும் கருத்தாகும்.

இசுலாமியக் கோட்பாடுகளில் அடிப்படையானது ஓரிறைக்கொள்கை. அதாவது இறைவன் ஒருவனே என்பதில் நம்பிக்கை (ஈமான்) கொள்வதாகும். அத்துடன் இறைவனுக்கு உருவம் கிடையாது என்பதும் இசுலாமியத்தின் மிக முக்கியக் கோட்பாடாகும். அராபிய குறைஷியர்களுக்கும் முகம்மது நபி(சல்) அவர்களுக்குமிடையே சண்டை மூளுவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்ததே இவ்விக்கிரக வழிபாடு என்பது இவ்விடத்துக் குறிப்பிடத்தகுந்தது.

மக்கா வாசிகளுக்கு 'ஓரிறைக்கொள்கை' குறித்து முகம்மது நபிகள் (சல்) ஆற்றிய சொற்பொழிவுகளில் ஒன்றான "நம்மைப் படைத்த இறைவனை நாம் படைக்க முடியாது, நீங்கள் படைத்த உருவங்களுக்குத் தலை தாழ்த்தி நிற்பதை விட்டுவிட்டு உங்களைப் படைத்த இறைவனுக்குத் தலை தாழ்த்தி நில்லுங்கள், கல்லுருவங்களுக்கு என்ன ஆற்றல் இருக்கிறது, அவைகளின் அமைப்பு முழுவதும் உங்களுடையதல்லவா (அப்துல் ரஹிம், நபிகள் நாயகம்,ப.400). என்ற முழக்கம் முகம்மது நபி (சல்) தம் வாழ்நாளில் இறுதியாக ஆற்றிய உரைகளில் ஒன்றாகும்.

மக்காவில் குறைஷிகளின் கொடுமை தாங்காது முகம்மது நபி மக்காவிலிருந்து புறப்பட்டு 'தாயிபு' க்குச் சென்ற போது அங்கு நடந்த நிகழ்வு ஒன்றைச் சுட்டுவது இவ்விடத்துப் பொருத்தமானதாக இருக்கும். அவ்வகையில், தாயிபில் மக்களை நல்வழிப்படுத்தும்

முயற்சியில் ஈடுபட்ட நாயகம் அங்குள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களால் வெட்கப்படுத்தியும் கல்லெறிந்தும் விரட்டப்பட்டுள்ளார். அவ்விடத்தை விட்டு வேறோர் இடத்திற்கு ஓடி வந்த நாயகம் பேரிச்சம் பழத் தோட்டத்தில் தங்கிய போது அத்தோட்டத்தில் வேலை பார்த்த ஊழியர் ஒருவருடன் நிகழ்த்திய உரையாடல் இவ்விடத்துக் குறிப்பிடத்தகுந்தது.

கிறித்துவ மதத்தைச் சேர்ந்த அவ்வூழியர் அண்ணல் அவர்களின் செயல்களைக் கண்ணுற்று எம்முடைய கிறித்துவ மதத்திற்கும் உங்களுடைய மதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடு என்ன என்ற ஒரு கேள்வியை எழுப்பினார். அதற்கு நபிகள் நாயகம் (சல்) அளித்த விளக்கம் சிந்திக்கத்தக்கது.

"வேற்றுமை என்ன வென்பதைத் திருக்குர் ஆனே நன்கு விளக்கமாகக் கூறுகிறது. 'அல்லாஹ் ஒருவன் அவன் தேவையற்றவன். அவன் யாரையும் பெறவுமில்லை; அவனை யாரும் பெறவுமில்லை; அவனுக்கு இணை யாருமில்லை' என்று எடுத்தியம்புகிறது. அவன் யாரையும் பெறவுமில்லை. அவனை யாரும் பெறவுமில்லை என்பதே உங்களுடைய மதத்திற்கும் எங்களுடைய மதத்திற்கும் உள்ள வேற்றுமை என்று கூறியதாக அப்துல் றஹீம் தம்முடைய நூலில் சுட்டுவர் (நபிகள் நாயகம், ப.138).

நபிகள் நாயகம் அவர்கள் 'ஓரிறைக் கொள்கையை' மக்களிடையே பரப்புவதற்காகப் பட்ட துயரங்கள் எண்ணிலடங்கா. இதை அவருடைய வாழ்க்கை வரலாறு முழுவதிலும் பார்க்கமுடியும். இசுலாமியர்களின் கடவுள் நம்பிக்கையை 'இறைவன் என்பவன் ஒருவன்' அவன் உருவமற்றவன். அவனை யாரும் படைக்கவில்லை' என்ற மேற்சுட்டிய கொள்கையின் வழி உணர முடிந்தது. இத்தகையதொரு நெறிமுறைக்குட்பட்டுத் தான் தமிழ் இசுலாமியக் கவிஞர்கள் தன்னுடைய படைப்புகளில் கடவுள் வாழ்த்தைப் பாடியாதல் வேண்டும். உமறுப்புலவரின் கடவுள் வாழ்த்துக் குறித்து கவி.கா.மு.ஷெரீப் அவர்கள் சுட்டும் கருத்தை இந்தப் பின்புலத்திலேயே புரிந்து கொள்ளலாம்.

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவதாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்தபல் உயிரின்

கருவினும் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே

என்பது தான் உமறுப்புலவரின் கடவுள் வாழ்த்துச் செய்யுள். தமிழ்க்காப்பிய மரபிற்குட்பட்டு இசுலாமிய நெறி தவறாது பாடியுள்ள இந்நுட்பம் தமிழ்ச் சூழலில் இசுலாத்தை வெளிப்படுத்தும் முறைமைக்கு மிகச் சிறந்த சான்றாகும். அதனடிப்படையில் உருவமற்ற பொருள்களைத் தேர்ந்தெடுத்து அதனுள் அதுவாய் இறைவன் இயங்குவதைப் புலவர் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இப்பாடலுக்குப் பொருள் கூறும் முயற்சியை மேற்கொண்ட கவி.கா.மு.ஷெரீப் அவர்களின் விளக்கம் சிந்திக்கத்தக்கது. அதன்படி, கடவுளை மனதில் பொருத்திக் காண்பதற்கு இப்பாடலை விளக்கணியாக்குதல் வேண்டும் என்பது அவர்தம் கருத்து.

பாடலின் இறுதியில் உள்ள 'கருத்தனைப் பொருத்துதல் கருத்தே' எனும் தொடரைப் பாடலில் பயின்றுள்ள ஏனைய எல்லா சொற்களோடும் இணைத்துப் பார்ப்பதன் மூலம் கடவுளை மனத்தில் பொருத்திக் கொள்ளும் வகையினைக் காணலாம். இவ்விளக்கம் இசுலாமிய நெறிக்கு முற்றிலும் பொருத்தமான ஒன்று.

அதன்படி இப்பாடலில் உள்ள இறுதித் தொடரை ஒவ்வொரு தொடரோடும் இணைத்துப்பார்ப்பதன் மூலம்

திருவினும் திருவாய் பொருளினும் பொருளாய்
சிறந்த மருவினும் மருவாய்
அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும் பொருவினும்
பொருவா வடிவினும் வடிவாய்
பூதலத் துறைந்தபல் லுயிரின் கருவினும் கருவாய்ப்
பெருந்தலம் புரந்த

ஆகிய எட்டுத் தொடர்கள் அமையப் பெறுவதனைப் பார்க்கலாம்

இது தவிர இச்செய்யுளை வேறு விதமாகப் புரிந்துகொள்வதற்கும் இடமுண்டு என்பது குறித்த விளக்கமும் ஈண்டு நினையத்தக்கது. அதன்படி இப்பாடலைப் பாயிரமாகக் கொண்டு நோக்கின் 'கருத்தன்' என்னும் இறைவனைத் தம்மனத்திலும் தமிழ் உலகினர் மனத்திலும் புகுத்துவதற்கான வழியை (நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையை) விளக்கிக் கூறுவதாக அமையும். அந்நோக்குடன் தான் இச்சீறாப்புராணத்தைப் பாடலுற்றேன் என உமறு பாயிரம் கூறியுள்ளார் என்ற விளக்கமும் ஏற்புடையதாகவே அமைகிறது.

இப்படிப் பல்வேறு புரிதலுக்கும் பார்வைக்கும் இடங்கொடுக்கும் இச்செய்யுளின் பொருள் முடிவில் உருவமற்ற ஒன்றனை நோக்கியதாக இருப்பதைக் காணலாம். இதுவே இதனுடைய தனித்துவமும் ஆகும். மேலும், உருவமற்ற பொருட்களைக் கொண்டு 'கடவுள் வாழ்த்து' அமைக்கப்படும் மரபிற்கு இதையே தொடக்கமாகவும் கருத முடியும். உமறுப்புலவர் தொடங்கிவைத்த இம்மரபையே ஏனைய இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் பார்க்கமுடியும்.

பிள்ளைத்தமிழின் பத்துப் பருவங்களுள் முதற்பருவமாக அமைவது காப்புப்பருவம். குழந்தையாகப் பாவித்துப் பாடப்படும் பாட்டுத்தலைவனை இறைவன் காத்தருளவேண்டும் என்பதற்காகவே இப்பருவம் முதலில் பாடப்படுகிறது. இங்கு இறைவனுடைய செயல்களையும் அவனுடைய வடிவங்களையும் புகழ்ந்து பாடும் ஒரு பொது மரபிற்கு இசுலாமியத் தமிழின்கண் உள்ள பிள்ளைத்தமிழ் மாறுபட்டு அமைவதைப் பார்க்கமுடியும். நாஞ்சில் ஷா அவர்களுடைய நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழிலுள்ள ஒரு காப்புப் பருவப் பாடல்.

அருளாகி அன்பாகி அருவம் ஆகி
அண்ட பகிர் அண்டமதன் அடுக்கில் நில்லாப்
பொருளாகிப் புகழாகிப் பொறுமை ஆகிப்
போற்றுகின்றார் போற்றுமொரு புனிதம் ஆகித்
திருவாகித் தெளிவாகித் திருத்தம் ஆகித்
திறனாகித் தேவாகித் திறப்பும் ஆகிக்
கருவாகிக் கருத்தாகிக் கருத்தன் ஆன
கய்யூமே நபியரசர் காப்பு நீயே

என்ற இப்பாடலில் இறைவனைக் 'கருத்தன்' என்று சுட்டுகின்ற மரபைக் காணமுடிகிறது. மேலும், இக்காப்புப் பருவத்தில் அமைந்துள்ள எல்லாப் பாடல்களிலும் உருவமற்ற பொருளாலேயே இறைவனைப் பாடியிருப்பது முற்சுட்டிய கடவுள்வாழ்த்து மரபோடு ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது. அது போலவே இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் நவீன வடிவங்களாகச் சுட்டப்படும் இலக்கிய வகைகளிலும் இந்த மரபைப் பார்க்கலாம்.

1876இல் முகம்மது சாஹிப் என்பவரால் பதிப்பு செய்யப்பட்டது 'நூறு மசலா' என்ற ஒரு புதிய இலக்கிய வகை. இதில் அமையப்பெற்றுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று.

கண்ணுமின்றி செவியுமின்றி
நலவாயுமின்றி மூச்சுமின்றி
பெண்ணுமின்றி ஆணுமின்றி
ஒருபேச்சுமின்றி மூச்சுமின்றி
ஊனுமின்றி உறக்கமுமின்றி
நலவுயிர்க்குயிரா யிருப்பவனே
காணவொண்ணா முதல்வனே
யாவும் காத்தருளும் ரஹ்மானே

(மணவை முசுதபா, தமிழில் இசுலாமிய இலக்கிய வடிவங்கள், ப.46)

இதில், தமிழ் மரபிலக்கியத்திற்கேற்ற வகையில் தோன்றிய இசுலாமியத் தமிழ்க்காப்பியம் மற்றும் பிள்ளைத்தமிழ் போன்ற சிற்றிலக்கிய வகைகள் ஆகியவற்றில் பின்பற்றப்பட்ட கடவுள் வாழ்த்துமரபின் தொடர்ச்சியைப் பார்க்கலாம். எனினும், இம்மரபையே எல்லா வகையான இசுலாமியத் தமிழிலக்கியங்களிலும் காணமுடியும் என்று கருதமுடியாது. காலச்சூழலுக்கேற்ப இம்மரபுகள் மாறுபட்டு வருகின்றன. ஆனால், அவற்றை இசுலாமிய நெறிமுறைகட்கு மாற்றானதாகவோ எதிரானதாகவோ கருதமுடியாது. ஏனெனில், இம்மாற்றம் படைப்பாளனின், வாசகனின் உள்ளக்கிடக்கையைப் பொறுத்ததாக அமைந்துவிடுகிறது.

குறிப்பாக, சில இசுலாமியத் தமிழிலக்கியங்களில் முகம்மது நபி (சல்) அவரது தோழர்களாகிய உமர், அபுபெக்கர், மகள் பாத்திமா மற்றும் இசுலாமிய வலிமார்கள் போன்றோர்களைக் கடவுள் வாழ்த்தில் அமைத்துப் பாடுகின்ற மரபையும் பார்க்க முடிகின்றன. மேலும், கடவுள் வாழ்த்துத் தவிர அதன் உள்ளடக்கங்களில் கூட இத்தகைய மாற்றங்களைக் காணலாம். குறிப்பாக, இசுலாமியத் தமிழிலக்கியங்களில் தமிழ்ச்சூழலுக்கேற்ற இசுலாமிய மரபையும்; தமிழ்ச்சூழலிலும் இசுலாமிய மரபிலிருந்து விடுபடாத் தன்மையுமாகிய இருவேறு நிலைகள் அதன் உள்ளடக்கங்களில் இடம்பெறுகின்றன.

தமிழ்க்காப்பியங்கள் குறித்து மு.அப்துல்கறீம் அவர்கள் சுட்டும் கருத்தொன்றை இவ்விடத்துக் குறிப்பிடத் தகுந்த செய்தியாகக் கொள்ளலாம். “இசுலாமியத் தமிழ்க்காப்பியங்களைச் செய்த தமிழ்ப்புலவர்கள் இசுலாமியக் கொள்கைகளை விளக்கும் கருவியாகவே காப்பியங்களை உருவாக்கினாலும் அக்கருவி இனிய

தமிழ்த் தகுதி சான்ற அரிய கருவியாக இருக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொண்டிருந்தனர். தமிழ் மரபனைத்தும் தழுவிய தமிழ்க் காப்பியங்களாகவே அவற்றைப் படைக்க முயன்றனர் (வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை,ப.67).

தமிழ்க்காப்பியங்களில் மருதவளம் என்பது மிக முக்கியமான வருணனையாகும். தமிழில் கம்பர் முதல் எல்லாக் கவிஞர்களுமே இம்மரபிலிருந்து வேறுபடுவதில்லை. உமறுப்புலவரிலும் இம்மரபின் ஆளுமையைக் காணலாம். குறிப்பாக மருதவளத்தைப் பாடும்போது திருத்தக்கத்தேவரும் கம்பரும் உமறுப்புலவரும் பதுறுத்தீன் புலவரும் கள்ளைப் (மது) பருகி உழவர் திளைத்த காட்சியைப் பாடுவர். தேவரும் கம்பரும் போற்றிய இம்மரபு இசுலாமியக் கொள்கைக்கு மாறுபட்டதாயினும் உமறுப்புலவர் அதை ஏற்றுக் கொண்டுள்ளார். மது அருந்தும் பழக்கத்துக்கு இசுலாம் எதிரானதால் 'சேகுனாப் புலவர்' தம்முடைய குத்பு நாயகத்தில் கள்ளுக்குப்பதிலாக மாற்றுச் சொல்லைப் பெய்திருப்பது ஈண்டு நினையத்தக்கது. நூறு மசலாவில் அப்பாசு என்பவனுக்குத் தன் தந்தையே தண்டனை வழங்கிய செயல் இம்மதுவினால் விளைந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது.[10]

இது குறித்து வண்ணக்களஞ்சியப்புலவரின் குத்புநாயகம் ஆய்வுரையில் மு.அப்துல்கறீம் சுட்டும் கருத்து சிந்திக்கத்தக்கதாகிறது. முசுலிம்கள் 'கள்' குடித்ததாகப் பாடாது வயலில் வேலை செய்த உழவர்கள் 'கள்' குடித்ததாகப் பாடுவதால் இசுலாமிய மது மறுப்புக் கொள்கைக்கு இஃது முரண் என்று கூறமுடியாது. இருப்பினும் இசுலாமியப் புலவர்கள் மது அருந்துவது பற்றித் தம் காப்பியத்தில் குறிப்பதையே குறை கூறுவார் உண்டு. இது கருதியே சேகுனாப்புலவர் தம்முடைய குத்பு நாயகப் புராணத்தின் நாட்டுப்படலத்தில் 'மது அருந்தி' என்பதற்குப் பதிலாக கூழ் பல குடித்து (பாடல்.104) என மாற்றியதாக மு.அப்துல்கறீம் அவர்கள் சுட்டுவர் (வண்ணக் களஞ்சியப்புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை,ப.70) அரபு நாட்டில் மதுப்பழக்கத்திற்கு எதிராக நபிகள்நாயகம் 'மதுவிலக்குச் சட்டம்' நிறைவேற்றியமை ஈண்டு நினையத்தக்கது.[11]

உமறுப்புலவர் கூற வரும் வரலாறும் அது நிகழ்ந்த களமும் வேறாக இருந்தாலும் இப்பொழுது அது நிகழ்கின்ற இடமாகத் தமிழ்ச்சூழலைக் கருதிமையால் தமிழகச் சூழலை விட்டு விலகாது அல்லது அதற்கு எதிராக அவரால் செயல்பட முடியவில்லை. இதன் பயனாய் நாயகம் பிறந்த பாலைவனமாகிய அரபு நாடு செந்நெல்லும்

கன்னலும் செறிந்த தமிழகமாக மாறியிருக்கிறது. ஏனெனில், காப்பியத்தில் காட்டப்படும் நாட்டுப் படலமும் நகரப்படலமும் மிகவும் வளமானதாக இருக்கவேண்டும் என்பது தமிழ்க்காப்பிய மரபில் காணலாகும் மிக முக்கியமான நிகழ்வாகும். இம்மரபையே ஏனைய இசுலாமியத் தமிழ்க்காப்பியங்களிலும் காணலாம். இதனை "அரபு நாடு தமிழ் நாடாகிறது; இசுலாமிய சமயம் தமிழ்ச் சமயமாகிறது; நபிகள் நாயகம் தமிழ்த் தலை மாந்தர் ஆகிறார்" என்ற டாக்டர் சாரங்கபாணி அவர்களின் ஆய்வுரை வண்ணக்களஞ்சியப் புலவரின் முகியித்தின் புராணத்திற்கு முற்றும் பொருந்துவதாகும் என்ற மு.அப்துல் கறீம் அவர்களுடைய கூற்று உறுதிப்படுத்தும் (வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை,ப.69).

கவிஞர்களுடைய கற்பனைத் திறமனைத்தும் காட்டுதற்குக் காப்பியத்தின் தொடக்கமாக அமையும் நாட்டுப்படலத்தையும் நகரப் படலத்தையுமே மிகுதியாகப் பயன்படுத்திக் கொள்வது மரபு. குறிப்பாக, கம்பருடைய நாட்டுப்படல வர்ணனை வழி அவரது கோசல நாட்டு வளப்பத்தைப் புரிந்து கொள்வதைப் போல திருத்தக்கதேவரின் கற்பனை வளத்தை அவருடைய ஏமாங்கத நாட்டு வர்ணனை மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

உமறுப்புலவர் பாடியுள்ள நாட்டுப் படல வர்ணனை தமிழ் நாட்டைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இப்பாடல்களைக் காண்பவருக்கு அரபு நாடு தமிழ் நாட்டைப் போல் காட்சி தரும் எண்ணத்தை உருவாக்கும். ஆனால் உமறு சுட்டும் நாடு, எதையும் குறிப்பிடாத ஒரு பொதுவான நாடு என்பது கவி.கா.மு.ஷெரீப் அவர்களின் கருத்தாகும். அத்துடன் நாட்டுப் படலம் பாடுவது தமிழ்க்காவிய மரபாதலால் அது முதலில் பாடப்பட்டது.

ஆனால், அரபு நாடு பாலையாதலால் அத்தன்மையை முதலில் பாடுவது மங்களமாகாது எனக் கருதிப் பாடவில்லை என்றும் அரபு நாட்டில் ஆற்று வளமின்மையால் ஆற்றுப்படலம் பாடவில்லை என்றும் அக்காலை அரசு என்ற ஒன்று இல்லையாதலால் அரசியற்படலம் பாடவில்லை என்றும் கவி.கா.மு. ஷெரீப் குறிப்பிடும் கருத்து உமறுப்புலவரின் நாட்டுப் படலப் பின்னணியை எடுத்துரைப்பனவாக அமையும். அதுபோலவே உமறு காட்டும் நாட்டுப்படலத்தில் இயற்கையின் உச்சத்தைக் காணநேர்ந்தாலும் அதைவிட இசுலாமிய இழையோட்டத்தின் வீச்சை மிகுதியாகக் காணமுடியும்.

அருமறை நெறியும் வணக்கமும் கொடையும்
அன்பும் ஆதரவும்நல் லறிவும்
தருமமும் பொறையும் இரக்கமும் குணமும்
தயவும் சீர் ஒழுக்கமும் உடையோர்
பெருகிய செல்வக் குடியோடு கிளையும்
பெருத்தினிது இருந்துவாழ் வனபோல்
மருமலர்ப் பழனக் காடெலாம் நெருங்கி
வளர்ந்தது நெட்டிலை நாற்றே

என்பது சீறாப்புராண நாட்டுப் படலத்திலுள்ள ஒரு பாடல். கழனியிலே நடவு செய்யப்பட்ட பயிர்கள் ஒன்று பத்தாகக் கிளைத்துத் தழைத்திருப்பதைச் சுட்டும் இப்பாடல் ஈகை குணத்திற்கு உவமையாகச் சுட்டியிருப்பது எண்ணத்தக்கது. ஒருவருக்கு ஒன்றை ஈந்தால் அது ஈந்தவருக்குப் பத்து மடங்காகப் பெருகும் என்பது இறை வசனம்.

இப்பொருண்மைக் கொப்பவே சேகுனாப்புலவரின் காப்பியப் பாடலொன்று அமைந்திருப்பதைக் காணலாம். இசுலாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ்க் காப்பியங்களுள் தனிச்சிறப்புடன் விளங்குவது இவரது புதுகுஷ்ஷாம் என்ற காப்பியமாகும். செய்கு அப்துல் காதிர் நையினார் லெப்பை ஆலிம் என்பவரே பின்னர் சேகுனாப் புலவர் என வழங்கப்பட்டார். இவர் குணங்குடி மசுதான் சாகிபு அவர்களின் ஒரு சாலை மாணக்கராவார். அல்லாஹ்வுடைய பாதையில் தனது பொருட்களைச் செலவு செய்கிறவனுடைய வாழ்க்கை ஒரு வித்தின் தன்மையோடு ஒப்பிடப்பட்டுள்ள அப்பாடல்,

வித்தொன்று குலையோ ரேழு குலைக்கொரு நூறு
வித்தின்
எத்துணைப் பயனுங் கொண்ட தென்மையர்க்
குதவு மார்ப்பின்
ஒத்தன னெனினும் மேலோன் வழிபடும்
பொருளென் றோங்கும்
சத்திய மறையின் தீஞ்சொல் தவழ்ந்து லாமெனத்
தினீரே

நிலத்தில் ஊன்றிய வித்தொன்று ஏழு கிளைகளாகப் பிரிந்து கிளைகள் ஈன்ற ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் ஆக எழுநூறு வித்துக்களை உற்பத்திச் செய்தன. அல்லாவினுடைய பாதையில் தனது பொருட்களைச் செலவிடுகிறவனுடைய பொருள்

வித்துக்களைப் போல பெருகும் என்ற கருத்தை இப்பாடல் கொண்டுள்ளது.

மனிதர்களிடையே அன்பும், ஆதரவும் இரக்கமும் காட்டி நேர்மையுடனும் ஒழுக்கமுடனும் வாழும் வள்ளல்களின் மனை செல்வச் சிறப்போடு மக்கள் சுற்றம் சூழப் பெருகி வருகின்ற செயலுக்கு நிலத்தில் ஊன்றிய வித்தை ஒப்பிட்டிருக்கும் இச்செயல் இசுலாமியத்தின் ஐந்து கடமைகளுள் ஒன்றான ஜகாத்தோடு[12] பொருந்தி வருவதைப் பார்க்க முடியும். நகரப்படலமும் இதே நெறியைத்தான் பின்பற்றிச் செல்கிறது.

மறையின் மிக்கவர் ஓதிய ஓசையும் வரிசைத்
துறவின் மிக்கவர் திக்கிறின் ஓசையும் சூழ்ந்தே
இறை வனைத்தொழுது இருகையும் ஏந்திய ஆமீன்
முறைமுறைப்படி கூறிய ஓசையும் முழங்கும்

என்ற இப்பாடலில் சுட்டப்பெறும் மக்கா மாநகர் இறைவனைத் தொழுவோர் நடத்துகின்ற கூட்டுப்பிரார்த்தனையின் போது எழுகின்ற "ஆமீன்" என்னும் இசையை உடைத்து என்ற கருத்தை உணர்த்துவதாக அமைகிறது. அதாவது, மனிதர் தங்களுக்குள் இருக்கும் வேற்றுமை, பகை முதலானவற்றை மறந்து அனைவரும் ஒன்று என்ற உணர்வைத் தரும் சமத்துவ நெறியின் பாற்பட்டதாகவே இத்தகைய 'ஆமீன்' என்ற இசை வடிவத்தைக் கருதுதல் வேண்டும். ஜகாத்தின் நேரடிப் பொருளாகிய தூய்மை என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. சீறாப்புராணத்தில் கவிதைச் சிறப்பு மற்றும் அதன் கருத்துவளம் குறித்து சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்கள் சுட்டும் கருத்தொன்று இந்நூலின் இறுதியில் தரப்பட்டுள்ளது.

இலக்கியநெறியும் சமயநெறியும்

இசுலாமியப் புலவர்களுக்கு இயற்கையைக் கண்டால் பேரானந்தம். காரணம் மற்றெதையும் கற்பனையாகவோ கற்பனை கலந்தோ பாடுகின்ற வாய்ப்பு இசுலாமியப் புலவர்க்கு அடியோடு இல்லை. உள்ளதை உள்ளவாறே பாடவேண்டும். பெண்களையோ ஆண்களையோ அங்க வர்ணனை செய்ய அனுமதியில்லை என்பதெல்லாம் இசுலாமிய நெறியின் பாற்பட்டதாகும். எனவே, இயற்கையின் பால் வரும்போது மட்டும் ஆனந்தப் பேரருங்காதலுக்காளாகி விடுகின்றார். ஆகவே இசுலாமிய புலவர்களிடையே இயற்கையை வருணிக்கின்ற திறம் சற்றே கூடுதல் என்பது இசுலாமியப் புலவர்களின் கவிதை மரபு குறித்து கவி.கா.மு.ஷெரீப் சுட்டும் மதிப்பீடாகும் (சீறாப்புராணச் சொற்பொழிவு, ப. 56).

ஆனால், இலக்கிய வகைகளுக்குச் சொல்லப்பட்ட இலக்கிய விதிகள் மாறாது அவை அப்படியே பின்பற்றப் படுதல் வேண்டும் என்ற ஒரு வரையறையை ஏற்படுத்திக் கொள்ளும் போது சில மரபு மாற்றங்கள் நடைபெறுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. எனினும் இசுலாமிய மரபைப் பின்பற்றிச் செல்லும் கவிஞர்களையும் இங்கே பார்க்கத்தான் முடிகின்றன. குறிப்பாக, இசுலாத்தின் அடிப்படையான கருத்துக்கு எதிராக அமையும் பட்சத்தில் அங்குச் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இங்கு நபிகள் நாயகம் வரலாற்றில் இருந்து சில சான்றுகளைச் சுட்டலாம். இசுலாமியம் பெண்களைக் கண்ணியப்படுத்துகின்ற ஒரு மார்க்கமாகும். குறைஷியர் கூட்டத்தலைவன் அபூஜஹலின் என்பவனுக்கும் முகம்மது நபி அவர்களுக்கும் நடந்த போரில் நாயகம் அணியினர் வெற்றி பெறுகின்றனர்.

போர் மரபுப்படி பிணைக்கைதிகளாகச் சிறைபிடித்த பகைவர்களை என்ன செய்யலாம் என்ற விவாதம் நடைபெற்ற போது, சிறை பிடித்தவர்களில் சிலரை நிபந்தனைகளின் பேரில் விடுதலை செய்யப்பட்ட நிகழ்வு குறிப்பிடத்தக்கது. மேலும்,

சிறையிலிருந்த புலவர் ஒருவர் அண்ணலை நோக்கி முஹம்மதே எனக்குப் பெண் மக்கள் ஐவர் உள்ளனர். அவர்களுக்கு என்னை அன்பளிப்பாக அளித்துவிடுங்கள் என்று வேண்டிக் கொண்டபோது அதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணல் அவர்களின் கண்கள் கலங்கினவாம். அப்புலவரை விடுதலை செய்யாதிருப்பின் அந்தப் பெண் மக்களுடைய நிலை என்னவாகும் என்ற சிந்தனையில் மூழ்கிய அண்ணல் அப்புலவரை விடுதலை செய்துள்ளார்.

அது போன்றே அபூதஜனா என்பவன் போரின் பொருட்டு நபிகள் நாயகத்திடமிருந்து பெற்ற வாளால் குறைஷியர்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு சென்ற போது தனக்கு முன்னே ஒரு குறைஷியப் பெண் எதிர்ப்பட்டாள். அவளை வெட்டுவதற்கு வாளை உயர்த்திய போது தூக்கப்பட்ட கை அப்படியே மேலேயே நின்று விட்டது. அண்ணல் அவர்களின் அருமை வாளின் பெருமையை ஒரு பெண்ணிடமா காட்டுவது என்றெழுந்த சிந்தனையின் விளைவே அதற்குக் காரணமாகும்.

எதிரிநாட்டுப் பெண்ணாக இருந்தாலும் கூட அவளை மிகுந்த மரியாதையோடு நடத்த வேண்டும் என்ற நெறியைப் போதிப்பதே இசுலாமியம். இவ்வாறு பெண் பெருமை பேசும் இசுலாத்திற்கு நாயகம் அவர்களுடைய வாழ்விலிருந்து பல்வேறு உதாரணங்களைக் காட்டமுடியும். இத்தகையதொரு பின்புலத்தில் இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் பெண்ணை இழிவு படுத்தும் விதமாக சித்திரிக்கப்படும் காட்சிகள் எப்படி நியாயமாகும். பெண்களைக் கேசாதி பாதமாகவோ பாதாதி கேசமாகவோ வர்ணித்தல் என்பது அனைத்து காப்பிய ஆசிரியர்களுக்கும் கைவந்த கலை. பெண்ணின் வர்ணனை இடம்பெறாத காப்பியம் முழுமைப் பெற்ற காப்பியமாகக் கருதப்பெறாது என்பது காப்பிய மரபு.

இத்தகையச் சூழலில் தான் உமறுப்புலவரும் தன்னுடையக் காப்பியத்தில் கேசாதிபாத வர்ணனையைப் பேசியாதல் வேண்டும். ஆனால், சீறாப்புராணத்தில் புலவர் வர்ணிக்கப் பட வேண்டிய பெண்பாத்திரங்கள் நபிகளின் தாயார் ஆமினா அம்மையார், செவிலித் தாயார், ஹலிமா அம்மையார், துணைவியார் கதீஜா அம்மையார், ஆயிஷா அம்மையார் மற்றும் மகள் பாத்திமா அம்மையார் போன்ற பெண்மக்களாவர். இசுலாமிய நெறி இவர்களைப் பற்றிய வர்ணனைக்கு இடம்தராது.

இத்தகையதொரு இக்கட்டான சூழலில் உமறுப் புலவர் கையாண்ட உத்திதான் தசைக்கட்டியைப் பெண் உருவாக்கிக்

கொண்ட நுட்பம். சீறாப்புராணத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள பல அற்புதங்களில் ஒன்றுதான் இது. இவ்வற்புத நிகழ்வு திமிஷ்கு நாட்டு மன்னன் ஹபீபு முன்னிலையில் நபிகள் நாயகம் செய்து காட்டியதாகும். இந்நிகழ்ச்சியையே உமறுப்புலவர் தம் காப்பியத்திலும் பின்பற்றியுள்ளார்.

கேசாதிபாத முறையில் வர்ணிக்கப் பட்டுள்ள இப்பெண் அமாவாசைக் காலத்தில் தோன்றிய சந்திரனிலிருந்து உருவாக்கிக் கொண்ட ஒரு அஃறிணைப் பொருளாகும். தசைக்கட்டியைப் பெண் உருவமாக்கிய படலம் முழுவதிலும் உள்ள அங்க வர்ணனைகள் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. கூந்தல் தொட்டுப் பாதம் வரை உள்ள உறுப்புக்கள் அனைத்திற்கும் சொல்லப்பட்ட உவமைகள் நிலவின் தன்மைகளோடு பொருந்தி வருவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில், நெற்றியையும் புருவத்தையும் வர்ணிக்கக்கூடிய ஒரு பாடல்.

கீற்றிளம் பிறையுங் கணிச்சியின் வளைவுங்
கிளர்ந்தசெவ் வகத்திமென் மலருந்
தோற்றிடத் தோற்றி விளங்குநன் னுதலாள்
சுடருமுள் வாரணத் தலகு
மாற்றருந் தனுசுங் கருங்கொடியெதிர்வு
மாற்றிமைக் கட்கடற் கரையின்
மேற்றிகழ் கரிய பவளமென் கொழுந்தாய்
விளங்கிய செழும் புருவத்தான் (பாடல்.19)

மேற்சுட்டிய இப்பாடலில் நெற்றி இளம்பிறைக்கும் புருவங்கள் வில் போன்று வளைந்த தன்மைக்கும் (பிறையின் வடிவு) தொடர்பு படுத்தபட்டிருப்பது ஒரு வகையில் நிலவையே குறிப்பிடுவதாக அமைகிறது. கவிதையில் இருபொருள் படும்படிப் பாடுவது கவிஞர்களுக்கு கைவந்த கலை. தமிழ்க் கவிஞர்களிடையே காணப்பட்ட இக்கவிதை மரபையே நாம் உமறுப் புலவரிடமும் காணமுடிகிறது.

உமறுப்புலவரிடம் காணப்பட்ட இந்த உத்தியைத் திருமணக்காட்சி பாடிய சேகாதி நாயினாப் புலவரிடமும் காணலாம். அவ்வகையில் திருமணக்காட்சியில் கேசாதிபாத வர்ணனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பெண்கள் விண்ணக மகளிராக இருத்தல் ஈண்டு கவனிக்கத்தக்கது. விண்ணக மகளிரை இசுலாத்தில் "ஹீறுல்" என அழைப்பர். ஹீறுல் என்பது தூய்மை, அழகு, உண்மை முதலான பொருட்களைக் குறிக்கும். கண்ணழகிகள் என்றும் இச்சொற்றொடர்க்குப் பொருள் கூறுவர்.

அல்குர் ஆனிலும் 'ஹீறுல் ஈன்கள்' பற்றிய குறிப்பு உள்ளது. சொர்க்கலோக வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இக்காவியத்தில் சொர்க்கலோகத்தில் உள்ள பெண்களைக் கேசாதிபாத முறையில் சித்திரிக்கப்பட்டுள்ள நிலையை எடுத்துக் கூறுகிறது. இதற்காகத் திருமணக்காட்சியில் அமைக்கப் பெற்ற ஹீறுல் ஹீன்கள் சிறப்புப் படலத்தில் இத்தகைய கேசாதிபாத வருணனையை விரிவாகக் காணலாம்.

அதுபோலவே குஞ்ஞுமூசு ஆலிம் புலவரின் இறவுசுல் கூல் படைப்போரில் இடம்பெற்றுள்ள 'சல்கா' அம்மையாரைப் பற்றிய வர்ணனை அவ்வம்மையார் இசுலாத்தைத் தழுவுவதற்கு முன்னர் இருந்த நிலையைப் பற்றியது என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தகுந்தது. முசுலிம் பெண்களைக் கேசாதிபாத முறையில் பாடக் கூடாது என்ற மரபு கருதியே முசுலிம் அல்லாத ஒரு பெண் அதாவது இசுலாமியத்தைத் தழுவதற்கு முன்பிருந்த அப்பெண்ணைக் கேசாதிபாத வர்ணனையில் பாடியதை ஆய்வாளர்கள் சுட்டுவர் (இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு -I, ப.354).

இசுலாமிய இலக்கியத்தில் புதுமரபாகச் சுட்டப்படும் கேசாதிபாத வர்ணனையைப் போன்றே உலா மரபு அமைந்துள்ளமையையும் பார்க்கலாம். தமிழ் மரபில் வீதி வழியே உலா வரும் தலைவனை எழுபருவ மகளிரும் பார்த்து அவனது அழகில் மையல் கொள்ள வேண்டும் என்பது பொதுவாகச் சுட்டப்பெறும் உலா மரபாகும். தமிழ்க் காப்பியங்களில் இடம்பெறும் இவ்வுலா நிகழ்வு திருமண நிகழ்வின் ஒரு பகுதியாக அமைகிறது. இது தவிர அரசன் உலா வருகின்ற தன்மையும் உலா இலக்கியத்தின் முக்கியப் குதியாக அமைகிறது.

இசுலாமியத் தமிழிலக்கியங்களில் காப்பிய நாயகனின் திருமண நிகழ்வின் போது மணமகன் (காப்பியத் தலைவன்) உலா வருகின்ற மரபு உள்ளது. இசுலாமியத் திருமண மரபு தமிழ்த்திருமண மரபிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. தமிழ்த்திருமணத்தில் மணப்பெண்ணே உலா வருவது வழக்கம். மணமகன் உலா வருகின்ற மரபு தமிழில் இல்லை. ஆனால் இன்றைக்கு இம்மரபு மாறி வருகிறது. தமிழ்த் திருமணங்கள் பெரும்பாலும் ஆடவர் இல்லத்தில் நடத்தப் பெறுவதே மரபாகின்றது. இதை, திராவிடர்களிடையே காணப்பெறும் ஆண்வழிக்கொத்து என்ற அமைப்பு முறையின் தொடர்ச்சியாகவே அறிஞர் பெருமக்கள் சுட்டுவர்.

இதனடிப்படையில் தமிழர் திருமணங்கள் ஆடவர் வீட்டில் நடத்தப்பெறும் மரபாக இருப்பதால் புதிதாக வரும் மணப்பெண்ணை

மாப்பிள்ளை வீட்டார் ஊராருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் பெண் ஊர்வலம் மேற்கொள்ளப் பெறுகிறது. இம்மரபைத் தமிழகக் கிராமப்புறங்களில் இன்றளவும் காணமுடியும். அதுபோன்றே திருமணத்திற்கு முன்பாகப் பெண்ணை நிச்சயம் (உறுதிஏற்பு) செய்யும் மரபையும் தமிழர் திருமணங்களில் காணமுடிகின்றன. இந்நிகழ்வில் ஆடவர், தாம் மணக்கவிருக்கும் பெண்ணுக்கு மணப்பொருள் கொடுத்து உறுதி செய்து கொள்வர்.

தமிழகத்தில் இம்முறையைப் 'பரிசம் போடுதல்' என்ற பெயரால் வழங்குவர். தொல்காப்பியத்தில் காணலாகும் 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' என்ற துறையின் தொடர்ச்சியாகவும் இதனைக் கருதலாம். தாய்மையைப் போற்றிய பண்டைத் தமிழ்ச்சமூகத்தில் காணப்பட்ட இம்மரபை சமூகவியல் அறிஞர்கள் திராவிட மரபின் அடையாளமாகக் கருதுவர். திருமணத்திற்குப் பிறகு பெண் தாம் பிறந்தகத்தை விட்டு ஆடவர் வீட்டிற்குச் சொந்தமாகிவிடுவதால் பெண்வீட்டாரிடையே ஏற்படும் இழப்பை ஈடுசெய்வதற்காக இத்தகைய முறை எழுந்தது என்பது மானுடவியல் அறிஞர்கள் சுட்டும் கருத்தாகும்.

தமிழ்ச்சமூக அமைப்பில் மறைந்து வருகிற இத்திருமண மரபோடு தொடர்புடைய ஒரு முறையை இசுலாமியத் திருமண முறையிலும் பார்க்கலாம். திருமணத்திற்கு முன்பாக மணப்பெண்ணுக்கு மணமகனால் கொடுக்கப்படும் திருமணத் தொகையை இசுலாமியத்தில் 'மஹர்'[13] என்று கூறுவர். திருமணத்திற்கு முன்பு வரை மணப்பெண் தான் மணக்கவிருக்கும் ஆடவனைப் பார்க்கக் கூடாது என்ற மரபு உள்ளது. அதே போன்று பெண்கள் உடல் அழகு புறத்தே தோன்றாதவாறு ஆடை உடுத்துவதும் பெண்கள் இருக்குமிடத்தில் திரையிட்டுக் கொள்வதும் போன்ற கோஷா முறை மரபும் இசுலாமியத்தில் நிலவுகின்ற கட்டுப்பாடுகளாகும்.

இத்தகையப் பின்புலத்தில் தான் இசுலாமியத் தமிழ்க்காப்பியத் திருமண உலாவில் ஆடவன் (காப்பியத் தலைவன்) உலா வருவதாகக் காட்டப்படுகின்றது. அதுமட்டுமல்லாது இசுலாமியத் திருமணம் பெண் வீட்டில் நடைபெறும் மரபாக இருப்பதால் பெண்வீட்டாருக்கும் அவரது ஊராருக்கும் மணமகனை அறிமுகப்படுத்துவதன் பொருட்டு அங்கு மணமகன் ஊர்வலம் மேற்கொள்ளப்பெறுகிறது. ஆனால் இசுலாமிய நெறிக்குட்பட்டு அமையும் இம்மணமகன் உலாவில் உலா மரபுப்படி எழுபருவ

மகளிரும் காணுதல் வேண்டும் என்ற இலக்கிய மரபு இசுலாத்திற்கு எதிரானதாக அமைகிறது.

முசுலிம் தமிழ்ப் புலவர்கள் நூலின் இடையே உலா பாடுவதன்றித் தனியே உலா நூல் பாடுவதில்லை. இசுலாமியத் தமிழ்ச்சிற்றிலக்கியங்களில் ஒன்றான உலா இலக்கிய வகையில் மா.முகம்மது மைதீனின் 'காசிம் உலா'வைத் தவிர வேறெந்த நூலும் பாடப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ், ப.13).

உலாவில் இடம்பெறும் தலைமை மரபு மட்டும் இசுலாமிய நெறியின் பாற்பட்டு அமைய உலாக்காணும் பெண்கள் இசுலாமிய நெறிக்குட்படாது தமிழ் இலக்கிய மரபுக்குட்பட்டு அமைய வேண்டிய சூழலில் இங்கும் சில மரபு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இம்மாற்றத்தை உமறுப்புலவரின் சீறாப்புராணத்திலேயே பார்க்கலாம். நபிகள் நாயகம் அவர்கள் மணக்கோலம் பூண்டு புரவியின் மீது அமர்ந்து நகர் வலம் புறப்படுகின்ற காட்சியைப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பெண்களும் தெருக்கள் தோறும் கூடி நின்று கண்டு களிக்கின்றனர். ஆனால் இங்கு உமறுப்புலவர் மேற்கொண்ட உத்தி தமிழ் உலா மரபிலிருந்து வேறுபட்டதாக இருக்கக் காணலாம்.

நபிகள் நாயகம் அவர்களின் நகர்வலக்காட்சியைக் காணுகின்ற பெண்கள் இந்த அரிய காட்சியைக்காண நபிகள் நாயகம் அவர்களின் தாயார் ஆமினா இல்லையே எனஅனுதாப்படுகின்றனர். நபிகள் நாயகம் போலவே கதீஜா பிராட்டியும் சிறந்த அழகு என்கின்றனர். அழகும் அழகும் சேர்வது மிகப் பொருத்தம் என்கின்றனர். குதிரை சற்றே மெதுவாகச் சென்றால் நாயகத் திருமேனியின் நல்லழகை இன்னும் சற்றுக் கூடுதலாகக் கண்டு மகிழலாம் என்கின்றனர். இக்கருத்தினை,

மணிப்பளிக் கறைநிலை மாடம் மீதினும்
குணிப்பாரு கூடகோ புரத்து மீதினும்
பணிப்பரு மேல்நிலைப் பரப்பு மீதினும்
தணிப்பிலா துயர்ந்தமண் டபத்தின் சார்பினும்

செழுமுகில் கவிகைஅம் செம்மல் வீதிவாய்
வழுவறு பவனியின் வருகின் றர்என
எழுவகைப் பேதைபே ரிளம்பெண் ஈறதாய்க்
குழுவுடன் திசைதிசை நிறைந்து கூடினார்

ஆகிய பாடலடிகள் வாயிலாகவும் ஆமினாத் தாயார் புலம்புவதாகக் கூறப்படும் காட்சியை,

கண்ணகல் ஞாலமெல்லாம் களிப்புறும் அரியகாட்சி
அண்ணல்தன் மணத்தின் கோலம் ஆமின என்னும் அந்தப்
பெண்ணிருந் தினிதுகாணப் பெற்றிலன் காணு மென்பார்

என்ற பாடலடிகளின் வழியேயும் அறியலாம். இப்படி எழுவகைப் பருவப்பெண்களும் நபிகள் நாயகம் அவர்களுடைய அழகையும் கதீஜா பிராட்டியாருடைய அழகையும் புகழ்ந்து பாரட்டும் பாடியாக உள்ள இந்நிகழ்வு உலா மரபிற்கு அப்பாற்பட்டதாகும். உலா வருணனையில் இதை ஒரு புதிய பாணி என்றும் கூறுவர்.

சீறாப்புராணத்தை அடுத்து வந்த இசுலாமியத் தமிழ்க்காப்பியங்களான திருக்காரணப்புராணம், முகியித்தின் புராணம். தீன் விளக்கம் முதலானவற்றில் எத்தகைய மாற்றமும் செய்யப்படாது அவை அப்படியே தமிழிலக்கிய மரபுப்படியே அமைந்திருப்பதைப் பார்க்க முடியும். வண்ணக்களஞ்சியப் புலவரின் தீன் விளக்கத்தில் காட்டப்பெறும் எழுவகைப்பருவப் பெண்களின் காதல் நிலை மற்றும் அவர்களது உடல் வர்ணனை ஆகியன அவர்களுடைய அகவைக்குச் சற்றும் பொருந்தாது இருப்பதையும் பார்க்கலாம்.

மணமகன் செய்யிது இசுஹாக்கு என்பவரின் ஊர்வலத்தைக் கண்ட பேதையின் உடலழகைச் சுட்டும் போது வின்னலா முலையை உடையவள்; முதுக்குறைந்தவள்; பெருக்காத முலையை உடையவள்; மழலைச் சொற்களையே பேசிக் கொண்டிருப்பவள். அவள் தலைவன் பவனி வந்த யானையின் மீது தன்னை ஏற்றும்படி தன்னோடிருந்த தாயாரைக் கேட்டுகொண்டாள் என்பதாக ஒரு செய்யுள் அமைகிறது.

பேதைப் பருவத்திற்குரிய அகவை ஐந்து முதல் எட்டு வரையிலாகும். இப்பருவம் உலகை அறியும் நிலை எய்தாதப் பருவம் என்று பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. எட்டு வயது உள்ள குழந்தையை அதன் பாலினத்திற்கேற்பப் பெண் குழந்தை, ஆண்குழந்தை அல்லது சிறுமி, சிறுவன் என்று சொல்லுகின்ற மொழி மரபுதான் இருக்கின்றதே தவிர "பெண்" என்று அழைக்கின்ற மரபு இல்லை. அது போன்றே ஒன்பது முதல் பத்து வயது அடைந்த மனதில் ஆசை அரும்பி அதை உணர்த்தும் உணராததுமான

பெதும்பைக்குத் தலைவனின் திருமண ஊர்வலத்தைப் பார்த்தவுடன் மயக்கம் ஏற்பட்டதாம். இதனை,

குன்றைப் போன்முலை யினர்குழு வினின் மயற்
கொடுமை
யன்றைக் கேவரத் துடங்கிய பெதும்பையோ ரன்ன
மின்றைக் கேமுலை தடித்ததே தெனச்சகி யிடத்தி
லொன்றைக் கூறின ளெனக்குமவ் விதமென
வுரைத்தாள்
(செய்யிதி சுஹறாக்கு மங்கலப் படலம்-38)

என்ற பாடலடிகள் வழியே அறியலாம். பெதும்பைக்குச் சொல்லப்பட்ட இவ்வங்க வர்ணனை உண்மையிலேயே அப்பெண்ணுக்கு இருக்குமா என்பதும் பொருத்தமாகப் படவில்லை. அது போலவே காம உணர்ச்சி அல்லது ஆசை தளர்வுற்ற பருவம் பேரிளம் பெண். இப்பெண் முப்பது முதல் முப்பத்தாறு வயதை உடையவள். தலைவன் பவனிவரும் மணக்கோலத்தைக் கண்டதும் அவள் உடுத்திருந்த சேலை நெகிழ்ந்தது; அதனை அவள் உணரவில்லை; பின் உணர்ந்தபின் அதைச் சரிசெய்தாள். சேலை அவிழ்வதும் உடுப்பதுமாக இருந்த அவள் தனது உள்ளக் கிடக்கையை அடக்கிக் கொண்டாள் என்பதைப் பின்வரும் பாடல் எடுத்தியம்புகிறது.

மயலி னாற்கலை நெகிழ்ந்ததை மடந்தைய றறியாச்
செயல தாயுடுப் பதுநெகிழ் வதுவுமாய்த் திரிந்தாள்
பயிலி யாவதும் பயின்றகத் தடக்கியும் பாசம்
பெயர்கி லாதுழல் கின்றதோர் பேரிளம் பெண்ணே
(பாடல்.43)

உலகியலை அறியாத பருவத்தும் (பேதை) ஆசை அற்று உடல் தளர்வுற்ற பருவத்தும் (பேரிளம்பெண்) காதல் வருவது போன்று காட்டியிருப்பது அறிவுக்கு ஏற்புடையதாக இல்லை. வழிவழியாகப் பாடப்பட்டு வரும் உலாமரபில் இசுலாமியப் புலவர்களைத் தவிர வேறு சில யாரும் குறுக்குக் கேள்வி எழுப்பியதாகவும் தெரியவில்லை. ஆனாலும், இசுலாமியப் புலவர்கள் தமிழ் இலக்கிய மரபிலேயே கவனம் செலுத்தியுள்ளமையால் இத்தகைய கேள்விகள் ஒருசிலருக்கு எழவில்லை.

தமிழில் காவிய காலம் என்பதே அது ஒரு மூடப்பட்ட சமூக அமைப்பைச் (Closing society) சேர்ந்தது என்பதும் அதில்

கூறப்பெறும் செய்திகள் மேட்டிமைச் சமூகத்து வாழ்வியலைச் சார்ந்தாக இருப்பதும் கற்பனைக்குரிய இடம் மிகுதியாக இருப்பதும் என்பது ஆராய்ச்சியாளர்கள் முன்வைக்கப்படும் மதிப்பீடு ஆகும். ஆகவே, தமிழ்க் காப்பிய உள்ளடக்கங்களில் சாதாரண மக்களைப் பாடுபொருளாக அமைக்கும் மரபைக் காணமுடியாது. காவியம் அல்லது இதிகாசம் என்பதே அனாதிகாலந்தொட்டு மக்களது நாகரிக வாழ்விற்கு மிகமிக முன்பாகவே கர்ணபரம்பரையாய் வழங்கி வந்த சரித்திரங்களாகும் என்று எஸ்.வையாபுரிப்பிள்ளை கருதுவர் (தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம். ப.266).

மேலைநாடுகளில் கூட இதிகாசத்தை "எபிக்" என்றும் பிற்பட்ட காவியங்களை "ரொமான்சு" 'நெரெட்டிப் பொயம்' என்றுதான் வழங்குகின்றனர். அங்குத் தமிழில் இருப்பது போன்ற காவியப் பகுப்புமுறைகளையும் உள்ளடக்கங்களையும் காண முடியாது. இச்சூழலில் நாடு, நகர், வனம், மலை முதலியன பற்றிய வர்ணனைகளும் பொழில் விளையாட்டு, புனலாடல் முதலியன பற்றிய வருணனைகளும் எதன் பொருட்டு காவியங்களில் இடம்பெறுகின்றன என்பதற்குரிய போதுமான விளக்கம் இதுவரை கிடைக்கவில்லை.

ஆனாலும், காப்பியம் என்றால் அதில் தண்டியாசிரியர் கூறிய அத்தனை உறுப்புகளும் அமையப் பெறுதல் வேண்டும் என்ற ஒரு பொதுவான மனநிலையைத்தான் இன்றைய காப்பிய ஆசிரியர்களிடம் காணமுடிகின்றன. என்றாலும், காப்பியப் பொருண்மையில் சமயமும் பண்பாடும் பகுத்தறிவுச் சிந்தனைகளும் குறுக்கிடும் போது அங்குப் பல கேள்விகள் எழுவதும், அதன் விளைவாகப் பல மாற்றங்கள் மேற்கொள்ளப் பெறுவதும் போன்ற எதிர்விளைவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு காப்பியப் பொருண்மைக்கு எதிராகத் தோன்றியதன் விளைவு தமிழ்ச்சூழலில் பல புதிய காப்பியங்கள் உருவாவதற்கு அடித்தளமிட்டன.

இராமாயணத்துக்கு எதிராகத் தோன்றிய இராவண காவியம்; பாரதத்தில் ஒரு பாத்திரத்திற்கு எதிராகத் தோன்றிய பாஞ்சாலி சபதம்; சிலப்பதிகாரத்தின் எதிர் நிலையான கண்ணகிப் புரட்சிக் காப்பியம் ஆகியனவற்றை இதற்குச் சான்று காட்டலாம். அதுபோல மொழியிலும் இலக்கியத்திலும் சமயத்திற்கு மறுதலையாக அல்லது எதிரான கருத்துகள் கேள்விக் குள்ளாக்கப்பட்டுள்ளன. அத்துடன் அந்தந்தச் சமயக் கருத்துகளுக்கேற்ப இலக்கியம் படைக்கின்ற மரபும் உருவாகியது. தமிழ்க்காப்பிய வரலாற்றில் இத்தகையச் சமய ஊடாட்டங்களை மிகுதியாகவே பார்க்கமுடியும்.

தமிழ்க் காப்பிய வரலாற்றில் பஞ்சகாவிய மரபில் மறைந்துபோன ஒரு காப்பியமாகச் சுட்டப்பெறுவது அமிர்தமதி என்ற காப்பியம். இது குறித்து எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தம்முடைய தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம் என்ற நூலில் விரிவாக விளக்கியுள்ளார். அக்காப்பியத்தில் இடம்பெறக் கூடிய ஒரு நிகழ்வைச் சுட்டுவது இவ்விடத்துப் பொருத்தமாக அமையும். அவந்தி தேசத்து அரசனான யசோதரன் மனைவி அமிர்தமதி, உடல் ஊனமுற்ற யானைப்பாகனோடு அவளுக்கு கள்ள உறவு இருந்ததை அரசன் நேரில் பார்த்து விடுகிறான்.

இதனால் மனம் உடைந்துபோய் செய்வதொன்றும் தெரியாமல் மிகவும் மனக்குழப்பதுடன் காணப்பட்ட யசோதரனை அவனது தாய் சந்திரமதி மனச்சோர்வுக்கான காரணம் கேட்கிறாள். அதற்கு அவன் தான் ஒரு கனவு கண்டதாகச் சில நிகழ்ச்சிகளைக் கூறுகிறான். அவனுடைய தாய் சந்திரமதி கனவில் வருவதை நம்புதல் கூடாது அப்படியே தீய கனவு ஏதும் கண்டிருந்தால் அதற்குச் சில பரிகாரங்களைச் செய்யலாம் என்கிறாள். அதன்படி குலதேவதைக்கு உயிர்களை யாகத்தில் பலியிட வேண்டும் என்று அரசனுக்குக் கூறினாள்.

அதற்கு அரசன் மறுப்பு தெரிவித்த போது ஜைனர்களின் துர்ப் போதனையில்தான் அவன் இவ்வாறு கருதுகிறான் என்று நினைத்து சிவன், விஷ்ணு ஆகியோர்களை வணங்க வேண்டும் என்று அவள் உபதேசம் செய்கிறாள். யசோதரன் அந்தணர் சமயத்தை நிந்தித்து ஜைன சமயத்தின் தொன்மையையும் பெருமையையும் வற்புறுத்துகிறான். முடிவில் உயிர்ப்பலிக்குப் பதிலாக மாவினால் செய்யப்பட்ட கோழி ஒன்றைப் பலியிடலாம் என்று முடிவு செய்கின்றனர். இதையெல்லாம் நன்கு உணர்ந்துகொண்ட அமிர்தமதி, அரசன் தன்னைத் தண்டிப்பதற்கு முன்பாகத் தான் அவனைக் கொன்று விட வேண்டும் என்று முடிவு செய்து சந்திரமதியையும் யசோதரனையும் விருந்துக்கு அழைக்கிறாள்.

யசோதரன் மாவினால் ஆன கோழியைக் குலதெய்வதற்கு உயிர்ப்பலி கொடுத்த பிறகு தன் தாயோடு விருந்தில் கலந்து கொள்கிறான். உணவில் விஷம் கலந்திருந்ததால் விருந்துண்ட யசோதரன் மயங்கி விழுகிறான், அமிர்தமதி பாசத்தால் அழுவதுபோல அவன் மார்பில் விழுந்து அவன் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடுகிறாள். அமிர்தமதி தான் செய்த பாவச் செயலுக்காக ஐந்தாம் நரகத்தை அடைகிறாள். யசோதரனும் அவன் அன்னை

சந்திரமதியும் மாவினால் செய்த கோழியைப் பலியிட்டதற்காகப் பல்வேறு பிறப்புகள் எடுக்கின்றனர் என்பதாக கதை நீளுகிறது. இது வையாபுரிபிள்ளை தம்முடைய காவியகாலம் என்ற நூலில் (ப.332) பிற்சேர்க்கையாக அமைக்கப்பட்டுள்ள கதையின் சுருக்கமாகும்.

சமண சமயத்தைச் சார்ந்த இக்காப்பியத்தில் சமணசமயக் கருத்தாக்கங்கள் இழையோடியிருப்பதைக் காணலாம். உயிர்ப்பலி கூடாது என்பதும், அவ்வாறு செய்தால் பிறவிகள் தொடரும் என்பதும் சமணக் கொள்கை. உண்மையான கோழி அல்லாது மாவினால் செய்த கோழியைப் பலியிட்டதற்கே இத்தகைய தண்டனை என்றால் சமண சமயத்தின் கொள்கைக் கட்டுப்பாடு எந்த அளவிற்கு இறுக்கமானது என்பதை அறியலாம். இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களிலும் இவ்வாறான மாற்றங்களைக் காணமுடிகின்றன. உமறுப்புலவரின் (சீறாப்புராணம்) தசைக்கட்டியைப் பெண்ணுருவாக்கிய படலமும் சேகாதி நயினாருடைய (திருமணக் காட்சி) ஹீறுல் ஹீன்கள் சிறப்புப்படலமும் இசுலாமியத்தைத் தழுவுவதற்கு முன்புள்ள பெண்ணின் நிலையைச் சுட்டுவதாக அமைத்துக் கொண்ட சல்கா புறப்படு படலமும் (இறவு சுல் கூல் படைப்போர்) இசுலாமிய மரபுக்கேற்றபடி அமைத்துக் கொண்ட மாற்றங்களைச் சுட்டுகின்றன.

ஆனால், தமிழ்க்காப்பிய மரபிலிருந்து சிறிதும் மாறுபடா நிலையிலேயே இம்மாற்றம் நிகழ்ந்துள்ளது என்பது குறிப்பிடத் தகுந்தது. வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகத்தில் இடம் பெற்றுள்ள உருமாறிவந்த படலத்தில் பேசப்படுகின்ற மிதமிஞ்சிய கேசாதிபாத வர்ணனையை இதற்குச் சான்று காட்டலாம். ஆனால், இதை ஏற்றுக்கொள்ள விரும்பாத இசுலாமியக் கவிஞர்கள் இதில் ஒருவித சமரசத் தன்மையைப் புகுத்திவிடுகின்றனர். அதில் மு. அப்துல்கஹீம் குறிப்பிடும் கருத்து ஈண்டு நினையத்தக்கது.

பரஞ்சோதி முனிவர் உலாத்தலைவனை ஞானத் தலைவனாகவும்; உலாக்கண்டு உருகும் மகளிரை மெய்யன்பர்களாகவும் படைத்துக்காட்டுவர். வை.மு.கோ அவர்களும் இராமபிரானை எல்லா உயிர்களுக்கும் தலைவனாக்கி உலாவியற் படலப் பெண்களின் காதலையும் புலம்பலையும் இறைக் காதலாக்கிக் காட்டுவர். இங்ஙனம் வண்ணக்களஞ்சியப் புலவரின் உலாக் காட்சிப் புனைவையும் பெண்களின் புலம்பலையும் பொருள் கொண்டு விட்டால் இடர்ப்பாடு நீங்கிவிடும் (வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் ஆய்வுரை, ப.76).

இம்மேற்கோளில் சுட்டப்பெற்றுள்ள திருவிளையாடற் புராணமும், கம்பராமாயணமும் வடமொழி மரபைப் பிரதிபலிக்கும் பக்திக்காப்பியங்களாகும். உமறுப்புலவரைப் பாதித்த கம்பரும் திருத்தக்கத்தேவரும் இம்மரபில் வந்த தமிழ்க் கவிஞர்களாவர். உமறுப்புலவர் பின்பற்றிய இம்மரபையே உமறுப்பரம்பரையிடமும் காணமுடிகின்றன. அதற்காக இவற்றை இசுலாமிய நெறி பிறழ்ந்த இலக்கியங்கள் என்று சொல்ல முடியாது.மாறாகத் தான் எடுத்துக் கொண்ட இலக்கிய மரபிற்குட்பட்டு இசுலாமிய நெறிக்கேற்ற மாற்றத்தையே அவர்களால் செய்ய முடிந்தது.

குறிப்பாக, உமறுப்புலவர் கேசாதிபாத வருணனைக்காக அமைத்துக் கொண்ட தசைக்கட்டியைப் பெண்ணுருவாக்கியப் படலத்தைச் சான்று காட்டலாம். நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற அற்புத நிகழ்ச்சியை நினைவு கூறும் ஒரு பகுதியே இத்தசைக் கட்டியினால் ஆன பெண்ணுருவாகும். இப்படி இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் தத்தமது காப்பியங்களில் மேற்கொண்ட தமிழ்க்காப்பிய மரபு மற்றும் இசுலாமிய மரபுகளுக்குட்பட்ட நெறிமுறைகளே அவர்களை ஏனைய கவிஞர்களிடமிருந்து வேறுபடுத்தும் தனித்தன்மைகளாக அமைகின்றன.

வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகத்தில் அதன் நாயகர் ஆண்டகையால் தண்டிக்கப்பெற்ற இசுலாமிய மாந்தர்கள் வழியும் இதனை உறுதிப்படுத்தலாம். அபாபக்கரில் கம்மாமி மார்க்க நெறிமுறையில் பிழைசெய்ய, ஆண்டகையால் தண்டிக்கப் பெற்று அவர் திருந்த பின்னர் புகழ்ந்ததும் (படலம்-16) செருக்கி நின்ற செய்குதனா தண்டிக்கப்பட்டு திருந்திய பின்னர் இறை நேயத்துவம் பெற்று புகழ்ந்ததும் (படலம்-33) தொழுகைக்கு உடல் தூய்மை செய்யும் போது பெண்ணைக் கண்டு காமுற்றுக் குற்றம் இழைத்த செய்கு. தண்டனை நீங்கித் திருந்திய பின்னர் புகழ்ந்ததும் (படலம்-37) போன்ற நிகழ்வுகள் இசுலாமிய நெறி மீறியதன் விளைவாக ஏற்பட்ட துன்பங்களைச் சுட்டுவதாய் அமைவதைப் பார்க்கலாம். (வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை, ப.42)

இயற்கையைப் பாடுவதில் ஏனைய கவிஞர்களைக் காட்டிலும் இசுலாமியத் தமிழ்க்கவிஞர்கள் அலாதிப் பிரியம் கொண்டவர்களாக இருப்பதும் அவர்களுடைய சமயம் கலந்த இலக்கிய மரபுகளுள் ஒன்றாக இருந்துள்ளன. இயற்கையில் கற்பனையோ புனைந்துரையோ வருவதற்கு வாய்ப்பில்லாமல் போவதால்

இசுலாமியத் தமிழிலக்கியங்களில் இயற்கை வர்ணனை மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

உலகிலுள்ள கவிஞர் மற்றும் எழுத்தாளர்களுடைய எழுத்து வேட்கையை அடிப்படையாகக் கொண்டு தேசியக்கவி, இயற்கைக்கவி, சமூகக்கவி மற்றும் குழந்தைக்கவி என்றெல்லாம் வகைப்பாடு செய்யப்படுவதற்குக் கவிஞர்களுடைய நாட்டமே அடிப்படைக் காரணமாய் அமைகிறது. அதற்கு, கவிஞர்களுடைய சிந்தனை, இயக்கச்சார்பு, குறிக்கோள் போன்றவை முக்கியக் காரணங்களாக அமைகின்றன. அந்த வகையில் இசுலாமியக் கவிஞர்களை இயற்கைக்கவி எனச் சுட்டுதல் மிகவும் பொருத்தமுடையதாக இருக்கும். அது மட்டுமல்லாது அரபு நாட்டுக் கதையை; களத்தை தமிழ்ச் சூழலுக்கேற்றாற் போல பாடவேண்டும் என்பதாலும் இசுலாமியத் தமிழ்ப்புலவர்கள் இயற்கை ஈடுபாட்டை முக்கியக் களமாக அமைத்துக் கொண்டனர்.

வண்ணக் களஞ்சியப் புலவரின் இராஜநாயத்தில் இயற்கையைப் பற்றிய ஒரு பாடலில் சோலை ஒன்று வர்ணிக்கப்பட்டுள்ளது. அச்சோலையில் உள்ள மரங்களைப் பற்றிக் கூறும் செய்யுள் வருமாறு-

கதலி மாபலா வீந்தில் வனிச்சையார் கமுகு
முதிய சந்தனங் குங்குமஞ் செண்பக முருக்குப்
பதிய மல்லிகை மாதளை தேங்குதால் பாலை
ததிகொள் புன்னைகோங் காசினி தேக்குமஞ்சாடி
மகிழ்விளாமரு தருணம்வெண் சீவந்தி வன்னி
யகில்க ருங்கனி வெங்கனி நெல்லியா லத்தி
விகசி தந்தரு பாடலங் கொன்றைவெட் பாலை
புகல சோகினம் பலதரு வினமலர்ப் பொழிலே

(எறும்புகள் விருந்திட்ட படலம்:4,5)

மேற்சுட்டிய இச்செய்யுளில் தமிழகத்தில் இன்றைக்குக் காணப்பெறும் எல்லா வகையான மரங்களும் குறிக்கப் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். இத்தாவர இனங்கள் பற்றிய வர்ணனையில் யாதொரு கற்பனையும் இடம்பெறவில்லை. இசுலாமியப் புலவர்களின் இயற்கை வர்ணிப்புக்கு யாதொரு கட்டுப்பாடும் இல்லாமையே இதற்கு முக்கியக் காரணமாகும். ஆகவேதான் வண்ணக்களஞ்சியப் புலவர் பெண்கள் பற்றிய வர்ணனையில் மேற்கொண்ட மிகுதியான காமம் கலந்த கற்பனைச் சுவை போன்ற தன்மைகளை இங்குப் பார்க்க முடியவில்லை.

இம்மரபை ஏனைய இசுலாமியத் தமிழ் காப்பியங்களிலும் காணமுடியும்.

கவிதைக்கு ஓசை மிகவும் முக்கியம் என்பதைத் தமிழ்க் கவிதைமரபின் ஊடாக உணர முடியும். கம்பர் கூறும் செவிநுகர்கனிகள் என்பதும் பாரதியார் கூறும் ஓசை தரும் இன்பம் உவமையில்லா இன்பம் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. தமிழ் மரபில் இன எழுத்துக்களை அதனதன் ஓசைக்கேற்ப பயன்படுத்தியுள்ள முறையைப் பண்டையக் காலம் தொட்டே பார்க்கலாம். வன்மையாகச் சொல்வதற்கு வல்லின எழுத்துக்களையும் மென்மையைப்பற்றி உரைக்கும் இடங்களில் மெல்லின எழுத்துக்களையும் அந்தந்தப் பொருண்மைக் கேற்றவாறு பயன்படுத்துகின்ற முறை உள்ளது. கம்பராமாயணத்தில் சூர்ப்பனகையின் வருகையைக் குறிப்பிடும் பாடல்

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி பெயர்ப்பாள்
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமெனமின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்
(சூர்ப்பனகைப் படலம், 255)

அது போலவே தமிழ்க் கவிதை மரபில் ஓசையைக் கையாளும் போது அங்குத் தமிழ் மொழி மரபு கவனம் பெறுவதை உமறுப்புலவருடைய இறைவணக்கப் பாடல் ஒன்றின் வழியே அறியலாம்.

திருவுருவா யுணருருவா யறிவினொடு
தெளிவிடத்துஞ் சிந்தி யாத
அருவுருவா யுருவுருவா யகம்புறமுறந்
தன்னியலாவடங்கா வின்பத்
தொருவுருவாயின்மையினிலுண்மையினைத்
தோற்று விக்கு மொளியா யாவு
மருவு ருவாய் வளர்காவின் முதலவனைப்
பணிந்துள்ளி வாழ்த்து வாமே

இப்பாடல் படிப்போருடைய உள்ளத்தில் இறைவுணர்வை ஏற்படுத்தும் விதத்தில் ஒருவித ஓசையொழுங்கில் அமைக்கப் பட்டதாகும். இவ்விடத்தில் கவனிக்கப்படவேண்டியது என்னவெனில் இடையின எழுத்தாகிய "ர" கரம் மிகுதியான இடங்களில் பயின்று வந்திருப்பது கவனிக்கத்தக்கது. "ரகரம்"

இறைவனின் அருளைப் பெற பாடுவதற்குரிய ஒலியாகக் கருதப்படுகிறது. மேலும் அரபு மொழிகளிலுள்ள ஒலிகளைத் தமிழுக்குப் பெயர்க்கும் போது அங்கு இடையின ஒலியாக "ர" கரம் பயன்படுத்தப் படுவதில்லை. அதற்குப் பதிலாக வல்லின "ற" கரமே அரபு மொழிக்கு ஏற்ற ஒலியாகக் கருதப்படுகிறது.

சீறாப்புராணத்திலுள்ள 'சீறத்' என்ற சொல்லே "சீறா" என்றாகியது என்பது இவ்விடத்தில் சுட்டத்தக்கது. அது போலவே அறபு, றலி, றாவுத்தர், றஃபீல் என்று எழுதுகின்ற மரபும் இசுலாமியர்களிடையே காணப்பெறுகின்ற எழுத்து மரபாக உள்ளது. இச்சூழலில் உமறுப்புலவர் இடையின ஒலியாகிய ரகரத்தைப் பயன்படுத்திப் பாடல் புனைந்திருப்பது அவரது தமிழ் மரபுப் பேணலின் அடையாளமாகவே புரிந்துகொள்ளலாம்.

அது போன்றே மென்மையைப் பற்றிக் கூறுமிடத்து. மெல்லினத்தையும் வன்மையைப்பற்றிக் கூறுமிடத்து வல்லினத்தையும் பயன்படுத்தியிருக்கின்ற தன்மையையும் உமறுப்புலவரிடம் காணலாம். அவ்வகையில், கொடுங்கோலர்களின் கொலை வெறியைக் குறிக்கும் ஒருபாடல்.

உறுக்கினார் செழுங்கர முரத்தொ டொன்றவே
யிறுக்கினா ரடிக்கடி யெடுத்த தீவினை
முறுக்கினா ரல்லது மூட்டுந் தண்டனை
குறுக்கினா ரிலைக் கொடுமை யாளரே

கதீஜா நாயகியின் துயரத்தைக் காட்டும் பாடலொன்று

பஞ்சனை பொருள்தா ரிருவிழி துயிலார்
பழத்தொடு பாலமு தருந்தார்
கொஞ்சுமென் குதலைக் கிளியொடு மொழியார்
கொழுமடற் செவிக்கிசை கொள்ளார்

என வரும் பாடலில் மெல்லின (ஞ) எழுத்தைப் பயன்படுத்தியிருப்பது நினையத்தக்கது. இம்மரபை பின்வந்த இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களிலும் காணலாம். சேகுனாப் புலவருடைய புதுகுஷ்ஷாம் என்ற காப்பியத்தில் வல்லின எழுத்துக்களையும் மெல்லின எழுத்துக்களையும் அடிப்படையாக வைத்துப் பாடப்பெற்ற பாடல்களில் ஒரு சில

கடுகிக்கடு கடுப்பாற்சிலர் கனலிற்கொதி கொதிப்பார்
நடுகிப்பட படுப்பார்சிலர் நகையிற்கனை கனைப்பார்

கிடுகிற்புடை புடைப்பார் சிலர் கிளரத்திடு திடுப்பார்
முடுகிக்கறு கறுப்பார்சிலர் முனையிற்றுடி துடிப்பார்
(மகான் வதைப் படலம்:47)

வஞ்சகர் நெஞ்சு வகிர்ந்து பிளந்துச்
செஞ்சுடர் மிஞ்சிய செம்புனல் சிந்துங்
கஞ்ச மருங்கர மைந்துளர் கண்டந்
தஞ்ச முவந்தவர் வண்புகழ் தந்தார்
(கலபு அரண முந்திய படலம்;164)

இசுலாமியத் தமிழ்க் கவிஞர்களிடையேயான இத்தகைய தமிழ் மரபும் இசுலாமிய நெறி மரபும் பிறழாத கவித்துவத்தின் ஆழத்தை, கவிதையின் ஓசை, எழுத்து ஆகியவற்றிலும் கூட காணமுடிகின்றன. என்பதைத் தான் மேற்கண்ட பாடல்கள் சுட்டுகின்றன. தமிழ்க் கவிஞர்களிடம் கூட காணமுடியாத இச்சமநோக்குப் பார்வை தமிழ் மொழியின் மீது அவர்கள் கொண்டிருந்த அளவிடற்கரிய மதிப்பைக் காட்டுவதாக அமையும்.

சிற்றிலக்கிய மரபுகள்

இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் மிகுதியான எண்ணிக்கையைக் கொண்டு முதன் முதலில் தோன்றிய இலக்கிய வகையாகக் கருதப் பெறுவது சிற்றிலக்கியமாகும். அதன்படி, அவ்விலக்கியத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்கள் இருப்பதாக அறிஞர் பெருமக்கள் சுட்டும் கருத்து இவ்விடத்துக் குறிக்கத்தக்கது. இப்பின்புலத்தில் இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சிற்றிலக்கியத்தின் தொடக்க காலமாகக் கருதுவர். இதனடிப்படையில் முதன்முதலில் தோன்றிய இலக்கியமாகப் பல்சந்தமாலையைக் குறிப்பிடுவர்.

தமிழ்ச் சிற்றிலக்கிய மரபில் கூறப்படும் 96 வகை சிற்றிலக்கியங்களுள் சில குறிப்பிட்ட வகைகளில் மட்டுமே இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள், அதிகமாகக் காணப்பெறும் வகை "மாலை" இலக்கிய வகையாகும். இவற்றில் இசுலாமிய நெறிகள் மிகுதியும் பொருந்தி வருவதாதலால் அதில் மிகுதியான நூல்கள் தோன்றியுள்ளன. அது போலவே "உலா" மரபு இசுலாமிய நெறிக்கு முரணாக இருப்பதால் அதில் அதிக நூல்கள் தோன்றவில்லை என்பதும் கருதத்தக்கது.

இசுலாமியத் தமிழ்ச்சிற்றிலக்கியங்கள் அனைத்தும் அரபு, பாரசீக மொழிகள் கலந்த தமிழ் யாப்பமைதியைப் பெற்றும், அதன் பாடுபொருள் பெரும்பாலும் அரபு நாட்டு இசுலாமிய வரலாற்றையும் பின்புலத்தையும் அடிப்படையாகக் கொண்டிருப்பதாலும் அவ்விலக்கியங்களில் சில மரபுகள் பின்பற்றப்படுகின்றன. ஆகவே தான் அதன் எண்ணிக்கையில் கூட, குறைவு உள்ளன. இசுலாமித் தமிழ்ச் சிற்றிலக்கிய உள்ளடக்சத்தைப் பத்துப்பிரிவுகளில் வெளிப்படுத்தியுள்ள பீ.மு.அஜ்மல்கான் அவர்களுடைய பகுப்பில் சமயம் சார்ந்த கருத்துக்கள் விஞ்சி நிற்பதும் ஈண்டு நினையத்தக்கது. (இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், ப.15-20)

இசுலாமியச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான "சதக" வகையில் மொத்தம் 23 சதகங்கள் காணப்படுவதாக பீ.மு.அஜ்மல்கான் குறிப்பிடுவார். அவரது கருத்துப்படி 23 சதக இலக்கியங்களில் இசுலாமியமே பாடுபொருளாகி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இசுலாமியத் தமிழ் இலக்கியங்களுள் அதிகமான அளவில் சதகங்களை இயற்றிவர் மச்சரேகை சித்தனாவார். அவருடைய பேரின்பச் சதகத்தில் காணப்படும் ஒரு பாடல்

ஆட்சியே லாயி லாஹா இல்லல்லா -ஹீ வென்றால்
சாட்சியே முஹம்ம துர்ர சூலுல்லாஹ் தானே தன்னில்
காட்சியே கலிமா வுண்மைக் காரணம் வேறில்லாத
மீட்சிமெய் யறிவே தூது வியாபக விளக்கந்தானே.

இப்பாடலில் இசுலாத்தின் அடிப்படை மார்க்கத் தத்துவமான "கலிமா" விளக்கப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். அது போலவே கிதுறு முகம்மது மரைக்காயரின் குதுபு சதகத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும்,

ஸல்லல்லாஹீ அலா முஹம்மது
ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லமே

என்று அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. செவத்த மரைக்காயர் இயற்றிய திருபகுதாதூக் கலம்பகத்தில் 'ஆசிர்வதித்து இறைஞ்சுதல்' என்னும் பொருளைக் குறிக்கக் கூடிய 'துஆ' என்னும் அரபுச் சொல் 61 அடிகளில் பயின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (இசுலாமியத் தமிழ்ச்சிற்றிலக்கியங்கள்,ப.80). இப்படி எல்லாக் கலம்பகங்களும் ஒரு குறிப்பிட்ட பாடுபொருளை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காண முடியும். அதே சமயம், அவை தமிழ்ச் சிற்றிலக்கிய மரபிலிருந்து விலகாதத் தன்மையைக் கொண்டிருப்பதையும் காணலாம். சான்றாகத் தமிழிலக்கிய மரபுகளான அகப்பொருள் மரபும் புறப்பொருள் மரபும் இக்கலம்பகங்களில் முக்கிய இடம் பெறுகின்றன.

தலைவனைப் பிரிந்து வாழும் தலைவி பிரிவாற்றாமையால் இரங்கும் நிலையினைக் குவாலீர் கலம்பகத்தில் காணலாம்.

சுழலும் வளை பலபோய்க் கண்ணுறக்க மின்று ,
குழலும் குலைத்தெனக்குக் கற்றாய் வந்திராக் காலம்
குழலும் குலைத்தெனக்குக் கற்றா மாயின்
நிழலு மறந்திருந்தார் நெஞ்சையென் செய்தீராக் காலம்
(குவாலீர்க் கல...

என்ற பாடல் தலைவி தன் நெஞ்சோடு இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. அதே போன்று மக்காக் கலம்பகத்தில் மாலைப் பொழுதினைக் கண்டு இரங்குவது போலவும் (பா.74) திருமதீனக் கலம்பகத்தில் பறவையை நோக்கி இரங்கிக் கூறுவது போலவும் (பா.22) அமைந்துள்ள பாடல்கள் தமிழ் அகப்பொருள் மரபையும் புறப்பொருள் மரபையும் நினைவு கூறுவதாக உள்ளன. அக,புற மரபுகளில் அமைந்துள்ள இக்கலம்பகப் பாடல்கள் முழுவதும் ஆசிரியர் கூற்றாகவும் தலைவிக் கூற்றாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், பாட்டுடைத் தலைவன் கூற்றாக எந்தப் பாடலும் அமையவில்லை. ஏனெனில், பாட்டுடைத் தலைவர்களாக அமையும் நாயகம் மற்றும் வாலிமார்களுடைய கூற்றுகளில் பாடல் அமையுமேயானால் அதில் ஏதேனும் இழுக்கு நேரவாய்ப்புண்டு என்று கருதியே இம்முறை கைவிடப்பட்டுள்ளது.

அது போலவே கலம்பக உறுப்புகள் பற்றிய எண்ணிக்கையிலும் இசுலாமியப் புலவர்கள் சில மாற்றங்களை மேற்கொண்டுள்ளனர். கலம்பகத்தில் பதினெட்டு உறுப்புகள் வரவேண்டும் என்ற நிலையில் இசுலாமியக் கலம்பகங்களில் ஓர் ஒழுங்கமைவைக் காணமுடியவில்லை. பதினெட்டு உறுப்புகளுக்குக் குறைந்தும் அவ்வுறுப்புகளில் இடம்பெறாத வேறுசில உறுப்புகள் வருவதையும் பீ.மு.அஜ்மல்கான் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது (இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், ப.87). இவ்வெண்ணிக்கை மாற்றங்களை இசுலாமிய நெறிமுறைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளப்பெற்ற மாற்றங்களாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வகையில் இசுலாமியக் கொள்கைகளுக்கு முரண் என்று கருதப்படும். கள்ளுண்டுகளிக்கும் "களி" என்ற உறுப்பும் பிச்சியார், கொற்றியார், வலைச்சியார் போன்ற உறுப்புகளும் இக்கலம்பகங்களில் இடம் பெறுவதில்லை.

இதே போல குவாலீர் கலம்பகத்தில் 'மடல் விலக்கு' என்ற புதிய உறுப்பு பயன்படுத்தியிருப்பதும் சிந்திக்கத்தக்கது. ஏனெனில், இவ்வுறுப்பு இசுலாமிய நெறிமுறைக்கு உகந்த ஒன்றாகக் கருதப்பெறுவதால் அவ்விலக்கிய மரபு பின்பற்றப்பட்டது. அதாவது இம்மரபு சங்க இலக்கியத்தில் அமைந்துள்ள 'மடல்ஏறுதல்' என்ற துறைக்கு எதிரான ஒன்றாகக் குறிக்கப்படுகிறது. இசுலாமிய இலக்கியத்தில் சங்கஇலக்கியத் தாக்கத்தைக் காணநேர்ந்த போதும் தங்களது சமயக் கொள்கைக்குப் பொருந்தி வராதனவற்றைத் தவிர்த்துமுள்ளனர்.

தன் காதல் கை கூடாத போது தலைவன் தான் காதலித்த பெண்ணின் உருவைக் கிழியில் எழுதி பனங்கருக்கால் ஆன மடல் மீது (குதிரை) வலம் வருவதே மடலேறுதல். இவ்வழக்கம் இசுலாமியத்திற்கு முரணாக இருப்பதால் 'மடலேறுதல்' என்பதற்குப் பதிலாக 'மடல் விலக்கு' என்ற புதிய உறுப்பு அமைத்துக் கொள்ளப்பட்டதுண்டு. 'மடல் விலக்கு' பற்றிய கருத்தை விளக்கும் பாடல் ஒன்று.

குணமா நயத்தர் குவாலீர் வரைமிசைக் கூடுமல்குற்
பணமா மகிழ்மடல் வாஞ்சித்த நீவிர் பனைமடலில்
எணமா யிவர்தற் கவளாங் கிழியை யெழுது விரேன்
மணமா முலைப் புடைப் பாருங்கொல்லோ
சொல்வீர் மன்னவரே
(குவாலீர்க் கலம்பகம்:36)

தேவர்க்கும் முனிவர்க்கும் காவல் அரசர்க்கும்
நூறு தொண்ணூற்றைந்து தொண்ணூறே
ஒப்பில் எழுபது அமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளாளர்க் கென விளம்பினர் செய்யுள்
(பன்னிரு பாட்டியல்:46)

என்ற செய்யுள் யார் யாருக்கு எத்தனை எண்ணிக்கையில் கலம்பகச் செய்யுள் இயற்றல் வேண்டும் என்ற ஒரு வரையறையைப் பற்றிக் கூறும் நூற்பாவாகும். மேற்சுட்டிய இந்நூற்பா விதிப்படி தேவர்களைக் குறித்துப் பாடும் இடங்களில் மட்டுமே நூறு செய்யுட்கள் வரவேண்டும் என்று கட்டளையிடுவதாக உள்ளது. ஆனால், இசுலாமியக் கலம்பகங்கள் எல்லாம் பெரும்பாலும் நூறு செய்யுட்களில் அமைந்திருப்பது இவண் குறிப்பிடத்தக்கது. சான்றாக, மக்காக் கலம்பகம் - 100, திருமதினா கலம்பகம்- 100, குவாலீர்க் கலம்பகம்-100, திருக்கோட்டாற்றுக் கலம்பகம்-100, திருப்பகுதாதுத் கலம்பகம்-100 ஆகிய கலம்பகங்களின் பாடல்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடலாம்.

இறைத்தூதர் நபிகள் நாயகம் அவர்களின் மேன்மை கருதியே எண்ணிக்கையில் நூறு செய்யுட்களைப் பாடியுள்ளதாகக் குறிப்பிடுவர். தமிழ்ச் சமூக அமைப்பின் ஏற்றத்தாழ்வுகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ள இவ்வரையறையை மறுதலிக்கும் முகமாகவே இசுலாமியக் கலம்பக வரையறை அமைந்திருப்பது இசுலாமியத்தின் தனிச்சிறப்பாகக் கருதலாம்.

தமிழ்ச்சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான கோவையிலும் இசுலாமியத் தமிழ்ப்புலவர்கள் மேற்கொண்ட சில மரபு மாற்றங்களைக் காண முடியும். பொதுவாகக் கோவை இலக்கியங்களைக் காதல் இலக்கியங்கள் என்று சொல்லத்தக்க அளவில் அவற்றில் அகப்பொருட் சுவை விஞ்சிநிற்கும். சங்க இலக்கியத்தில் இடம்பெற்ற தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி, செவிலி முதலான பாத்திரப் படைப்புகளும் கோவை இலக்கியத்துள் இடம்பெறும். ஆனால், சங்க இலக்கியத்தில் இடம்பெறும் அகப்பொருட் சுவையிலிருந்து கோவை இலக்கிய அகத்துறைப் பாடல்கள் வேறுபட்டு அமைவதைப் பார்க்கலாம். அதாவது கோவை இலக்கிய அகத்துறைப் பாடல்கள் பக்திச் சுவையை வெளிக் கொணரும் பாங்கில் அமைந்திருப்பது அதன் சிறப்பாகும்.

அகப்பொருட் சுவைகளை மையமாகக் கொண்ட கோவை வகையில் இஸ்லாமிய நெறிக்குட்பட்டுக் கோவை பாடுவது என்பது இசுலாமியப் புலவர்களுக்கு மிகக்கடுமையான ஒரு முயற்சியாக இருந்துள்ளது. ஏறக்குறைய தமிழ் மரபையொட்டியே இசுலாமியக் கோவை இலக்கியங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் தங்களுடைய சமய நெறிமுறைகட்கேற்பச் சிற்சில மாற்றங்களைச் செய்துள்ளனர். குறிப்பாக, இசுலாமிய அகப்பொருட் கோவை நூல்கள் தலைவன், தலைவியரைப் பாடுபொருளாக அமைத்துக் கொள்ளுகின்ற முறையில் ஏனைய தமிழ்க்கோவை நூல்களிலிருந்து வேறுபடுவதைப் பார்க்கலாம். அதாவது, தமிழ்க் கோவை நூல்களில் காணப்படுவதைப் போன்ற தலைவன், தலைவியரைக் கடவுளராக அமைத்துக்கொள்ளும் மரபை இசுலாமியத் தமிழ்க்கோவை நூல்கள் கொண்டிருக்கவில்லை.

மாறாக, இசுலாமியக் கோவை நூல்களுள் அந்தந்தப் பாடற்றுறைகளுக் கேற்ப நிலமும் கோவைப் பொருளுக்கேற்பத் தலைவன் தலைவியும் பொதுமைப்படக் கூறப்படுகின்ற தன்மையைப் பார்க்கமுடியும். இது தவிர கோவை நூல்கள் யாருக்காகப் பாடப்படுகிறதோ அவர்களுடைய பெருமையை விளக்கும் வண்ணம் அமைந்திருப்பதையும் பார்க்கலாம். தலைவன் தலைவியரின் இத்தகு அமைப்பு முறையே இசுலாமியத் தமிழ்க் கோவை நூல்களுக்குரிய மரபாகவும் சிறப்பாகவும் அமைகின்றன. இசுலாமியப் புலவர்கள் தாம் படைக்கும் தலைவன் தலைவியரைத் தாம் சார்ந்த மார்க்க நெறிமுறைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ளும் தன்மையிலேயே இசுலாமியக் கோவை நூல்கள் தமிழ்க் கோவை நூல்களிலிருந்து வேறுபடுகின்றன.

இசுலாமிய வரவால் தமிழில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களுள், வரவுகளுள் அதன்கண் தோன்றிய புத்திலக்கிய வடிவங்களையும் கருதுதல் வேண்டும். அதாவது அரபு நாட்டு மரபைத் தமிழ் மரபிற்கேற்ப அமைத்துக்கொள்ளும் முயற்சிகளில் தமிழில் பல புத்திலக்கிய வடிவங்கள் தோன்றின. அதன்படி தமிழில் தோன்றிய முனாஜாத்து (இறைவணக்கம்), மசஅலா (வினாவிடை), கிஸ்ஸா (கதைசொல்லுதல்), நாமா (சரிதை), படைப்போர், நொண்டி, நாடகம், திருமண வாழ்த்து மற்றும் அரபுத் தமிழ் ஆகிய எட்டு வகையான வடிவங்களைச் சுட்டுவர். (பின்னிணைப்பு)

இசுலாமிய மார்க்க நெறிமுறைக்குட்பட்டுப் படைக்கப்பட்ட இவ்வடிவங்களுள் முதலில் சுட்டிய நான்கும் அராபிய, பாரசீக மொழிகளில் இருந்து தமிழுக்கு வந்த வடிவங்களாகவும் எஞ்சியுள்ள நான்கும் தமிழ் மரபிற்கேற்ப இசுலாமியத் தமிழ்ப்புலவர்களால் தோற்றுவித்துக் கொள்ளப்பட்ட வடிவங்களாகவும் வகைப்படுத்துவர். வடிவங்கள் வேறுவேறாக இருந்தாலும் அவை வலியுறுத்தக்கூடிய கருத்தும் நோக்கமும் ஒரு பொருளை நோக்கியதாக இருப்பது இவண் குறிப்பிடத்தக்கது. அவ்வாறே மார்க்க நெறிகட்குட்பட்டு அமையும் இவ்வடிவங்களில் இசுலாமியக் காப்பியங்களில் மேற்கொள்ளப்பட்ட இசுலாமியம், தமிழ் ஆகிய இரு மரபுகளையும் காணலாம். இவற்றைச் சில எடுத்துகாட்டுகள் வழியே விளக்க முடியும்.

மசஅலா

மசஅலா என்னும் அரபுச் சொல்லுக்குத் தமிழில் வினா என்று பொருளாகும். இச்சொல் ஜூஆல் (கேள்வி) என்ற வேர்ச்சொல்லிருந்து தோன்றியதாகும். நபி (சல்) அவர்கள் காலத்தும் அதற்குப் பிறகும் உள்ள இசுலாமிய மார்க்கத்தில் ஏற்படும் ஐயங்களுக்கு விடை கூறும் முகமாகவே இவ்விலக்கியம் அமைகிறது. முகமது நபி (சல்) அவர்களுக்கு வானவர் ஜிப்றாயில் மூலமாகப் போதிக்கப்பட்ட போதனைகளாகிய அல்குர்ஆனும் நாயகம் தம்முடைய வாழ்நாளில் மேற்கொண்ட நெறிமுறைகள், சாதனைகளாகிய அல்ஹதீதுமே இவ்வினா வகைக்கு அடிப்படையாக அமைகிறது. பிற சமய, இனங்களில் இல்லாத மசலா என்னும் இவ்வடிவம் இசுலாமிய மார்க்கக் கருத்துக்களை மக்களிடையே பரப்பல் வேண்டும் என்ற நோக்கத்திலேயே தோற்றம் கொண்டது.

ஆகவே, இவ்வகையில் கற்பனை இடம் பெறுவதில்லை. மஸ்லாவில் ஆயிரம் மசலா, நூறு மசலா, வெள்ளாட்டி மசலா

ஆகியன குறிப்பிடத் தகுந்த வகைகளாகும். வண்ணப்பரிமளப் புலவரால் கி.பி.1572 இல் இயற்றப்பட்ட நூலே ஆயிரம் மசலாவாகும். இசுலாமிய மரபைச் சாராத அப்துல்லா இப்னுசலாம் என்பாருடைய ஆயிரம் வினாக்களுக்கு நபிகள் நாயகம் அளித்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே ஆயிரம் மசலாவாகும். மசலாவில் கூறப்படும் நிகழ்வுகள் அரபுநாட்டுச் சூழலை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும். அதில் கூறப்படும் விளக்கங்கள், மொழி மரபுகள் தமிழ்ச் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

குறிப்பாக, மசலாவின் இவ்வமைப்புமுறை தமிழக நாட்டுப்புற வடிவங்களுள் ஒன்றான விடுகதையின் சாயலைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக விண்ணிலிருந்து விழுவதும் இல்லை மண்ணிலிருந்து ஓடுவதும் இல்லை. ஆனால் விண்ணுக்கும் மண்ணுக்குமிடையே அந்தரத்தில் ஓர் ஆறு ஓடுகிறது அது என்ன? என்ற கருத்தை உள்ளடக்கிய ஒரு வினா.

மண் தரைக்குள் ஏறாது வானிருந்து ஓடாது அங்கு
அந்தரத்தில் ஓராறுண்டது எமக்குக் கூறுமென
சுந்தரத்தோள் இபுனு சலாம் சுருதி வழியே கேட்க

அதற்கு நாயகம் கடுமையாக உழைக்கும் உழைப்பாளி மக்களின் உடலில் ஓடும் வியர்வை நீரே விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையில் அந்தரத்தில் ஓடும் ஆறு (தமிழ் இசுலாமிய இலக்கிய வடிவங்கள். ப.33) எனப் பகர்ந்துள்ள விடையில் தமிழ் நாட்டுப்புறச் சூழலின் சாயல் பிரதிபலிப்பதைக் காணலாம். அது போலவே நூறு மசுலாவில் இடம்பெற்றுள்ள ஒரு வினா. இவ்வினா மெஹறர்பான் என்பவள் அப்பாசு என்பவனை நோக்கி ஒரு மரத்தில் பன்னிரண்டு கிளைகளும் கிளைதோறும் முப்பது இலைகளும் இலைகள் பாதிக் கருப்பும் பாதி வெளுப்புமாக உள்ளன.

ஒவ்வொரு கிளையிலும் ஐந்தைந்து பூக்கள் இருப்பதாகவும் இதன் நுட்பக் கருத்தை விளக்கிக் கூறும் படியும் கேட்கிறாள். 1087 கண்ணிகளையுடைய இந்நூலின் கதாநாயகியே மெஹறர்பான். இவள் பகுவீறு நாட்டு மன்னனின் மகள். அது போலவே அஹமது ஷா என்னும் அந்துமான் நாட்டு மன்னனின் மகனே அப்பாசு என்பவன். இளவரசி மெஹறர்பான் அப்பாஸை நோக்கிக் கேட்கப்பட்ட நூறு கேள்விகளே நூறு மசலாவாகும். இந்நூலின் முதற்பதிப்பு 1876இல் முகம்மது சாஹிப் என்பரால் வெளியிடப்பட்டது.

தொல் புவியில் மரமொன்றுண்டு
அதைச்சூழ்ந்த கொப்பு பன்னீரதில்
நல்லவிலை முப்பதுண்டு அதில் நற்கறுப்பு
பாதிவெள்ளை
சொல்லுகின்ற பூவைந்துண்டாம்
இதைச் சொல்லாவிட்டால் கொல்வேன் என்றாள்.

இதற்கு மறுமொழியான விடை,

சொல்லுகின்ற வருஷமொன்றே அதைச்
சூழ்ந்த கொப்பு பன்னீருமாதம்
கொல்லுமிலை முப்பது நாள் அதைச்
சூழ்ந்த கறுப்போடு வெள்ளை
நல்லிரவு பகலுமது நீதான்
நாடிச் சொன்ன பூவைந்துகேள்
தானவை ஐந்தாம் எனமொழிந்தான்.

மேற்சுட்டிய இவ்வினாச் செய்யுளின் விளக்கம்; மரம்-ஓராண்டு, பன்னிரு கிளைகள்-பன்னிரு மாதங்கள், முப்பது இலைகள்-முப்பது நாட்கள், பாதி கறுப்பு; பாதி வெள்ளை; இரவுபகல், ஐந்து பூக்கள்; ஐவேளை தொழுகை என்பதாக அமைந்துள்ளன (தமிழில் இசுலாமிய இலக்கிய வடிவங்கள், ப.33-52).

இசுலாத்தின் ஐந்து முக்கியக் கடமைகளுள் ஒன்றான தொழுகையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காகவே இப்புதிர் வினாவின் ஏனைய பகுதிகள் அமைந்துள்ளன. அதாவது, இப்பாடலில் கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகள் ஒவ்வொன்றும் மிகப் பொருத்தமாக அமைய ஒன்று மட்டும் வேறுபட்டு அமைவதைப் பார்க்க முடிகிறது. ஒரு மரத்தில் பூக்கும் மலர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நிலையில் அதில் ஐந்து பூக்கள் மட்டுமே பூத்தன என்று சுட்டியிருப்பது சிந்திக்கத்தக்கதாகிறது. இசுலாமிய நெறியாகிய ஐவேளை தொழுகையின் குறியீடவே இவ்வைந்து மலர்களையும் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இசுலாமிய நெறியாகிய இவ்வைந்து வேளை தொழுகை தமிழ் மரபினின்று மாறுபடாத் தன்மையிலேயே கடைப்பிடிக்கப் பட்டுள்ளது என்பதைக் குலாம்கதிறுநாவலர் அவர்களுடைய கருத்து வழியே தெளிவுபடுத்தலாம். பிச்சை இபுறாகீம் அவர்களுடைய திருமதீனத்தந்தாதி நூலில் உள்ள 'புரியவன் மலரைம்

பொழுதுன்றேன் பொழிவு மதீனம் ' (90) என்ற பாடலடிக்கு உரை எழுதிய குலாம் கதிறு நாவலர் அதனை நம்பியகப்பொருளின் ஐம்பொழுதாகிய சிறு பொழுதுகளோடு தொடர்பு படுத்தியிருப்பமை (சுப்ஹு - வைகறை; லுஹர் - காலை; அஸர் - உச்சி; மஃறிப் - மாலை; இஷா - யாமம்) குறிப்பிடத்தக்கது (இசுலாமிய இலக்கியத்தின் திருச்சித் திருப்பம், ப.16).

வினாவின் அமைப்பைப் பார்த்த மாத்திரத்திலேயே அதில் வெவ்வேறு விடைகளைப் பொருத்திப் பார்க்கும் தன்மை தோன்றுவது தமிழ் விடுகதை அமைப்பின் தனித்தன்மையாகும். கேட்போரைச் சிந்திக்க வைக்கும் ஆற்றல் கொண்ட இவ்வமைப்பு முறையைத் தமிழில் மிகுதியாகக் காணலாம். குறிப்பாக, தமிழ் விடுகதை அமைப்பின் மிக பழமையான விடுகதைகளில் ஒருசிலவற்றைச் சுட்டலாம்.

எருக்கிளை பழுப்பதேன்
எருமைக் கன்று சாவதேன் (பாலில்லாமையால்)

உளுத்தம் பருப்பு உப்புவதேன்
குழந்தை முழங்கால் தேய்வதேன் (ஊருவதால்)

இது தவிர அடியளவில் மிகநீண்ட விடுகதைகளும் தமிழில் உண்டு.

பார்த்தமுகம் பல்காட்டும் கண்ணாடியல்ல பசங்களிடஞ் சேட்
டை செய்யும் வேசியல்ல, கூத்தாடி பணம் பறிக்கும் தாசியல்ல குந்தீச
ற்று நிற்காது நாயுமல்ல போற்றுகின்ற கொடியாகும் புனலும
ல்ல போர்புரிந்து ஜயமடையும் விஜயனல்ல சாற்றுகின்ற விக்கதை
யின் பயனைச் சொன்னால் சரணமென்றே அவரடியைச் சாரலாமே. (குரங்கு)

மேற்சுட்டிய இவ்விரு விடுகதைகளில் இடம்பெற்றுள்ள வினாப்பகுதி ஒவ்வொன்றும் சிந்திக்க வைக்கின்ற வகையிலும் விடைக்குப் பொருந்துகின்ற வகையிலும் இருப்பதைக் காணலாம். கவித்துவம் மிக்க இவ்விடுகதை அமைப்பில் பயின்றுள்ள சொற்கள் பாமரர் பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. தமிழக நாட்டுப்புற மக்களிடத்துக் காணப்படும் இவ்வமைப்பிற்கும் மசலா என்ற அமைப்பிற்கும் மிகுந்த பொருத்தப்பாடு இருப்பது

சிந்தித்தற்குரியது. இசுலாமியர் தங்களுடைய மார்க்கக் கருத்துக்களைச் சொல்லுவதற்கு அந்தந்த மொழியையும் பண்பாட்டையுமே ஆயுதமாகக் கொண்டிருத்தல் தெள்ளிதின் விளங்கும்.

படைப்போர்

தமிழுக்கென்றே உருவாக்கிக் கொள்ளப்பட்ட வடிவங்களுள் படைப்போர் இலக்கிய வகை முக்கிய இடம்பெறுகிறது. படை, போர் என்ற இரண்டு சொற்களின் இணைவே படைப்போர். அரபு மொழியில் முகமது இப்னு உமருல் வாக்கிதி என்பவருடைய "கிதாபுல் மகாசி" என்ற நூலை அடியொற்றியே தமிழில் இத்தகைய படைப்போர் இலக்கியங்கள் தோன்றின. கிதாபுல் மகாசி என்னும் இந்த நூல் நபிகள் நாயகம் (சல்) நிகழ்த்திய புகழ்பெற்ற போர்களாகிய பத்ரு, உஹது, ஹுனைன், கைபர், அகழ்ப்போர், கர்பலா ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களைப் பற்றியது.

தமிழில் போர்பற்றிய செய்திகள் இலக்கியத்தின் ஊடே விரவி வருவதும் (புறம்) போருக்கென்றே தனி நூல்கள் (களவழி நாற்பது, கலிங்கத்துபரணி) தோன்றுவதும் தமிழிலக்கிய பரப்பில் மிகுதியாகக் காணமுடிகின்றன. மண்ணாசையும் பெண்ணாசையுமே இப்போருக்கான காரணங்களாக இருப்பதைக் காணலாம். ஆனால் படைப்போர் இலக்கியம் இதிலிருந்து வேறுபட்டு இறை வழிபாடு ஒன்றையே அடியொற்றிதாக இருப்பதைப் பார்க்கமுடியும். ஓரின வழிபாட்டு முறையைப் பகைவர்கள் ஏற்றுக்கொண்ட உடன் அவர்கள் இழந்த நாடுகள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்படும். அதுபோலவே பரணி இலக்கிய அமைப்பு நிலையிலிருந்து படைப்போர் அமைப்பு முற்றிலும் வேறுபட்டு இருப்பதையும் இங்குக் காணமுடிகின்றது.

மயக்கறு கொச்சகத் தீரடி இயன்று
நயப்புறு தாழிசை உறுபிற் பொதிந்து

என்று பன்னிருபாட்டியலும் தாழிசைக் கொச்சகமாகிய பரணி செய்யுளும் என்று பேராசிரியர் (தொல்.156) குறிப்பிடுவதும் பரணியின் தன்மையை எடுத்துரைக்கும்.

மேற்சுட்டிய இவ்விளக்கங்களின் அடிப்படையில் பரணி இலக்கிய வகை கலித்தாழிசையில் அமைய வேண்டும் என்ற மரபாகிறது. ஆனால், இம்மரபைப் படைப்போர் இலக்கிய வகையில் பார்க்க முடியவில்லை. மாறாக, கண்ணிகளாகவும் (சக்கூன்

படைப்போர்) விருத்தப்பாக்களாகவும் (செயித்துப் படைப்போர்) சில நாட்டுப்புற பாடல் அமைப்பிலும் வசன நடையிலும் அமைந்திருப்பதைப் பார்க்க முடிகின்றன. அவ்வாறே பரணியின் பத்து உறுப்புகளாகிய கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப்பாடியது, பேய்களைப் பாடியது, பேய்முறைப்பாடு, காளிக்குக் கூளி கூறியது, களம் பாடியது, கூழாடுதல் ஆகியவற்றில் போர் பாடியது என்ற ஓர் அமைப்பு தவிர எஞ்சிய எவையும் இடம் பெறாதது குறிப்பிடத்தக்கது.

மேற்சுட்டிய உறுப்புகள் இசுலாமிய மார்க்கத்துக்கு மாறுபட்டவை என்பதால் அவை படைப்போரில் தவிர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பரணியில் இடம்பெற்றுள்ள கடைதிறப்பு என்ற உறுப்பு காதற் சுவையை மிகுதியாக வெளிப்படுத்தும் பகுதியாதலால் இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. மேலும் பரணி இலக்கியத்தின் பெயரிடு மரபு வெற்றிப்பெற்றவர்களைப் பற்றிப் பாடினாலும் அது தோற்றவர் நாட்டுப்பெயரால் அமைந்திருப்பதைப் போன்றே படைப்போர் இலக்கியங்களின் பெரிடு முறையும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

படைப்போர் இலக்கிய வகையில் இபுனியன் படைப்போர், உச்சிப் படைப்போர், தாகிப் படைப்போர், வடோச்சிப் படைப்போர், இந்திராயன் படைப்போர், சல்கா படைப்போர் அல்லது இறவுசுல்கூல் படைப்போர் ஆகியன குறிப்பிடத்தகுந்த வகைகளாகும். முசுலீம்களுக்கும் முசுலீம்கள் அல்லாதோருக்கும் இடையே நடக்கும் போரில் இசுலாத்திற்கு எதிராகப் போரிட்ட முசுலீம் அல்லாதோரின் பெயர்களிலேயே படைப்போர் அமைந்திருப்பது கவனிக்கதக்கது.

பெரும்பாலும் படைப்போர் யார் பெயரால் அழைக்கப்படுகின்றதோ அவர் போரில் மடிந்து விடுவதாகப் படைப்போர் விவரிக்கிறது. சல்கா படைப்போர் ஒரு பெண்ணின் பெயரால் அமைந்த காப்பிய அமைப்பில் உள்ள வகையாகும். சல்கா அம்மையார் இசுலாத்தைத் தழுவுவதற்கு முன்னர் போரிட்டு அதன் பிறகு இசுலாத்தைத் தழுவியதால் சல்கா என்னும் அப்பெயர் அவ்விலக்கிய வகைக்குப் பொருந்தாது இருந்துள்ளது. ஒரு வேளை சல்கா அம்மையார் போரில் மடிந்திருந்தால் சல்கா படைப்போர் என்ற பெயர் பொருத்தமாய் இருந்திருக்கும்.

ஆனால், போரில் கொல்லப்பட்டவன் இறவுசுல்கூலாக இருப்பதால் இசுலாமிய மரபு கருதி நூலுக்கு இறவுசுல்கூல் படைப்போர் என்று பெயராயிற்று. மேலும், இப்படைப்போரில் இடம் பெற்றுள்ள பெண் பற்றிய வர்ணனையில் ஒருவள் முதிய பெண்ணாக இருப்பதும் மற்றொரு பெண்ணாகிய சல்கா இசுலாத்தைத் தழுவுவதற்கு முன்புள்ள நிலையைப் பற்றியதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. படைப்போரில் இடம்பெறும் சல்கா அம்மையாரின் கேசாதிபாத வருணனை என்பது முசுலீம் அல்லாத ஒரு பெண் பற்றியதாக இருப்பதால் அது இசுலாமியத்திற்குப் புறம்பாகாது என்பது சிலருடைய கருத்து. ஆனால் இதுவும் ஆய்தற்குரியதுதான்.

நூல் முடிவுகள்

- தமிழில் இசுலாமிய மரபுகள் என்ற பொருண்மையை மையமாகக் கொண்டு அமைந்துள்ள இந்நூற் கருத்துகள் ஒரு குறிப்பிட்ட பக்க அளவிற்குள் அடங்கிவிடக் கூடியனவன்று. பல அரிய வரலாற்றுத் தடையங்களைக் கொண்டுள்ள இசுலாமிய இலக்கியம் குறித்த இவ்வாய்வு நூல் பல ஆயிரம் பக்கங்களுக்குள் விரித்துரைக்கக் கூடியது. காலமும் இடமும் கருதி இசுலாமியத் தமிழ் இலக்கியத்தில் சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

- இசுலாமியத் தமிழிலக்கியம், தமிழ் இலக்கிய மரபினின்று எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதை இந்நூலில் ஒரு சில நூற்கருத்துகளுடன் மட்டுமே ஒப்பிடப்பட்டு ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக, இசுலாமியத் தமிழிலக்கியத்தின் புத்திலக்கிய வடிவங்களான சீதக்காதி நொண்டி நாடகம், திருமண வாழ்த்து ஆகியன தனித்தனியே ஆய்வு நிகழ்த்துமளவிற்குப் பல புதிய தகவல்களைக் கொண்டுள்ள நிலையில் இந்நூலின் தொடச்சியாக அவை பின்னாட்களில் தனி நூலாக்கம் பெறலாம்.

- இசுலாமியத் தமிழிலக்கியம் மற்றும் அதன் மொழியில் இடம் பெற்றுள்ள பல்வேறு சொற்கள் (அரபுச் சொற்கள், பாரசீகச் சொற்கள், மற்றும் உருதுச்சொற்கள் தனித்தனியே திரட்டப் பெற்று அவற்றை ஒப்பீட்டு மொழியயில் (Comparative Linguistics) நோக்கில் ஆய்வுக்குட்படுத்தலாம். அதன் மூலம் தமிழரின் பூர்வ வரலாறு, ஆட்சிச்சிறப்பு ஆகியன தெள்ளிதின் புலப்படும்.

- இன்றைக்கு இசுலாமியம் பல்வேறு நாடுகளில் பின்பற்றக் கூடிய மிகப் பெரிய மார்க்கமாக, பல்வேறு மொழிச்சூழலுக்கேற்பப் பேசக் கூடிய உலக மொழியாக விளங்குகின்றன. அத்தகு சூழலில் இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்களையும் முசுலீம் பேச்சு வழக்கில் இடம் பெற்றுள்ள அரபுச் சொற்களையும் சொற்றொடர்களையும் ஒன்று திரட்டி

ஆய்வுக்குட் படுத்தலாம். இதன் வழி இசுலாமியர்களின் வாழ்வியல் முறையை அளந்தறிய முடியும்.

- இசுலாமியத் தமிழிலக்கியங்களில் அரபுச் சொற்களே மிகுதியாக இடம்பெற்றுள்ள சூழலில் அரபு மொழி தெரியாத ஒருவருக்கு அதன் வாசிப்பில், புரிதலில் பல குழப்பங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உருவாகின்றன. அத்தகு சூழலில் இவ்வரபுச் சொற்களுக்கான பொருளைத் தமிழில் கொடுப்பதன் மூலமும் அவற்றைத் தமிழ் ஒலிகளுக்கேற்ப ஒலிமாற்றம் செய்வதன் மூலமும் தமிழ்ச் சொற் களஞ்சியம் பெருகும்.

- தமிழிலக்கியங்களைக் காட்டிலும் இசுலாமியத் தமிழிலக்கியம் பல புதிய இலக்கிய வகைகளை, வடிவங்களைக் கொண்டுள்ள போதிலும் (நாமா, கிசுஸா, மசலா, படைப்போர்) அவையாவும் தமிழ் மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை. ஆகவே, இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு தமிழிலக்கிய வரலாறு போல அதிக அளவில் எழுதப் படுவதுடன் இசுலாமியத் தமிழிலக்கியம் தமிழிலக்கியத்தின் மிக முக்கியமான ஒரு பகுதி என்ற மனோபாவம் ஏற்படுதல் வேண்டும்,

- இசுலாமியத் தமிழ்க் காப்பிய வகையில் சீறாப்புராணம் தவிர்த்து எண்ணற்றக் காப்பியங்களும் சிற்றிலக்கிய வகையில் நூற்றுக்கு மேற்பட்ட சிற்றிலக்கியங்களும் தோன்றியுள்ளன. ஆகவே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையோடு முடிந்துவிட்ட காப்பியப் பகுப்பும், சிற்றிலக்கியப் பகுப்பும் மேலும் பல எண்ணிக்கையில் விரித்துரைக்க வேண்டியுள்ளது. அதாவது இப்புகுப்பு முழுமையற்ற ஒரு தொகுப்பாக அமைவதால் அதில் மேலும் பல புதிய இணைவுகளைச் சேர்க்க வேண்டியத் தேவை எழுந்துள்ளது.

- இந்நூலில் இடம்பெற்றுள்ள யானை, குதிரை போன்ற விலங்குகளும் மிளகு, மூங்கில் போன்ற தாவரப் பொருட்களும், பொன் (தங்கம்), மணி (இரத்தினக்கல்) போன்ற ஆபரணப்பொருட்களும் ஆகிய இவை ஒவ்வொன்றும் மிக நுட்பமான வரலாற்றை உள்ளடக்கிய தடயங்களாகவே இனங்கண்டறியப்பட்டுள்ளன.

- முடிவுகள் பெரும்பாலும் அவரவர் சார்ந்து நிற்கும் பின்புலம், கண்ணோட்டங்களுக்கேற்ப மாறுபடுகின்ற

தமிழ்ச்சூழலில் உண்மை நிலையை அடைய முடியா நிலை ஏற்பட்டு விடுகிறது. குறிப்பாகச் சங்க இலக்கியத்தில் காணலாகும் 'யவனர்' குறித்த ஆய்வில் இத்தகையப் பார்வைகளையே காண முடிகின்றன. இது பற்றி இசுலாமிய ஆராய்ச்சியாளர்கள் அணுகிய பார்வையும், இதர ஆராய்ச்சியாளர்கள் அணுகிய பார்வையும் முடிவுகளும் வெவ்வேறாக உள்ளன. இத்தகையச் சூழலில் நம்பத்தகுந்த ஆதாரங்களைக் கொண்டு உண்மை காணும் முயற்சியை இந்நூல் மேற்கொண்டுள்ளது.

சான்றெண் விளக்கம்

1. நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர் (பதிற் 6;5)
பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர் (பதி 7;7)
பந்தர்ப் பயந்த பலர் புகழ் முத்தம் (பதி 8;4)
குணகுட கடலோ டாயிடை மணந்த பந்தரந்தரம்
(பதி.51)

'பந்தர் என்னும் அறபுச் சொல் துறைமுகம், துறை பொருட் களஞ்சியம் என்னும் பொருட்களைக் குறிக்கின்றது. பாரசீக மொழியிலும் இச்சொல் துறைமுகப்பட்டினத்தைக் குறிக்கிறது. அறபு மொழியிலிருந்து பாரசீக மொழிக்கு வந்தது இச்சொல். எனவே பந்தர் என்பது ஒரு அறபுச் சொல் என்பது புலனாகிறது. இன்னும் பந்தர் என்னும் பெயரைக் கொண்ட துறைமுகப் பட்டினங்கள் தமிழ் நாட்டில் உள்ளன. போர்ட்டோ நோவோ என்றும் பறங்கிப் பேட்டை என்றும் அழைக்கப்படும் துறைமுகப்பட்டினம் மஹ்மூது பந்தர் என வழங்கப்படுவதை இன்றும் காணலாம்.

தமிழ் நாட்டில் கிழக்குக் கரையில் கோவளத்துக்கு அருகில் 'சஹிது பந்தர்' என்னும் பட்டினம் ஒன்றும் உள்ளது. சங்க கால இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள இவ்வகச் சான்றுகள் மூலம் அறபு மொழி பேசும் மக்கள் பழங்காலத்திலிருந்தே தமிழ் நாட்டுடன் வியாபாரத் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்பது புலனாகும் (விளக்கத்திற்கு, இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாறு I, பக், 14,15).

2. யவனரைச் சோனகர் என்று அழைக்கப்பட்டுள்ளமைக்குக் கூறப்படும் சில காரணங்களைச் சுட்டுவதும் சோனகர் குறித்த ஆய்வில் மேலும் பல தெளிவைக் கொடுக்கும். அவ்வகையில்

தமிழகத்திற்குப் பண்டைய நாளில் வருகை புரிந்த அராபியர்களை 'யவனர்' என்றும் அவர்களே இசுலாமியர்களாக மாறி (கி.பி.7) முசுலிம்களாக இங்கே வருகை புரிந்த போது சோனகர் என்றும் குறித்துள்ளனர். அதாவது, யவனர் என்று வழங்கப்பட்ட பண்டைய அரபியர் நாளடைவில் முசுலிம்களாக மாறிவிட்டதால் 'யவனர்' என்ற சொல் வழக்கற்று 'சோனகர்' என்ற ஒரே சொல்லாக நிலைத்துவிட்டது. கி.பி.7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றிய இலக்கியங்களில் 'யவனர்' என்பதற்குப் பதிலாக 'சோனகர்' என்ற சொல் இடம் பெற்றது.

தமிழகத்து விளைபொருளான மிளகிற்கு யவனப்பிரியம் என்றோர் பெயர் உண்டு. "யவனராகிய அரபி வணிகர் மிளகை உவந்து கொள்முதல் செய்ததால் இப்பெயர் வந்தது என்பதும் இவ்விடத்துக் குறிப்பிடத்தக்கது. மேலும் சிலப்பதிகாரத்தில் புகார் நகரக் கடற்கரையோர வீதி முற்றும் வானுயர்ந்த மாளிகைகளைக் கொண்ட யவனக் குடியிருப்புகள் இருந்துள்ளமையையும் அதன் வழி அறிய முடிகிறது.

தமிழிலக்கியங்களில் கி.பி.7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் குறிக்கப்படும் 'சோனகர்' என்ற இச்சொல் இன்றும் வழக்கில் உள்ளது. தமிழகத்தில் தொண்டியில் 'சோனகர் தெரு' என்ற ஒரு தெருவே உள்ளது. இலங்கையில் சோனக முசுலிம்கள் உண்டு. சிங்கள மொழியில் சோனகர் என்பது யோனக வீதி என்று குறிக்கப்படுகிறது தமிழில் யகரம் மொழிக்கு முதலில் வராததாகையால் யவனர் என்பது 'உவனர்' என்று குறிக்கப்பட்டுள்ளதைப் போன்றே வடமொழி மற்றும் பாலி மொழி போன்ற ஆரிய மொழிகளின் செல்வாக்கினைப் பெற்ற சிங்கள மொழியில் 'சோனகர்' வீதி என்பது 'யோகன வீதி' என்று குறிக்கப்பட்டுள்ளமை ஈண்டு நினையத்தக்கது.

3. தமிழ்நாட்டு முசுலிம்களுக்கான நீண்ட நெடிய வரலாற்றைப் போன்றே இலங்கை முசுலிம்களுக்கும் நெடிய வரலாறு உண்டு. அரபு நாட்டு வணிகர் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தது போலவே இலங்கைக்கும் வரத்தலைப்பட்டுள்ளனர். ஆனால் இலங்கை வருகை வெறும் வாணிக நோக்கத்திற்காக மட்டுமின்றி அங்குள்ள ஆதமலையைத் தரிசிப்பதற்காகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இம்மலையில் ஆதிபிதா ஆதம் நபி (அலை) அவர்களின் பாதம் பொர்திந்து இருப்பதால் அம்மலை பாவா ஆதமலை எனப்பட்டது. பாவா என்னும் அறபுச் சொல்லுக்கு தகப்பன் என்று பொருள். ஆகவே, ஆதம் நபி (அலை) அவர்களின் பாதம் உள்ள மலையைத் தரிசிப்பது இன்றியாமையாதது என்று

முசுலிம்களும் அவர் தம் மூதாதையரான அரபு மக்களும் நம்பினர். இதன் காரணமாகவே அவர்கள் இலங்கைக்கு வரத் தலைப்பட்டனர் (இசுலாமியத் தமிழ் இலக்கியவரலாறு-1, ப.41).

அரபுநாட்டவர் இலங்கையோடு கொண்டிருந்த தொடர்பு மிகவும் நீண்ட நெடுங்காலப் பாரம்பரியம் கொண்டது என்பதை வரலாற்றுச் சான்று ஒன்றன் வழியே உறுதிப்படுத்தலாம். ஐரோப்பாவில் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த ஒரு சம்பவம் பழங்காலத்திலிருந்தே அராபியர் இலங்கையைப் பற்றியும் இலங்கையில் கிடைக்கும் பொருள்களைப் பற்றியும் அறிந்திருந்தனர் என்பதை மெய்ப்பிக்கிறது.

குறிப்பாக, ஐரோப்பியர்களின் வியாபார நிறுவனங்களில் அரபு வணிகர் பலர் பங்கேற்றுள்ளனர். அப்படி ஒருநாள் ஐரோப்பியாவில் அரபு வணிகர்களின் முன் சில மணிக்கற்கள் வைக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றினை உற்றுநோக்கிய ஓர் அரபு வரிணிகன் அந்தச் சிவப்பு மணிக்கல் இலங்கையில் கிடைக்கப் பெற்றது அன்று என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

ஒரு மணிக்கல்லைப் பார்த்து விட்டு அது இலங்கையில் பெறப்பட்டதன்று என்று கூறும் அளவுக்கு அரபியர் இலங்கையைப் பற்றித் துல்லியமாக அறிந்திருந்தனர். மேலும், முகம்மது நபி (சல்) அவர்கள் காலத்தில் ஓர் அரபுப் பயணி தென் இந்தியாவின் ஊடாக வந்து ஆதமலையைத் தரிசித்துச் சென்றுள்ளார் என்ற கருத்தும் இலங்கைக்கும் அராபியர்களுக்கும் இடையே இருந்த நீண்ட நெடிய உறவை அறிய வைக்கும் (இசுலாமியத் தமிழ் இலக்கியவரலாறு-1, ப.43).

4. தமிழ் முசுலீம்கள் சோனகர் இராவுத்தர் என்று வழங்கப்பட்டமைப்போல துலுக்கர் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டுள்ளனர். சான்றுக்குச் சில:

உண்ணமு தருந்தியிளை யோர்நகர் கொணர்ந்த
துண்ணெனு முழக்கின துருக்கர் தரவந்த
முண்மக டன்மார் பினணி வன்னச ரமென்னப்
பண்ணுறு வயப்புரவி பந்தியின் நிறைத்தார்
(கம்ப.பாலகாண்டம்)

வந்தவர் மத்திகர் மாருவர் மாகதர் மச்சர்
மிலைச்சர்களே
சூத்திரர் குத்தர் இடக்கர் பிடக்கர் குருக்கர் துருக்கர்
(கலிங். பரணி)

கருநடர் துருக்கர் வடகவுர் கடுத்தர் கவுரியர்
மகதத்தர்
பிறர் சமயக் கடலென வளைத்தமர்க் கனதல
முட்ட
வொலிகளி பெருகளத்திடையே

(குலோத். சோழன். பி.த)

சில சமயங்களில் துருக்கர் என்பது துலுக்கர் என்றும் மாறி வருவதைக் காணலாம். கல்வெட்டுகளில் இச்சொற்கள் இரண்டும் மாறிமாறி வந்துள்ளன. கோவை மாவட்டத்தில் பாரியூர் என்ற ஊரில் உள்ள ஒரு கல்வெட்டில் பாண்டிய மன்னர் வீரபாண்டித் தேவர் வழங்கிய முற்றூட்டிற்கு நான்கு எல்லை குறிப்பிடும்பொழுது

'துலுக்கன்பட்டி தென்மேற்கு'

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தாராபுரத்தில் உள்ள ஒரு கல்வெட்டில்-

'துலுக்கர் பள்ளியாகி சுதானம் தெரியாமலாகிவிட்ட'

என்றும்

'முன்னாள் ராஜராஜன் சுந்தரபாண்டியன் தேவர்
துலுக்கருடன் வந்த நாளையில்'

என்னும் வரலாற்றுச் செய்தியை விளம்புரம் திருக்களர் கல்வெட்டும்

'துலுக்கர் ராச்சியமாய் பல சேமங்கள் தப்பித்து'

என்னும் குறிப்பை திருவொற்றியூர் கல்வெட்டும் கொண்டுள்ளன. 'துலுக்கர்', துருக்கர்' என்னும் இரண்டு சொற்களும் முசுலிம் மக்களைக் குறிப்பிட மாறிமாறிப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம் (விளகத்திற்கு, இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாறு-1, ப. 54-58).

5. அரேபியாவிலிருந்து வந்த முசுலீம்கள் முதன்முதலில் கீழக்கரையில் தான் இறங்கினார்கள். கீழக்கரை என்பது தமிழகத்தின் பண்டைய துறைமுகங்களின் ஒன்றான கொற்கையைக் குறிக்கும் என்பது வரலாற்றாய்வாளர் பலருடைய கருத்தாகும். அதன்படி முதற் சங்ககாலப் பாண்டிய தலைநகரான தென் மதுரை குமரியாறு கடலில் கலந்த விடத்து இருந்தது. இந்நகரம் கடல் கோளால் அழிக்கப்பட்ட பின்னர் இடைச் சங்ககாலப் பாண்டியர் தலைநகரமாகக் கபாடபுரம் விளங்கியது. தாமிரபரணியாற்றுக்கும் குமரியாறு கடலில் கலந்த

இடத்துக்கும் இடையிலிருந்த இந்நகரமே அக்காலத்திய பெருந்துறைமுகமாகும்.

இரண்டாவது முறையாக ஏற்பட்ட கடல் கோளிற்குப் பிறகு,கடைச் சங்ககாலத்துப் பாண்டியர் தலைநகரமாக மதுரை மாநகரம் விளங்கிற்று. ஆனால் கபாட புரத்திற்குப் பிறகு பாண்டிய நாட்டில் வேறு துறைமுகம் ஏதுமில்லை. சோழப் பேரரசின் புகார்ப் பட்டினமே அப்போதைய பெருந்துறைமுகமாகும். (இது குறித்த விவரங்களைப் பட்டினப்பாலை, சிலப்பதிகாரத்தில் பார்க்கலாம்)

அதற்குப் பிறகு உருவான துறைமுகம் தான் கொற்கை. பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிறகு வந்த கொற்கைப் பாண்டியனுடன் இணைந்தே கொற்கை அறிமுகமாயிற்று. கொற்கைப் பாண்டியனின் இயற்பெயர் வெற்றிவேல்செழியன். கோவலன் உயிர் நீத்தப் பிறகு கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்காக சேரன் செங்குட்டுவன் இமயமலைச் சென்றிருந்த காலை மதுரையம்பதியை கொற்கைப் பாண்டியன் முடி சூட்டிக் கொண்டான். சித்திர மாடத்துத்துஞ்சிய நன்மாறன் என்பவன் இவனே.

கொற்கைத் துறைமுகம் அறிமுகம் ஆகிய காலம் கி.பி.2ஆம் நூற்றாண்டாகும் இது மதுரைக்கு அருகே நூறு கி.மீ. தொலைவில் உள்ளது. இத்துறைமுகம் குறித்து இபுனுபதூதா, தாலமி மற்றும் மார்கோபோலோ போன்ற பயண நூலாசிரியர்கள் குறித்துள்ளனர். அக்குறிப்புகளில் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரையில் பாண்டிய மன்னர்கள் தங்கி ஆட்சியாண்டதாகக் காணப்பெறுகின்றன. தற்கால இராமநாதபுர மாவட்டத்தின் துறைமுகப்பட்டினமாக விளங்கி வரும் கீழக்கரையே 'கொற்கை' என்று கெஜட்டிர் செய்திகள் குறிப்பிடுகின்றன. இபுனுபதூதாவும், மார்கோபோலோவும் கண்டுரைத்த துறைமுகம் இந்தக் கீழக்கரை தான் அவர்கள் குறிப்பிடும் 'பத்தன்' ஆத்கட் என்ற ஊர்களெல்லாம் கீழக்கரைக்கு அருகில் உள்ள ஊர்களாகும். அரபு மொழியில் உள்ள வாசகத்தை ஆங்கிலப் படுத்திய கிப் (Gibb) என்பவன் KAYAL KARAI என்று ஆக்கியுள்ளான். அரபு மொழியில் ழ கரம் இன்மையால் கீழக்கரை காயல் கரை ஆயிற்று.

அதுபோலவே 'பத்தன்' என்பது பட்டனம் என்பதன் குறுக்கம் ஆகும். அரபியில் 'ட' கரம் இன்மையாயின் பட்டன் என்பது பத்தன் என்றாயிற்று. இபுனுபதூதா ஆங்கிலத்தில் 'த' இல்லாமையால் தூத்துக்குடியை டூட்டுக்கொரின் என்றாக்கியது போல

(திருவல்லிக்கேணி - ட்ரிப்லிகேன்) அரபியில் 'ட' வுக்கு பதில் 'த' இடம்பெற்றது.

கி.பி. 1311இல் வடநாட்டிலிருந்து தென்னகத்தின் மீது படை நடத்தி வந்த மாலிக்காபூர் என்பவன் அரபு நாட்டினர் பலர் இப்பகுதியில் (கீழக்கரை) வாழ்ந்துவருவதைத் தான் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளான். எனவே இந்தக்கீழக்கரையே கடைச்சங்ககாலத் துறைமுகம் (கொற்கை) ஆதலின் யவனராகிய அரபியர்கள் ஆதியிலும் கி.பி. 7ஆம் நூற்றாண்டளவிலும் வந்து தங்கி விட்ட இடம் கீழக்கரை என்பது கா.மு.ஷெரீப் அவர்கள் குறிப்பிடுவார் (விளக்கம். வள்ளல் சீதக்காதி வரலாறு, பக் 54-74).

6. ஆபிரகாம் தீர்க்கத்தரிசி என்றழைக்கப்படும் நபி இப்ராஹூம் தம்முடைய மனையாட்டியையும் மைந்தர் இசுமாயிலையும் மக்கா நகரிலுள்ள குன்றுகளிடையே பல நூற்றாண்டுகளுக்கு முன் விட்டுச்சென்றார். அந்தத் தீர்க்கதரிசியின் குலத்தினர் த்லைமுறை தலைமுறையாக அங்கே பெருகி வந்தார்கள். அக்குலத்தின் நாற்பதாவது தலைமுறையில் தோன்றியவர் அத்னான் என்பவர். அத்னானின் ஒன்பதாவது சந்ததியினர் நஜ்ர் பின் கினானா என்பவர். இவர் தேர்ற்றுவித்த வம்சம் தான் 'குறைஷி குலம்'. அக்கால அநாகரிகச் சூழலில் ஓரளவு நாகரிகமும் நேர்மையும் கொண்டவர்களாக இவர்கள் விளங்கியுள்ளனர்.

குறைஷி குலத்தின் ஒன்பதாவது சந்ததியில் குஸையி என்பவர் தோன்றினார். இவரிடம் தான் கஃபா ஆலய நிர்வாகம் ஒப்படைக்கப் பட்டது. உருவமில்லா ஓர் இறைவனை வழிபடுவதற்காக உலகின் முதன் முதலில் தோன்றிய ஆலயம் கஃபா என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் கருத்து. இந்த ஆலய நிர்வாகியாகிய குஸையி என்பவரின் பேரன் வயிற்றுப் பிள்ளையே அப்துல் முத்தலீப். அப்துல் முத்தலீப்பின் பேரர்தான் முகம்மது நபி (ஸல்) ஆவர் (N.B.அப்துல் ஜப்பார், நபிபெருமானார் வரலாறு,ப.17).

7. இசுலாத்தில் சேர்ந்ததாகக் கூறப்படும் 2000 பேர்களும் யார் என்று பார்த்தால் அவர்கள் மதமற்றவர்களும் காட்டு மிராண்டிக் கொள்கைக்கு ஆளானவர்களும் மேல் சாதியார் அல்லது இந்துக்கள் என்று சொல்லப்பட்டவர்களால் ஒதுக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டு, தீண்டப்படாத் தகாதவர்கள் என்று சொல்லிக் கொடுமைப்படுத்தப் பட்டு வந்தவர்களும், வருகிறவர்களும், இனியும் வெகு காலத்திற்கும் அவர்கள் ஆளாக்கப்பட வேண்டியவர்கள். இப்படி இவர்கள் ஒதுக்கப்பட்டு, தீண்டப் படாதவர்களாய்க் கொடுமைப்

படுத்தப்பட்டு வருவது எப்போது முதல், எத்தனைக் காலமாக என்று சொல்வதற்கில்லை.

கடவுள், வேதம், சாஸ்திரம் முதலியவைகளின் கட்டளைப்படியே இந்த நிலை நடந்து வருவதாகவும் சொல்லப்படுபவர்கள் மற்றும் இந்த மக்களுக்கு சாஸ்திரங்களில் கடவுள் இல்லை, மதம் இல்லை, வாழ்க்கைச் சுதந்திரம் இல்லை. நிபந்தனையற்ற அடிமைத் தன்மையே அவர்களது வாழ்க்கைப்பயன் என்றும், சட்டம் என்றும் சொல்லப்படுவதாகும். இப்படிப் பட்ட மக்களைத் தான் இன்று (இந்த 2000 பேர்கள்) இசுலாமானார்கள் என்று சிலர் சொல்லிப் புலம்புவதும் இதற்காக இவ்வளவு ஆத்திரமும் எதிர்ப்பு முயற்சியும் செய்வதுமாகும்.

இசுலாமாக மாறும் காரியம் நம் நாட்டிற்குப் புதியது என்று யாரும் சொல்லி விடமுடியாது. இந்தியக் கண்டத்தை எடுத்துக் கொண்டால் 100க்கு 10 பேர்கள் இசுலாமியர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இத்தனை பேரும் இந்தியாவின் பூர்விக மதத்தார்கள் என்றோ அல்லது மகம்மது நபி அவர்கள் காலத்தில் மதம் மாறி மக்கா, அரேபியா முதலிய வெளி இடங்களில் இருந்தார்கள் என்றோ கூற முடியாது. 100க்கு 10பேர்களில் 7 பேர்களுக்குக் குறையாமலாவது இந்தியாவில் இருந்த பூர்வீகக்குடிகள் தான் இசுலாமானவர்களாகும். நம் திராவிட நாடு என்பதை எடுத்துக் கொண்டால் இங்குள்ள இசுலாமானவர்களில் 100க்கு 99 பேர்கள் திராவிடப் பூர்வக் குடிகளாகும் என்ற வரலாற்றுப் பின்புலத்தைச் சுட்டும் பெரியாரின் இப்புள்ளி விவரம் தமிழரின் தொன்மையை நோக்கி அழைத்துச் செல்கிறது.

இவ்விடத்து, இசுலாம் தமிழகத்து வந்த வருகையில் திருவிழாவில் காணாமல் போன குழந்தையை மீண்டும் பெற்ற தாய் தழுவிக் கொள்வதைப் போலத் தழுவிக் கொண்டார்கள் என்று பேரறிஞர் அண்ணா சுட்டியிருப்பது சிந்திக்கத்தக்கது. (தி.மு.காதர், தமிழர் வாழ்வில் மொழியில் இலக்கியத்தில் இசுலாத்தின் தாக்கம் ,ப.2) 1926 முதல் 1930 வரை பெரியார் மேற்கொண்ட தீவிரப் பிரச்சாரத்தின் விளைவைத் தொடந்து 1935 இல் (13.11.1925) நாசிக்கில் நிகழ்ந்த மாநாட்டில் (பம்பாய் மாகாண தாழ்த்தப்பட்ட மக்கள் மாநாடு) அம்பேத்கர் தலைமையின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் இத்தகைய மதமாற்றத்திற்கு முக்கியத் தூண்டுகோலாக இருந்துள்ளது. அதன்படி இனி எந்த மதம் உங்களுக்குச் சம அந்தஸ்தைக் கொடுக்கிறதோ அந்த மதத்தில் சேர்ந்து கொள்ளுங்கள்

என்று கண்ணீரும் கம்பலையுமாக ஆற்றிய அவரது உரை மிகுந்த விளைவுகளை ஏற்படுத்தின.

தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஏற்பட்ட இவ்விழிப்புணர்வு அன்றைய ஆதிக்கச் சக்திகளிடையே மிகுந்த வெறுப்பை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இதைப் பெரியார் தமது பத்திரிகையில், 'திருச்சி நேஷனல் காலேஜ் என்பதில் இரண்டு ஆதிதிராவிடப் பிள்ளைகள் சென்று தங்கள் வகுப்பைச் சொல்லி சேருவதற்குக் கெஞ்சினால் அவர்களைப் பார்த்து காலேஜ் தலைவர் 'ஏண்டா போய் அம்பேத்காரைப் போய்க் கேட்பது தானே இங்கே ஏன் வருகிறாய்? வெட்கமில்லை; போ வெளியே என்றாராம். இப்படிப்பட்ட நூறு சம்பவங்கள் உண்டு. இந்தப் படியெல்லாம் நடத்தப் படுகின்ற மக்கள் இசுலாம் மார்க்கத்தில் சேருவது ஆத்திரப்படத்தக்கதா? என்றவாறு பெரியார் தமது உணர்வு பொங்க விரித்துரைப்பர் (விரிவிற்கு, பெரியார் களஞ்சியம், தொகுதி.4,ப.3999).

8. பண்டைய (கி,பி.150) இலங்கையைப் பற்றி கிளேடியஸ் தொலமி வரைந்த பூகோள வரைபடத்தில் குறிக்கப்படும் ஆறுகளின் பெயர்களாகிய பாசில் பலூசியசு (பாரசீக நதி) என்ற மகாவலிகங்கை, சோனா பலூசியசு (அரேபியநதி) என்ற தெதுரு ஓயா; அஸானக் பலூசியசு (எதியோபிய நதி) என்ற ஜின் கங்கை ஆகியன பாரசீக, அராபிய, எதியோப்பிய மக்கள் வாழ்ந்த வாழ்விடங்களை நினைவு படுத்துபவைகளாகும்.

இசுலாத்திற்கு முந்திய ஜாஹிலியக் கால அரபுக் கவிஞர் இம்ரா உல் கைஸ் இப்னு ஹஜர் அவர்களின் கவிதைகளில் காணப்படும் இலங்கை அரபு உறவு குறித்த சொற்களில் (பில்பில்,கராம்பு) பில்பில் எனும் சொல் அராபிய மொழியில் மிளகாயைக் குறிக்கும். மிளகாய் அரபுநாட்டு விளைபொருள் அல்ல. அதே போன்று கராம்பு என்பது அரபு மொழிக்குடும்பத்தில் காணப்படாத சொல்லாகும். மேலும், இலங்கையின் வரலாற்றைக் கூறும் தொன்மையான நூலான (கி.மு.4) 'மகாவம்சம்' என்ற நூல் சுட்டும் யோனகர் குடியிருப்புகள் என்பதில் உள்ள யோனர்கள் (யவனர்) என்பது அராபியர்களைக் குறித்தது என்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. (விளக்கத்திற்கு, றவூப் ஸெய்னின் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு,ப 11-19)

9. சீறாப்புராணத்தின் முதற்பதிப்பு கி.பி.1842 (ஹிஜ்றி 1258) செய்கு அப்துல் காதிர் நெய்னார் லெப்பை ஆலிம் அவர்களால் கொணண்டுவரப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக வந்த பதிப்புகள்:-

கி.பி .1850 உசைன் சாகிப்

கி.பி. 1852 சைதாப்பேட்டை வீரபத்திர செட்டியார்

கி.பி. 1858 வீரானந்தோட்டம் சோனந்த நாயக்கர்

கி.பி. 1862 புலவர் செய்யித்

கி.பி. 1862 ம.மேத்தர் முகிதீன் 1866 நயினார் முகம்மது

கி.பி. 1880அல்லாப் பிச்சை

கி.பி. 1900 கண்ணகுமது மகுதூ முகம்மது புலவர்

கி.பி. 1902, 1908 செய்கு தம்பிபாவலர் (முதல் பாகம், இரண்டாம்பாகம்)

கி.பி.1974 கவிஞர் நாச்சிகுளத்தார் (இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு,தொகுதி -1,ப.425)

10. அஹமது ஷா என்னும் அந்துமான் நாட்டு மன்னன் பிள்ளைப் பேறின்றி நீண்ட காலமாகத் துன்பப்பட்டான். திரண்ட பெருஞ்செல்வமிருந்தும் பிள்ளைப் பேறில்லா மன்னனுக்கு இறையருளால் ஆண் மகவு பிறக்க, அதற்கு அப்பாசு எனப் பெயரிட்டு அன்போடு வளர்க்கிறான். பதினைந்து வயதாகும் போது அப்பாசு இளவரசன் வேட்டைக்குச் செல்கிறான். காடு மேடுகளில் வேட்டைக்கென அலைந்து திரிந்த அப்பாசுக்குக் களைப்பும் தாகமும் மேலிட குடிநீர் கிடைக்கா நிலையில் மனம் தடுமாறியவனாக மது நீராகிய கள் குடித்து மயக்கமடைகின்றான்.

இதனையறிந்து மனத்துயருற்ற மன்னன் பெரு முயற்சிக்குப் பின் தன் மகனின் மது மயக்கத்தைத் தெளியச் செய்கிறான். ஆயினும், இசுலாத்தால் அறவே கூடாது என ஒதுக்கிய மதுவை மகன் அப்பாசு அருந்தியக் காரணத்திற்குத் தண்டனையாக அப்பாசைக் காட்டிற்கு அனுப்ப அரசனாகிய தந்தை முடிவு செய்கிறான். ஆயினும், அருமந்தச் செல்வனை விட்டுப் பிரிய மனமில்லாதவனாக மன்னன் தன் மனைவியொடும் மகனோடும் நாட்டை விட்டுக் காட்டை நோக்கிச் செல்கின்றனர். கானகத்தே அவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

அதன்பின் பகுவீறு எனும் நாட்டை அடைகின்றனர். அந்நாட்டு இளவரசி மெஹர்பான் என்பவள் தான் கேட்கும் நூறு கேள்விகளுக்குத் தக்க விடை கூற இயலாதவர் தன் உயிரை இழப்பர் என்று அறிவித்திருந்தாள். இம்முயற்சியில் சிலர் ஈடுபட்டு உயிரையும் இழந்திருந்தனர். இந்நிலையில் மெஹர்பான் கேள்விகளுக்குப் பதில்

கூறத் துணிந்து முன் வந்த அப்பாசு அவள் விடுத்த நூறு கேள்விகளுக்கும் தக்க விடைகளைக் கூறி வெற்றி பெறுவதாகவும், அதன் மூலம் தான் இழந்த நாட்டை மீண்டும் பெற்று பெருவாழ்வு வாழ்ந்ததாகவும் கதை அமைகிறது (தமிழில் இசுலாமிய இலக்கிய வடிவங்கள், ப.47).

11. மதீனாவில் இசுலாத்தை ஏற்றிருந்தவர்களுள் பலர் தங்களுடைய பழைய குடிப்பழக்கத்தை விடாமல் மிதமாகவும், அமிதமாகவும் மது அருந்திவந்தார்கள். அதுவரை திருமறையின் கட்டளை யொன்றும் குடிப் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும் என்று சட்டம் பிறப்பிக்கவில்லை. குடிப்போதையில் இருப்பவன் தொழுகையில் கலந்து கொள்ளக் கூடாது என்று மட்டுமே சட்டம் அமல்படுத்தப்பட்டு வந்தது. ஒரு நாள் திடீரென்று குர் ஆனின் 5 வது அத்தியாயத்தின் 90 ஆவது திருவசனம் நபிக்கு இறைவனால் அறிவிக்கப்பட்டது. மது அருந்துவதும், சூதாடுவதும், நட்டு வைத்த கற்களைப் பூசிப்பதும், அம்பு எறிந்து குறி பார்ப்பதும் அறவே தகா என்பது அத்திருவசனத்திலுள்ள இறைக் கட்டளையாகும். அப்போது இருந்த சூழ்நிலையில் அரசுக்கு அதிக அளவில் நிதி வழங்கி வந்த பல பெருந்தனக்காரர்களும் செல்வந்தர்களும் மது அருந்துகிறவர்களாக இருந்தார்கள்.

அவர்களுடைய எதிர்ப்போ வெறுப்போ எழுமானால் அரசின் பொருளாதாரமே தறிகெட்டுப் போய்விடுமே என்று நபி கொஞ்சமும் அஞ்சவில்லை. "மனதுக்கு மகிழ்வூட்டும் மதுவே எங்களுக்குப் பிரதானம்" என்று சொல்லி எங்கே பணக்கார முசுலிம்கள் விலகியோடிப் போய் விடுவார்களோ என்று முகம்மது நபி கிஞ்சித்தும் தடுமாறவில்லை. உடனே ஓர் அறிவிப்பாளனை நபிகள் நாயகம் விளித்து வீதியெங்கும் இறைக் கட்டளைப்படி மதுவிலக்கு இந்த நிமிஷமே அமலுக்கு வந்து விட்டது என்று கூச்சலிட்டுக் கத்தும்படி ஏவி விட்டார்.

அந்த அறிவிப்பாளனும் வீதி எங்கும் சென்று உரத்தக் குரலில் அந்த அறிக்கையைப் பிரகடனப்படுத்தினான். சிலர் இல்லங்களில் ஜாடி ஜாடியாக மதுச்சாராயத்தை வீட்டில் வைத்திருந்தார்கள். அல்லாவின் கட்டளை நபி அறிவித்துவிட்டார் என்ற உணர்ச்சிப் பெருக்குடன் ஓங்கியோங்கி உதைவிட்டு ஜாடிகளை எல்லாரும் உருட்டிக் கவிழ்த்தார்கள். கையிலிருந்த கோப்பைகளிலும் கிண்ணங்களிலும் ஊற்றிப் பருகிக் கொண்டிருந்ததையும் வீசியெறிந்தார்கள். மதீனாத் தெரு வீதியிலே சாராய வெள்ளம் ஒரு வாய்க்கால் நீராகப் பெருகிச் சிற்றோடையாக ஓடிற்று என்று ஒரு

ஹதீது நமக்கு அறிவிக்கிறது. அன்று ஓடி மறைந்த சாராயம் இன்றளவும் மதீனாவிலோ சுற்று வட்டாரத்திலோ இன்றளவும் எட்டியும் பார்க்கவில்லை. பூரண மதுவிலக்கை நொடிப் பொழுதில் அமலுக்குக் கொணர்ந்த ஒரேஆட்சியாளர் முஹம்மத் நபியே என்பதை எவரும் மறுக்கமுடியாது (அப்துல் ஜப்பார், நபிபெருமனார் வரலாறு,பக். 247-248).

12. இசுலாத்தின் நான்காவது அடிப்படைக் கொள்கை 'ஜகாத்' ஆகும். இவ்வறபுச் சொல்லிற்குத் தூய்மை என்று பொருள். இறைவன் தந்த செல்வத்திலிருந்து நாற்பதில் ஒரு பகுதியை ஏழைவரியாகப் பொருளிலார்க்கும் வறுமையாளர்க்கும் மகிழ்ந்து கொடுத்து விடுவதன் மூலம் ஒருவனிடம் எஞ்சியிருக்கும் பொருளும் அவன் உள்ளமும் தூய்மைப்பட்டுவிடுவதை இவ்வறபுச் சொல் தெளிவு படுத்துகிறது. இறை மறை தொழுகையைக் குறிக்கும் இடத்தெல்லாம் ஏழை வரியை (ஜகாத்தை)யும் இணைத்தே கூறுகின்றது (குர்ஆன் 2;2,3,43;5;12;19;31).

இதன் பயன்பாட்டைத் தமிழ் இசுலாமியப் புலவர்களின் படைப்புகளில் காணமுடியும். குறிப்பாக, வண்ணக் களஞ்சியப் புலவர் இவ்வேழை வரி கட்டாயக் கடமை என்பதைப் 'புரிகடன் எனும் சக்காத்து' என்பர். மேலும் கடனாக உள்ள ஏழை வரியன்றி, எளியோர்க் கிரங்கிப் பரிவொடு தரும் பொருள் 'சதக்கா' எனப்படும். இதுவும் இசுலாத்தில் செல்வர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்விரண்டையும் (ஜகாத், சதக்கா) புலவர் குறித்துக் காட்டுவர். இவ்விரு வகைக் கொடைகளையும் இறைவன் தன் திருமறையில் வலியுறுத்திக் கூறியுள்ள செய்தியையும் புலவர் குறித்துள்ளார். நகரப் படலத்தில் ஆடவர் அரும் பண்புகளைப் பேசும்போது இவ்விரண்டையுமே புலவர் 'கொடையும் தருமமும்' எனக் குறிக்கின்றார். இவ்விரு சொற்களும் தமிழில் பொதுவாக ஈகையைக் குறிப்பனவேயாயினும் கொடை என்றது கட்டாயக் கடமையாகிய ஜகாத்தையும் தருமம் என்றது அதன் மேலும் செல்வர்கள் விரும்பி வழங்கும் சதக்காவையும் குறிப்பதாகும். (வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை, ப.47)

13. குறைஷியர்களுக்கும் நபிகள் நாயகம் அவர்களுக்கும் நடைபெற்ற போர்களில் ஒன்று 'பத்ருப் போர்'. இப்போரில் வெற்றி வீரனாகத் திகழ்ந்தவர் அலீ என்பவன். அலீயின் வீரத்தையும் அவனுடைய குணநலன்களையும் அருகிருந்து பார்த்த நபிகள் நாயகம் தன் அருமை மகள் பாத்திமாவை அவனுக்கு மணமுடிக்க எண்ணினார். அச்சமயத்தில் அங்கு வந்த அலீ அவர்களும் பாத்திமாவை தனக்கு

மணமுடித்து அன்பளிப்புச் செய்ய வேண்டினார். இச்செய்தியைத் தன் அருமை மகள் பாத்திமாவிடம் தெரிவித்தார் அண்ணல். பாத்திமாவும் தன் இணக்கத்தை மௌனத்தால் தெரிவித்தார்.

அதன்பின் அண்ணல் அவர்கள் அலீ அவர்களை அணுகித் திருமணத்திற்கான தொகை (மஹர்) என்ன கொணர்ந்தீர் எனக் கேட்க, அதற்குத் தன்னிடம் ஒரு குதிரையும் ஐந்து திர்ஹம் மதிப்புள்ள ஓர் இரும்பு அங்கியும் ஆட்டுத் தோல் ஒன்றும் போர்வை ஒன்றுந்தானிருக்கின்றன என்றார் அலீ. அதைக் கேட்டதும் இரும்பு அங்கியைத் திருமணத் தொகையாக வைத்துக் கொள்வோம் என்று அண்ணல் கூற அதற்கு அலீயும் ஒத்துக் கொண்டார். அலீ அவர்களின் எளிய நிலையைக் கண்டு ஐந்தே திர்ஹம் மதிப்புள்ள அந்த இரும்பு அங்கியை ஐநூறு திர்ஹம் அதாவது நூற்றி இருபத்தைந்து ரூபாய் விலை கொடுத்து வாங்கினார் உத்மான். அத்தொகையை அண்ணல் அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார் அலீ.

அதனை அண்ணல் அவர்கள் பிலால் அவர்களிடம் கொடுத்துக் கடைத்தெருக்குச் சென்று அதில் பாதித் தொகைக்கு மண விருந்துக்கான பொருள்களும் மற்றொரு பாதித் தொகைக்கு சீதனப் பொருள்களும் வாங்கி வருமாறு பணித்தார். ஏனெனில், அண்ணல் அவர்களும் ஏழைதான் அதன் பின் திருமணம் எளிய இனிய முறையில் நடந்தேறியது.

அண்ணல் அவர்கள் தன் அருமை மகளுக்குச் சீதனமாக மூங்கில் கட்டிலொன்றும்; தோல் விரிப்பு ஒன்றும்; தோல் தலையணை ஒன்றும்; தோல் துருத்தி ஒன்றும்; இரண்டு திருகைகளும்; இரண்டு மட்குடங்களும் கொடுத்தார்கள். உத்மான் அவர்கள் அலீ அவர்களுக்கு அன்பளிப்பாகத் தாங்கள் அவர்களிடமிருந்து வாங்கிய இரும்பு அங்கியையே திரும்ப அவர்களுக்கு அளித்தார். மணமுடித்த மறுநாள் அண்ணல் அவர்கள் மணமக்களிடம் சென்று நீர் கொணரச் செய்து அதில் தங்களின் இரு கைகளையும் நனைத்து அவ்விருவர் மீதும் அந்நீரைத் தெளித்தனர். அதன் பின் தன் அருமை மகள் பாத்திமாவைப் பார்த்து மேலான மணமகனைத் தேடிப்பிடித்து உனக்கு மணம் செய்வித்துள்ளேன், நீங்கள் இருவரும் மகிழ்வுடன் வாழ்வீர்களாக என்று ஆசி கூறினார். நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இடம் பெற்றுள்ள இத்தகு மணமரபின் வழி இசுலாமியத் திருமண முறையையும் திருமணத்திற்கு முன்,பின் மணப் பெண்ணுக்குக் கொடுக்கப்படும் சீதன மரபையும் தெரிந்து கொள்ளலாம் (அப்துற்-றஹூம், நபிகள் நாயகம்,ப.231-232).

துணைநூற் பட்டியல்

1. அப்துல் ரகுமான் (பதி.ஆ)ஆய்வுக் கோவை, இசுலாமிய இலக்கியங்கள், சென்னை, 2008.
2. அப்துல் ஜப்பார், N.B. நபிபெருமானார் வரலாறு, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978.
3. அப்துல் றஹீம், முசுலிம் தமிழ்ப் புலவர்கள், யுனிவர்சல் பப்ளிசர்ஸ்,சென்னை,1999.
4. " ", நபிகள் நாயகம், யுனிவர்சல் பப்ளிசர்ஸ், சென்னை, 1954.
5. இரா.பிரபாகரன் , மு.தமீம் மன்சூர்(ப.ஆ) தமிழ் உருதுமொழித் தொடர்பியல், உருதுத்துறை சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி, மேல் விசாரம், 2013
6. எம்.எம்.உவைசு, இசுலாமிய இலக்கியத்தின் திருச்சித் திருப்பம், இரண்டாவது அனைத்துலக இசுலாமியத் தமிழிலக்கியக் கருத்தரங்கு மாநாடு, இலங்கை, 1974 (தமிழாக்கம்;மஹதி) எஸ்.வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1962.
7. ஏ.எம்.சமீம் ,இசுலாமிய கலாச்சாரம், பாரி நிலையம்,சென்னை, 1997.
8. கவி.கா.மு.ஷெரீப்,வள்ளல் சீதக்காதி வரலாறு,அபிராமி நிலையம், சென்னை,1985.
9. " ", சீறாப்புராணச் சொற்பொழிவு, சீதக்காதி நூல் வெளியீட்டகம்,சென்னை, 1980.
10. கா.அப்துல் கபூர், இசுலாமிய இலக்கியம், இசுலாமிய ஆராய்ச்சி நிலையம், தக்கலை, 1978.
11. கா.சுப்பிரமணியபிள்ளை,மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும்,சாராதா பதிப்பகம்,சென்னை, 2008.
12. தக்கலை எம்.எசு.பஷீர்,தமிழ் இலக்கியத்தில் இசுலாத்தின் தாக்கம்,குமரன் பப்ளிசர்ஸ், சென்னை, 2004.
13. குலாம் ரசூல், இந்தியாவை ஆண்ட முஸ்லீம் மன்னர்கள், காழியார் புக் டிப்போ, தஞ்சாவூர், 1998.

14. சையத் ஃபைசு அஹமத் காதரி, உருது இலக்கியம் ஓர் அறிமுகம், நேஷனல் பப்ளிசர்ஸ், சென்னை, 2007.

சை. பாத்திமா பீ, நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ்-ஓர் ஆய்வு அமீனா வெளியீடு, சென்னை, 1990.

15. டி.எஸ்.சொக்கலிங்கம், முதுகுளத்தூர் பயங்கரம், கவின் நண்பர்கள், வ.புதுப்பட்டி,2008.

16. தி.மு.அப்துல் காதர் (தொ.ஆ) தமிழர் வாழ்வில் மொழியில் இலக்கியத்தில் இசுலாத்தின் தாக்கம் (ஆய்வுக் கோவை) இசுலாமியக் கல்லூரித் தமிழ்த்துறை வெளியீடு, வாணியம் பாடி, 2003.

17. தினகரன்,(தொகுப்பு-கா.இளம்பரிதி) முதுகுளத்தூர் கலவரம், யாழ்மை வெளியீடு,சென்னை,2006.

18. நாஞ்சில் ஷா,நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ், யுனிவர்சல் பப்ளிசர்ஸ்,சென்னை,1977.

19. பீ.மு.அஜ்மல்கான், இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை,1982.

20. ம.முகம்மது உவைஸ், இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு,தொகுதி 1,2, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1986,1990

21. மணவை முசுதபா (தொகுப்பு),சமண பௌத்த கிறித்தவ இசுலாமிய இலக்கியங்கள்,மீரா பப்ளிகேஷன், சென்னை,1997.

22. தமிழில் இசுலாமிய இலக்கிய வடிவங்கள், மீரா பப்ளிகேஷன்,சென்னை,1986.

23. மயிலை சீனி.வேங்கடசாமி,பழங்காலத் தமிழர் வாணிகம் (சங்ககாலம்) என்.சி.பி.எச், 1978.

24. மு.அப்துல் கறீம், இசுலாமும் சமய நல்லிணக்கமும்,ஆயிஷா பதிப்பகம், திண்டுக்கல்,1996.

25. " ", வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் ஆய்வுரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1987.

26. மு.சாயபு மரைக்காயர்,இசுலாமியர் தமிழ்த்தொண்டு, கங்கை புத்தக நிலையம்,சென்னை,1986.

27. மௌலானா சையித் அபுல் அஃலா மௌன தூதி,இதுதான் இசுலாம்,இசுலாமிய நிறுவனம் ட்ரசுட்,சென்னை,2007.

28. ராகுல சாங்கிருத்தியாயன், இசுலாமிய தத்துவ இயல், என்.சி.பி.எச், 1985.

29. றவூப்ஸெய்ன், இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, இப்றுசுல்தான் ஆய்வகம், திஹாரி (இலங்கை) 2012.

30. ஜே.எம்.சாலி., இசுலாமியத் தமிழ்க்காவியங்கள், நூர் பதிப்பகம், சென்னை, 1978.

31. மைக்கேல் ஹெச். ஹார்ட், நூறு பேர் (மொழிபெயர்ப்பு) மீரா பப்ளிகேசன் சென்னை,. 1998.

32. க.பா. அறவாணன், தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு, தமிழ்க் கோட்டம் சென்னை, 2009.

33. M.A. Nuhman., Sri lankan Muslims, Srilanka.

பின்னிணைப்பு-1

இந்நூலின் பல இடங்களில் அரபுச் சொற்கள் இடம் பெற்றிருப்பதால் அவற்றைப் புரிந்து கொள்ளும் முகமாகக் கீழ்க்கண்ட இச்சொற்பொருள் விளக்கம் தரப்பட்டது. இப்பட்டியல் சை. பாத்திமா பீ அவர்களின் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் - ஓர் ஆய்வு என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

அரபுச் சொற்கள் பொருள் விளக்கப் பட்டியல்

அரபுச்சொல்	பொருள்
அஹது	ஒருவன்
அத்தர்	வாசனை
அசுகாபி	நாயகத் தோழர்கள்
அல்அமீன்	நம்பிக்கைக்குரியவர்
அல்லாஹ்	இறைவன்
அல்லாஹீஅக்பர்	ஆண்டவனே பெரியவன்
அல்புறுக்கான்	இறைமறை
அலாமுகம்மது	முகம்மது மீது
அலிப்	அரபு முதல் எழுத்து
அலைகி வசல்லம்	அவர்கள் மீது சாந்தி உண்டாகுக
அவ்லியா	இறைநேயர்
அவ்வல்	ஆதி, தொடக்கம்
அவுவல் கவுதர்	சொர்கத்தின் சுனை ஓரம் இலந்தை மர நிழலில் அமைந்த தலம்
அப்வு	மன்னிக்கும் இறைவன்
அமல்	நடத்தை, செயல்
அறுஷ்	விண்வெளி
அன்சார்	உதவியாளர்
அஜமிகள்	அரபிகள் இல்லாதவர்கள்
அஷ் ஹது	நான் சாட்சி சொல்கிறேன்
அஹமத்தர்	புகழப் பெறுபவர்
அஹமதி	அகமது வம்சத்து வந்தவர்
ஆயத்	திருவாக்கியம்

ஆலம்	உலகம்
ஆலமா நபி	உலகையாளும் நபி
ஆலிம்	கற்றறிந்தோர், அறிஞர்
ஆஹிரத்	மறுமை
ஆஹிறு	கடைசி
இசாறு	டௌசர்
இத்ரீசு	முந்தைய நபி
இபாதத்	வணக்கம்
இமாம்	தலைவர்
இரவுப்	கருணை இறைவன்
இல்லல்லாஹ்	இறைவனைத் தவிர
இலத்தீப்	இறைவனுடைய ஒரு பெயர் பெருங்கொடையாளி
இறசுல்	இறைவனின் தூதர்
இஸ்லாம்	சாந்தி மார்க்கம்
ஈமான்	இறை நம்பிக்கை
உம்மி நபி	எழுதப் படிக்கத் தெரியாதவர்
உஹது	மதீனாவை அடுத்த போர்க்களம்
எக்கீன்	மரம்
ஒலிமார்	இறைநேயர்
கஃபா	மக்கத்தமைந்த இறை இல்லம்
ககுபு	குகை
கதுறா	அதிசயம்
கபன்	இறந்த உடல் பொதியும் துகில்
கபுர்	புதைக் குழி
கமர்	சந்திரன்
கய்யும்	நிலையான இறைவன்
கப்பா	இறைவனது ஒரு பெயர் விளி
கலம் லவுகு	பட்டோலையும் எழுதுகோலும் அடியார்களின் நன்மை தீமைகளும் எழுதப்படுவதற்குரியது
கல்பு	உள்ளம்

கலிபா	பிரதிநிதி
கலிமா	இறைவன் ஒருவன் அவனின் தூதர் நபி முகம்மது என மனமொழிகளால் ஒப்புக்கொள்வது
காசிம்	திருநபியின் செல்லப் பெயர்
காத்தமுன் நபி	இறுதி நபி
காமத்	தொழுகைக்கு முன்னிலை அழைப்பு
காமின்	இறைவனது பெயர்
கிந்தில்	மரம்
கிபுலா	தொழும் திசை
கியாமத்	உலக முடிபு நாள்
குதறத்	அதிசயம்
குத்துபு	தலைவர்; உயர்ந்தவர்
குபல்	ஒரு விக்ரகத்தின் பெயர்
குபிர்	இறைமறுப்பு
குருசு	விண்வெளி
குர்ஆன்	திருமறை
குறைஷி	வம் சல் குலம்
குன்	ஆகுக என்று இறைவன் கூற உயிரினங்கள் உண்டாயின
கூறாணி	அழகிய கண்களை உடையவர்
கையிறு	நிரப்பமானது
கௌசு	பரிசுத்தம்
சகாதத்	உயிர்த்தியாகி
சபர்	ஒரு மாதம்
சபுர்	பொறுமை
சமது	இறைவனின் ஒரு பெயர்
சல்லல்லாகு	சலவாத்
சலவாத்	நபிகளின் பேரில் புகழ்ச்சி சொலல்
சலாம்	வாழ்த்துக் கூறல் (இறைவனின் சாந்தியும் சமாதானமும் பொருந்துக)
சறகு	நெறி

சறுபந்து	தலைப்பாகை
ஸஃபா	மக்காவில் உள்ள ஒரு குன்று
சஹாபி	நாயக்கர் தோழர்கள்
சாலிஹ்	முந்தைய ஒரு நபி
சித்திக்	உண்மையாளர்
சிபத்து	தன்மை
சசுது	நெற்றி தரையில்பட வணங்குதல்
சுபானக் அல்லா	அல்லா நீ தூய்மையானவன்
சுருமா	கண்ணுக்குத் தீட்டும் மை
சுன்னத்	திருநபியின் நடத்தைகளைப் பின்பற்றுவது
சூபி	இறைஞானி
சூறத்துப்பகரா	மாடு ஆதி
சூறத்துப்நாரப்	மனித கதி
சூறா	அத்தியாயத்தின் தலைப்பு
சென்னத்	சுவர்க்கம்
சையது	மேன்மையாவர்
தக்பீர்	இறையின் பேர் உச்சரித்தல்
தபன்	புதைகுழியில் அமைத்தல்
தவ்வாபு	மன்னிப்பு வேண்டி
கஃபாவை	7முறை இடமாகச் சுற்றுதல்
தவஹீது	ஏகத்துவம்
தவுளத்	மூசாவுக்கு இரக்கப்பட்ட வேதம்
தாசல் ஹம்து	புகழ்
தாசிம்	ஒரு பெயர்
திக்கிர்	இறை நினைவு
திக்றகம்	இறை தியானம்
திர்ஹம்	வெள்ளி நாணயம்
தீன்	சன்மார்க்க நெறி
தீன் முஹிஜா	வெளியேறிச் செல்லுபவர்
தீனின் இஸ்லாம்	இஸ்லாம் மார்க்கம்
துத்துவு	தலைமை உயர்வு
துவா	இறைவேண்டல்-பிரார்த்தனை

தௌபு	பிழை பொறுக்க வேண்டல்
தௌர்	மக்காவின் தெற்கில் உள்ள குகை
நபிகள்	தீர்க்க தரிசிகள்
நபுசு	பேராசை
நவுபத்	ஒரு வாத்தியம்
நிஃமத்	அல்லாவின் அருட்கொடை
நுக்கத்	புள்ளி
நபுவத்	இறைத்தூதருக்கான அடையாளம்
நூர்	ஒளி
பசுர்	வைகறை நேரம்
பாங்கு	தொழுகைக்கு அழைக்கும் ஒளி
பிலால்	நபியின் தோழர்
பிறுதவுசு	சுவர்க்கம்
புத்துகான்	விக்கிரகங்களின் கருவறை
புத்துகுலம்	சாமி சிலைகள்
புர்ஹான்	குரான் ஏறிச் சென்றதாகக் கருதப்படும் ஒரு கழுதை
மஹர்	திருமணத்தின் போது கணவன் மனைவிக்கு அளிக்கும் கொடை
மஃரீபு	ஐவேளை தொழுகையில் நான்காவதாக அமைவது
மணஹா	பள்ளி வாசலில் உயர்வாக எழுதப்பெரும் கம்பம் போன்ற அமைப்பு
மலக்கு	வானவர்
மஹ்ஷரி	இறுதி தீர்ப்பு நாளின் திறந்த வெளி மைதானம்
மஸ்ஜித்	பள்ளி
மஸ்ஜித் நபவீ	மதீனாவில் உள்ள திருநபிகள் நாயக ஆலயம்
மாலிக்	இறைவனின் ஒரு பேர்
மிஃறாஜ்	நபிகள் நாயகத்தின் விண்ணேற்றம்

முத்தஹீன்	இறை அச்சப்பாடுடையவர்கள்
முறுஷல	இறைத்தூதர்
முஸ்லீம்	இறையடியான்
மூமின்	நல்லடியார்கள்
மௌல்விகள்	பண்டிதர்கள்
யாசிர்	தோழர்
யாஹ்பிபூ	நிலையான இறைவன்
ரசூல்	நபி இறை தூதர்
ரம்லான்	கடமையான் நோன்பு நோற்றற்குரிய மாதத்தின் பெயர்
ரஹ்மான்	அருளாளன்- இறைவன்
ரப்பில் ஆல் அமின்	முகம்மது புகழப்படுவர்
லௌகு	விதிப்பலகை
வஹீ	இறை அறிவிப்பு
றப்பு	காப்பாளன்
றூகுகள்	ஆன்மாக்கள் ஆவிகள்
ஹக்கன்	இறைவன்
ஹஜ்	புனிதப்பயணம்
ஹதீது	திருநபியின் சொற்கள்
ஹஜருல் அஸ்வத்	இறை ஆலயத்தின் கருப்புகல்
ஹம்	புகழ்
ஹாதி	வழி காட்டும் இறைவன்
ஹாபில்	குர்ஆனைப் பாடம் செய்தவர்
ஹீதா	இறைவன்
ஷபாயத்	இறைவனிடம் சிபாரிசு
ஜக்காத்	ஏழை வரி தேவைக்குப் போக எஞ்சியதில் நாற்பதில் ஒரு பங்கை ஈதல்
ஜன்னத்	சொர்க்கம்
ஜின்	அரக்க குணமுள்ள கணங்கள்
ஸீப்பாக்கள்	திண்ணைத் தோழர்கள்
ஹீதா	நேர் வழி


இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள்
மரபு இலக்.
நவீன இலக்.
காப்பியம்
சிற்றிலக்.
ஞானப் படை
பொதுக்.
மசலா
கிஸ்ஸா
நாமா
முனா ஜத்து
படைப் போர்
கொடி நாடகம்
திருமண வாழ்த்.
அரபுத் தமிழ்
தமிழ் இலக்கியங்கள்
பேர்சிய அராபிய மொழி இலக். வடிவங்கள்
தமிழ் வடிவங்கள்

உலக வரைபடம்


ஐரோப்பா
மங்கோலியா
கருங்கடல்
இத்தாலி
சீனா
கிரேக்கம் (யவனர்)
சவுதி அரேபியா
இந்தியா
வியட்நாம்
தமிழகம்
இலங்கை

பின்னிணைப்பு-2

இசுலாமிய காப்பியங்களில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருப்பது சீறாப்புராணமே. பெருமானாரின் வாழ்க்கை வரலாறு கூறும் இக்காப்பியம் விலாதத்து, நுபுவத்து, ஹிஜ்றத் என்னும் முப்பெரும் காண்டங்களைக் கொண்டு 5027 விருத்தப்பாக்களை கொண்டிருப்பது. சீறா, காப்பிய மரபு வழுவாத மா காவியமாகத் திகழ்கிறது. இசுலாமிய மார்க்க நெறிகளைப் படிப்போர் மனதில் பதியச் செய்கிறார் உமறுப்புலவர். ஒரே பாடலில் இசுலாமிய நெறிக்குரிய இலக்கணத்தை எடுத்துரைத்து விடுகிறார். "இறைவன் ஒருவன்" முகம்மது அவனுடைய திருத்தூதர் என்னும் பொருளை தருவது கலிமா என்னும் இசுலாமிய மூல மத்திரச்சொல். இவற்றை உறுதியாக நம்பி ஏற்பது ஈமான் என்னும் நம்பிக்கை. நம்பி ஏற்றதை நடைமுறைப்படுத்துவது 'அமல்' எனப்படும். இந்நற்செயல்களில் தவறாமல் ஈடுபட்டு வருவது இசுலாமிய நெறியில் சேர்தல் ஆகும்.

ஒருத்தன் நாயகன்; அவற்குரிய தூதெனும்
அருத்தமே உரைகலிமா, அந் நிண்ணயப்
பொருத்தம் ஈமான் நடை புனதைலாம் அமல்
திருத்தமே இவை-இசுலாமிற் சேர்தலே!

இசுலாமிய நெறியின் அடிப்படைத் தத்துவங்களை முழுமையாகவும் தெளிவாகவும் விளக்குகின்ற உமறுவின் இப்பாடலை சீறாப்புராணத்தின் முடி மணி எனலாம்.

காட்டில் வேடன் ஒருவனின் வலையில் பெண்மான் ஒன்று அகப்பட்டது. நபிகள் நாயகம் அம்மானைக் கண்டு வருத்தமுற்றார். அம்மான் நபிகளிடம் "யா றசூல்! இம்மலைச்சாரலில் என் ஆண்மானுடன் அண்மையில் ஈன்ற கன்றுடனும் இனிது வாழ்ந்தேன். ஒரு வேங்கையின் கர்ச்சனையைக் கேட்டு நாங்கள் அஞ்சி தறிகெட்டு சிதறினோம்! நான் இவ்வேடன் வலைப்பட்டேன்! இவ்வேடனால் கொல்லப்படுவது குறித்து நான் வருந்தவில்லை. அவனுடைய பசிப்பிணியைத் தீர்க்கும் வகையில் மரணமடைவது புண்ணியமுண்டு. ஆனால் என் ஆண்மான் எங்கு ஓடித் திரிந்ததோ! நானின்றி அது புல்லும் நீரும் அருந்தாது. மேலும் நான் கன்றையீன்று மூன்று நாட்களேயாயின. நான் சென்று என் கன்றைக் கண்டு

பாலூட்டி, என் கலையையும், கன்றையும் இனத்தோடுச் சேர்த்துவிட்டு திரும்ப வந்து இந்த வேடனுக்கு இறையாவேன்" என்றது. இது கேட்ட முகம்மது மானை விடுவிக்குமாறு வேடனிடம் கூற, அவனோ கல்லும் முள்ளும் தைக்க கடும்பாடுபட்ட இதனையா விடுவேன்! சென்ற மான் திரும்பி வருவதும் உண்டா என்றான். பெருமானாரோ இம்மான் வராவிட்டால் நான் உனக்கு இரண்டு மான் தருவேன். அதுவரை நான் இம்மானுக்கு பிணையாக நிற்பேன் என்றார். மானை வேடன் அவிழ்த்து விட்டான். அது ஓடோடி சென்று தன் கலையைக் கண்டது: குட்டிக்கு வயிறார பாலூட்டியபின் தான் வேடனிடம் செல்ல வேண்டியிருப்பதைக் கூறியது. தப்பிய நீ மீண்டும் போவதா கூடாது என இன மான்கள் தடுத்தன: எனக்காக ஒருவர் பிணை நிற்கிறார் அவரை ஏமாற்றின் கொடிய நாகம்தான் எனக்குக் கிட்டும், எனச் சொல்லியது. அப்பெண்மான் திரும்பியபோது அதன் கன்றும் தானும் உடன் வருவதே முறையென வந்தது. நபிகள் நாயகம் "இதோ பார்! ஒன்றுக்கு இரண்டு மான்கள் உன்னிடம் வருவதை" என்றார். வேடன் மனம் திருந்தி ஈமான் கொண்டு இசுலாத்தில் சேர்ந்தான். இதனை உமறு

தேனைக் குங்குமங்கள் சிந்திச் செழித்ததின் புயத்து வள்ளல்
கானைக்குவ் விடத்திற் காட்டும் கமல மென் பதத்தைப்
போற்றித்
தானைக்கும் பதிக்கும் யானே தலைவனென் பவர் போல்
வேடன்
மானைக்கொண் டுவரப்போய் ஈமானைக் கொண் டகத்திற்
புக்கான்

வேடன் "மானைக் கொண்டு வரப்போய் ஈமானைக் கொண்டு வந்தான்" என்பது நயம் நிறைந்தது. இவ்வாறு தொட்ட இடமெல்லாம் இனிக்கும் சிறப்புப் பெற்றது சீறாப்புராணம். (சமண பௌத்த கிருஸ்தவ இசுலாமிய இலக்கியங்கள் என்ற நூலில் சிலம்பொலி சு. செல்லப்பனாரின் இசுலாமிய இலக்கியம் எனும் கட்டுரையில் இருந்து)

மேல்விசாரம் சி.அப்துல் ஹக்கீம் கல்லூரி முத்தமிழ் விழாவில்
பாராட்டுப் பெறுதல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

		ரூ. பை.
1.	சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு	160.00
2.	பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள்	55.00
3.	பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள்	75.00
4.	தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம்	70.00
5.	கிறித்தவக் காப்பியங்கள்	225.00
6.	தமிழ் நாளிதழ்களின் மொழிநடை	70.00
7.	சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும்	50.00
8.	குலோத்துங்கனின் கவிதை வளம்	60.00
9.	தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து)	40.00
10.	தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள்	50.00
11.	அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள்	60.00
12.	பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு	65.00
13.	பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும்	50.00
14.	மேலைநாட்டறிஞர்களின் தமிழ்த் தொண்டு	175.00
15.	பெரியார் என்னும் பேரொளி	60.00
16.	சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)	70.00
17.	புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்	100.00
18.	உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி 1)	450.00
19.	செவ்விலக்கியச் சாரம்	70.00
20.	திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்	165.00

வெ.எண் : 763
தமிழ் இலக்கிய மரபுகள்
விலை : ₹ 60.00